காப்பிய மன்னர்கள்



தி ஸ்டாண்டர்ட் ஏஜன்ஸீஸ் (மதராஸ்)
பிரைவேட் லிமிடெட்
சென்னை-17.

காப்பிய மன்னர்கள்

வித்துவான் T. S. கங்காதரன், M.A.,
தலைமைத் தமிழாசிரியர்,
பாரதி வித்யாலய உயர்நிலைப்பள்ளி,
சேலம்-7.

தி ஸ்டாண்டர்ட் ஏஜென்ஸீஸ்
(மதராஸ்) பிரைவேட் லிமிடெட்.,
21, இராமேஸ்வரன் ரோடு,
தி. நகர், சென்னை-17.

 1967 [விலை ரூ. 1.

First Edition : December 1966.
Reprinted (Revised) May 1967.
,, June 1967.

Approved by the Madras Text-Book Committee–vide Fort St. George Gazette dated 17—5—1967 Page 47.

Paper used :—10·9 Kg. Double Crown White Printing.

Printed at Sree Krishna Printers, Madras-1.

நூன் முகம்

அரசியலாரின் அண்மைப் பாடத்திட்டத்திற்கமைய, உயர்நிலை வகுப்புக்களுக்கு உதவும் வகையில் "காப்பிய மன்னர்கள்" என்னுமித் துணைப்பாட நூல் இயன்றுள்ளது. கம்பராமாயணம், வில்லி பாரதம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மனோன்மணீயம் என்னும் காப்பியங்களினின்று செய்திகள் இலக்கிய நயம் சோராமல் எளிய நடையில் கதைப்போக்காக எழுதப் பெற்றுள்ளன.

காப்பியத் தலைமக்கள் திறம் போலவே, ஏனைய கயமாந்தர் தம் வினைத்திறமும் காப்பியத்துள் நீக்க முடியாவியைபு பெற்றிருத்தல் தெளிவு. இவ்விழி மாந்தர்தம் முரண்பட்ட பண்பு நலன்கள் இறுதிக்கண் வீழ்ச்சிக்கே வித்தாவன. ஆதலின், கயமாந்தர் தம் தீய பண்புகளைச் சாராத தலைமக்கள் தம் நேரிய குண நலன்களை மாணவர் குறிக்கொண்டொழுக இந்நூல் துணை செய்ய வல்லது.

சேலம்,
30-12-66

ஆசிரியன்

பொருளடக்கம்

ம ந் த ரை

முதுமையின் தோற்றம்

"மன்னனே, பூமியை மகனுக்கு ஈந்துவிட்டு நீ தவம்புரியும் காலம் வந்துற்றது" எனக் காதினடியில் வந்து இரகசியம் சொல்லுவது போல ஒரு நரைமயிர் தோன்றியிருப்பதைத் தசரதன் கண்ணுடியிற் கண்டான். 'இராவணன் செய்த தீமையே ஒரு நரைமயிராய் அணுகிற்று' என்னுமாறு அது வந்தடுத்தது! மன்னவன் அமைச்சரவை கூட்டி, அவரோடு இராமனுக்கு முடி சூட்டுவது பற்றிப் பலவாறு சூழலுற்ருன்.

யாது நும் கருத்து ?

"என் முன்னேரது செய்கையில் சிறிதும் வழுவாமல் வையத்தை அறுபதினுயிரம் ஆண்டுகள் ஆண்டுவிட்டேன். இதுவரை ஏனைய மன்னுயிர்க்கு வேண்டுவன வற்றைச் செய்து வாழ்ந்த யான் இனி என்னுயிர்க்கும் உறுதியெண்ணலானேன். இவ்வாட்சிப் பாரத்தை இனிச் சிறிதும் சுமக்க ஆற்றேனுயினேன். அசுரர்களின் பத்துத் தேர்களையும் வென்றுள்ள எனக்கு, மனம் எனும் பேய் ஏறிய ஐம்பொறிகளாகிய தேர்கள் ஐந்தையும் வெல்லுவது அருமையாகுமோ ? உங்களை யான் அமைச்சராக உடைய காரணத்தால் உலகம் யாவையும் செம்மையாகக் காத்தேன் ; நல்லறமும் செய்தேன். இம்மையில் எனக்கு நல்லிசையைப் படைத்த நீர் மறுமையிலும் எனக்குத் துணை செய்ய வேண்டும். என் அருமை மகன் இராமனுக்குச் சீதையாம் திருமகளது

மணத்தினைத் தெரியக்கண்டு மகிழ்ந்தேன்; இனி, நிலமாது என்னும் ஒருமகளது மணத்தையும் கண்டு மகிழக் கருதியுள்ளேன். ஆதலால் இராமனுக்கு அரசை யீந்துவிட்டு இப்பிறப்பினை நீக்க வேண்டி வனத்தை எய்த விருக்கிறேன். இச்செய்திபற்றி நும் கருத்து யாது?" என்று தசரதன் அமைச்சரை வினவினான். இராமன் முடிசூட்டு விழாவிற்கு மகிழ்ந்தனராயினும், மன்னன் தம்மை விட்டுப் பிரியும் நிலைக்கு வருந்திய அமைச்சர்கள் "இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தார்"; ஆயினும் வேறு வகையில்லாமையால் மன்னன் மொழிக்கு இசைந்தனர்.

யாவரே இராமனைப் பெற்றார்?

குருகுல வசிட்டன் தசரதனை நோக்கி, "மன்னவ! நின் குலமுன்னோர்கள் பலரும் நிலத்தைப் பல காலமாண்டு பெருமை பெற்றனர். ஆயினும் யாரே இராமனைப் பெற்றார்? நின் கருத்துத் தக்கது; தருமமிக்கது. 'தருமமூர்த்தியே வந்தவதரித்தான்' என்பதன்றி வேறு என்ன சொல்வது? மும்மூர்த்திகளும் ஒன்றும் முதலோன் அவன். உன்னுயிர்க் குறுதி செய்யுமாறு போல மன்னுயிர்க் கெல்லாம் அவன் உறுதி செய்பவன். வேதியர் முதலோரெல்லாரும் நின்குலமைந்தனை நல்லறப் பயன் என மதித்திருப்பர். குடிமக்கட்கு அவன்பாலுள்ள அன்பு தான் என்னே! பெரும்புகழ்ச் சானகியோ பூமிதேவி, மலர்மகள், கலைமகள், மலைமகள் எல்லாரினும் நல்லவள். இராமனோ, அந்நல்லாளுடைய கண்களைவிட நல்லவன். கற்றவரும் மற்றவரும் தாம் பருகும் நீரைக் காட்டிலும், தம் உயிரைக் காட்டினும் அவனையே சிறந்தோனாக

மதிப்பர் ! மக்கள், தேவர், மற்றேர் என்னுமிவர்களுடைய துயரங்களை நீக்கியளிப்பவர் இராமனைவிடச் சிறந்தவர் இல்லை. ஆதலின் அவன் முடிசூட, நினக்கு அடுத்த கருமம் புனிதமாதவம் செய்தலேயன்றி வேறென்றில்லை'' என்று அறிவுறுத்தான். முனிவன் வார்த்தை கேட்டுத் தசரதன் மகனைப் பெற்ற அன்றைவிட மகிழ்ந்தான்; சனகன் வில்லை அவன் ஒடித்த நாளைவிட உவந்தான்; பரசுராமன் தோல்வியுற்ற அந்நாளிற் காட்டினும் களித்தான். பிற மந்திரிகளது கருத்தைக் குறிப்பாலுணர்ந்து சுமந்திரன் சொல்லலுற்ருன்.

நினக்கு உகந்தது செய்க

"இராமனுக்கு முடிசூட்டு நிகழும் என மகிழும் எம்மனத்தை 'நீ துறவு பூண்பாய்' என்னும் சொல் சுடுகிறது. ஆயினும் ஐய! தொல்லோர் சென்ற நெறியை மறப்பது முறையன்று. என்னே அறம் செய்யும் கொடுமை! பிற அரசர்களுக்கும், நாட்டு மக்களுக்கும், அமைச்சர்களுக்கும், முனிவர்களுக்கும் உள்ளம் மகிழும் வகை நின் புதல்வனை முறைப்பட அரசனுக்கிப் பின் நினக்கு உகந்ததைச் செய்க" என்று சுமந்திரன் உரைப்ப, மன்னவனும் 'நன்று நவின்ருய்' என மகிழ்ந்தான்; இராமனையழைத்துவர அவனை விடுத்தான். சுமந்திரனும் இராமன் திருமாளிகை புகுந்தான்.

நல்குவது ஒன்று

பெண்ணின் இன்னமுது போன்ற சீதையோடு இளவல் இலக்குவனும் அருகேயிருப்ப அண்ணல் இராமன் தன் மாளிகைக்கண் இருந்தான். அவ்வமைதி

யினழகு அரிய தேனைப் போன்றிருக்கவே, தன் கண்களும் மனமும் அத்தேனைப் பருகும் வண்டு போல மகிழ்ச்சி மிகக் கண்டான் சுமந்திரன்; தந்தையின் ஏவலையுரைத்தான். கொண்டல் வண்ணனும் தன் தம்பியோடு கொடித்தேர்மிசை ஏறினன்; தந்தை கோயிலை எய்தி முனிவனை வணங்கித் தந்தையின் பாதமலரைப் பணிந்தான். தசரதன் தன் மைந்தனை மார்பொடுந் தழுவிக் கொண்டான்; அவனுடைய திண்தோள்களையும் திருமருவிய மார்பையும் தன் தோள் மார்பு கொண்டு அளந்து, நிலத்தைத் தாங்குதற்கேற்ற மைந்தனது நிலையினை அளவிட முயன்றன். "நீண்ட தோளினய்! நின்னைப் பெற்ற யான் நின்னிடத்து வேண்டுவது, நீ நல்கத்தக்கது, ஒன்றுள்ளது" என்று உரைப்பானுயினன்:

தளர்வது தகுமோ?

"ஐய! மிக வருந்தினேன்காண். மூப்புத்துயர் மிகுந்து விட்டது. இந்நில வாட்சிப் பாரத்தைத் துறந்து யான் உய்யப் போகவேண்டும். அதற்குரிய நெறி யான் புகுமாறு நீ உதவ வேண்டும். மைந்தரைப் பெறுவது துயர் நீங்கி இருமைப் பயனையும் பெறுவதற்கே யன்றே? தருமம் போன்ற நின்னைப் பெற்ற யான் தளர்வது தகுவதோ? மைந்த! நம்குல முன்னோராம் வேந்தர்கள், தம் முதுமையில் தம் மக்கட்கு நில ஆட்சியைத் தந்து முப்பகையையும் நீக்கி உய்ந்து போயினர். நின்னை அரிதாகப் பெற்ற யான் இம்முதுமையிலும் அரசியல் துன்பத்தில் உழப்பது நன்றே? அவ்வருத்தம் நீங்கி வீடுபேறு எய்தும் ஆசை எனக்குள்ளது. ஐய!

அதனை அருளிடவேண்டும். தம் சொல்லை மறுக்காத தனயரைப் பெற்றவரே ஒருதலையாகத் துயரம் நீங்கியவர். இவ்வாறுதலின், முடிபுனைந்து நல்லறம் பாலிக்க நினைப் பாயாக; நின்னிடத்தே யான் வேண்டிப் பெறுவது இதுவே'' என்றான் தந்தை.

மறுப்பாரும் உளரோ ?

தந்தை அவ்வாறு உரைப்பவே, தாமரைக் கண்ணன் 'நிலம் பெற்றோம்' என மகிழ்ச்சியும் உற்றிலன்; ஆட்சித் துயர் கருதி மறுக்கும் மனநிலையும் பெற்றிலன். 'அரசன் ஏவியதைச் செய்வதே எனக்கு உறுதி' என்று அப்பணி யில் தலைநின்றான். மன்னவன் இராமனுக்கு முடிசூட்டக் கருதியமை கேட்டு வந்திருந்த மன்னரெல்லாரும் பேரு வகை எய்தினர்; "தானமும் தருமமும் ஒழுக்கமும் ஞானமும் பெரியோரை வழிபடும் நன்மையும் முதலான எல்லாக் குணங்களும் இயைந்த நின்மகனுக்கு அரசச் செல்வமும் வந்தியையத்தக்கதே. ஊருணி நிறையவும், பழுமரம் பழுக்கவும், மழை பெய்யவும், நதி நீர் பெருகவும் வேண்டாவென்று மறுப்பாரும் உளரோ? நினக்குப் போலவே மன்னுயிர்க்கெல்லாம் அன்புடையான் இராமன்; அவையும் அவன்பால் அன்புடையன" என்று புகழ்ந்து மொழிந்தனர். தசரதன் மகிழ்வால் கண்ணீர் பெருக்கி, "இவன் நும் மகனே. இவனை அடைக்கல மாகக் கொண்டு நோக்குமின்!" என்று ஓம்படை சாற்றினான்.

கோசலை உவகை

இராமன் முடிபுனையும் செய்தியை மங்கையர் நால்வர் கோசலைக்கு அறிவித்தனர். அது கேட்டதும்,

'மைந்தன் ஆட்சித்திரு எய்துவான்' என்று அன்னை மனத்தில் எழுந்த உவகைக் கடலை 'மன்னன் துறப்பான்' என்னும் அச்சம் வடவைத் தீயாக வற்றுவித்தது. ஆயினும் தேவி உவகை சொன்ன தாதியர்க்கு நன்னிதியம் பரிசிலளித்தாள்; சுமித்திரையோடு சென்று திருமாலை வணங்கினாள்; இராமனுக்கு அருள் புரிய வேண்டினாள்; முனிவர்கட்குப் பலவகைத் தானங்களைப் புரிந்தாள்; நோன்புகள் பல மேற்கொள்ளலுற்றாள்:

நகரணி

கணித மக்கள் முடிசூட்டுவதற்குரிய நாள் குறித்தனர். வசிட்டன் இராமனையெய்தி அரசர்க்கு வேண்டும் உறுதிகள் பலவும் உரைத்தான்; முடிபுனைதற்கு முன்னாள் செய்ய வேண்டும் சடங்குகளையும் விதிப்படி இயற்றுவித்தான். அயோத்திநகர் அலங்கரிக்கப்படலாயிற்று. செங்கதிரவனைத் திருத்துமாறு போலவும், திருமாலின் மார்பிற் கிடந்த கௌத்துப மணியைச் சாணை பிடிக்குமாறு போலவும் அழகுக்கு அழகு செய்து அணி நகரைப் பலவாறு அலங்கரித்தனர் அன்புடைய நகர மாந்தர்.

கூனி தோன்றினாள்!

இவ்வகையால் நகர் அணியுற்றுப் பொன்னகரைப் போலப் பொலிவுறுங் காலத்தே கைகேயியின் முதிய தோழியாகிய கூனி மந்தரை வெளியே வந்து பார்த்தாள். 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை' ஒரு வடிவு கொண்டாற் போல அவள் தோன்றினாள்! இராமன் முடிபுனைதலை அவள் அறியலுற்றாள்; மனம் சினமூண்டு துடித்தாள்; வேதனையுற்றாள்; கண்கள் வழியே கனலைக் கக்கினாள்; பேச்சுத் தடுமாறினாள்; மூன்றுலகுக்குமே ஓர்

இடுக்கண் விளைப்பவள் ஆனாள்; பண்டு இராமன் வில்லால் மண்ணுருண்டையைத் தன் மேல் வீசித் தான் கொண்டு வரும் நீர்க்குடத்தை வீழச் செய்து எல்லார்கும் நகைப்பிற்கு இடம் செய்ததை இதுபோது நினைத்துப் பழிவாங்கும் தருணம் அடுத்ததை யுணர்ந்து கொண்டாள்; தன் தலைவி கைகேயியின் மாளிகையை விரைவில் எய்தலுற்றாள்; பாற்கடல் அலை நடுவே பவளக்கொடி போலக் கடைக்கண் கருணை பொழியப் படுத்துக் கிடந்த கைகேயியை நண்ணினாள். தாமரை போன்ற அவளுடைய செம்பொற் பாதங்களைக் காலக் கோள் போன்ற அக்கொடியவள் தீண்டினாள். தீண்டவே, விழிப்புற்றாள் அத்தெய்வக் கற்பு மகள்; ஆயின் துயில் முற்ற நீங்கப் பெற்றாளில்லை. அவ்வளவில் மந்தரை, மூண்டெழும் பெரும் பழியைச் சூட்டுதற்குரிய பாவம் தூண்டுதலால் கட்டுரையொன்று சொல்லலுற்றாள்:

இராமனைப் பயந்த எனக்கு இடருண்டாகுமோ!

"விடமிக்க கொடிய பாம்பாகிய இராகு தன்னை விழுங்க வரும்போதும் தன்மை மாறாது ஒளி வீசுகின்ற மதியம் போல, பேரிடர் நின்னைப் பிணிக்க வரும் இக் காலத்தும் அது குறித்து வருத்தமுறாது இனிதாக உறங்குகின்றாயே!" என்று கொடியவள் கூறவும், அத்தீயமொழியைக் கேட்டாள் கைகேயி; "பகையை வெல்லும் ஆற்றல் மிக்க என் மைந்தர்கள் நலமாகவுள்ளனர். அவர்கள் தத்தம் துறைகளில் அறம் வழுவுதலில்லை. இனி எவ்விடர் என்னை அடுப்பது? புதல்வரைப் பெறுவதால் யாவரும் துயரம் நீங்கி நன்மையே எய்துவர். இப்புவிக்கெல்லாம் வேதம் போன்ற இராமனைப் பெற்ற எனக்கு

இடர் உண்டாமோ ?" என்று இயம்பினுள். என்னே கைகேயியின் தூய மனம்! அவ்வன்புரை கேட்டதும் கொடியாள், "வீழ்ந்தது நின் நலம்; செல்வமும் வீழ்ந்தது; கோசலை தன் மதியினுல் வாழ்ந்தனள்" என்று பேதம் செய்யத் தொடங்குவாளாயினுள்.

வேற்றுமை உற்றிலள்

தீவினைக் கூனி இவ்வாறு செப்பவே, கேகயன் மகள் "என்ன கூறினை ! என் கணவன் மன்னர் மன்னன்! புதல்வனும் பரவரிய புகழ் படைத்த பரதன். இதனினும் மேலாக அவளுக்கு எய்திய வாழ்வு என் ?" என்று வினவினுள். "ஆடவர்கள் 'ஆண்மை மாசுற்றது' என்று நகைக்கும் வண்ணம் தாடகைஎன்னும் தையலைக்கொன்ற இராமன் நாளை முடிசூடுவான். இதுவே வாழ்வு" என்று சுட்டினுள் கொடியவள். அது கேட்ட கைகேயியின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவள் உள்ளமும் கோசலை அறிவும் ஒத்திருந்தன. இருவர் உள்ளத்தும் தசரதன் ஒத்த அன்பு நிலையில் புகுந்திருந்தான் அல்லனே ! ஆதலின் கைகேயி வேற்றுமை கொண்டாளில்லை ; அன்புக்கடல் ஆர்த்தெழ மதிமுகம் ஒளி செய்ய உவகைமிக்கு ஒரு மணிமாலையைத் தோழிக்குப் பரிசில் நீட்டினுள் ! கொடிய கூனி அதனைப் பெற்றுக் கொள்வாளோ ? தெழித்தாள் ; உரப்பினுள் ; தீயுக விழித்தாள் ; வைதாள்; பெருமூச்செறிந்தாள்; தன் கோலத்தை அழித்தாள்; அழுதாள்; அம் முத்தாரத்தை எறிந்து நிலத்தைக் குழித்தாள் ; வெகுண்டு நோக்கி வெம்மொழிகளை விளம்பலுற்ருள் :

'எந்தையே பரதா!'

"கேகயன் மகளே! நீ பேதை. மகன் பரதனோடு நீ இங்கே பெருந்துயர்ப்படுக. இனி உன் மாற்றவள் (கோசலை) தோழியர்க்கு நான் அடிமை செய்யப் பொறுக்க மாட்டேன். சீதையும் இராமனும் சிங்காதனத்தில் வீற்றிருப்பர். நின் மகன் அவமாக வெறு நிலத்தில் இருப்பான். இந்நிலையில் நீ உவப்பது என்? நினக்கு உறுதிதான் யாது? தனக்குறுதி நாடிக்கொள்ளக் கோசலை மறந்தாளில்லை. ஆதலின் அவள் மகனும் ஆட்சி பெற்றுச் சிறந்தான். பரதனோ திரு நீங்கினான். அவன் இறந்தானுமில்லையே! நல்வாழ்வோடு இருந்தானு மில்லையே! நீ பெற்றமையால் இனி என்ன செய்து அவன் துயரம் நீங்குவான்? அவன் பிறந்தும் பிறந் திலனே! தன் தம்பி இலக்குவனோடு இப்புவியெல்லாம் இவ்விராமனே ஆள்வானாயின், பரதனையும் அவன் தம்பி சத்துருக்கனனையும் எல்லையற்ற காலம் நாடு நீங்கி வனத்தில் தவம் செய்யுமாறு விடுத்தல் நன்று. நிலத்தை யாண்ட மன்னரது வரிசையில் தானும் ஒருவனாக எண்ணப்படப் பரதன் பிறக்கவில்லை. அவன் இறத்தல் நன்று. மன்னன் தசரதன் கேகய நாட்டிற்குப் பரதனை விடுத்த காரணமும் எனக்கு இப்பொழுதுதான் புலப்படு கிறது. மனத்தில் பேதமுற்று மன்னன் இராமனுக்கு நிலத்தை அளித்தான். அதனால் தந்தையும் கொடியன்; நற்றாய் இவளும் தீயவள். எந்தையே! பரதா! நீ இனி என் செய்வாயப்பா! கைகேயி! அரச மரபிற் பிறந்து அரசர் மனையில் வளர்ந்து அரசரில்லில் வாழ்க்கைப் பட்டுப் பேரரசியான நீ பெருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய். யான் பல சொல்லியும் கேட்கின்றாயல்லை.

நினக்கு உணர்வேயில்லை போலும்! பரதனின் நற்பண்புகள்தாம் எத்தகையன! அவனுடைய கல்வியும், இளமையும், ஆற்றலும், வில்வித்தை நலனும், அழகும், வீரமும், பிற குணநலன்களும் புல்லிடை அமுது உகுத்தாற் போலும் வீணே போகின்றன. என்ன செய்வேன்?"

பிழை பொறுத்தேன்

பேசிய வாய் கசப்புறுமாறு பேய் மகள் மந்தரை இவ்வெம்மொழிகளை வழங்கினுள். எரியும் தீயில் நெய்யைச் சொரிந்தாற் போலக் கைகேசியின் சினத்தை அவை மூட்டின. கோபத்தால் கண்கள் சிவப்பக் கேகயன் திருமகள் அவளுக்குச் செப்பலுற்றுள் :

"கொடியோய்! நான் புகுந்த குலம் கதிரவன் மரபு. இம்மரபினர் உயிரும் பொருளும் தவறினும் தம் நேர்மை தவருர். நான் பிறந்த குலத்து மரபும் பெருந்தூய்மையுடையது. இவ்விரு குலமும் பழுதுறும் வகை, மூத்த மகனிருப்ப இளையவனுக்கு முடி புனையுமாறு நின் புலைச் சிந்தையால் நினைத்து யாது சொல்லிவிட்டாய்? நீ எனக்குத்தான் நல்லவளோ? அன்றி என் மகன் பரதனுக்குத் தான் நல்லவளோ? அல்லால், தருமமே நோக்குமிடத்து உனக்கேதான் நல்லவளோ? இல்லை, இல்லை. ஏதோ ஊழ்வினை தூண்ட என்னையடுத்து நின் மனத்துக்கு உகந்தவை யாவும் சொல்லி நின்றுய். மதியிலா மனத்தோய்! புகழே இவ்வுலகிற் பெறலாகும் எச்சம். குணம் மாறினும், நீதி மாறினும் நன்னெறி மாறினும் பழுதற்ற வீரம் மாறினும் தம் குலத்தின் வரன் முறை தவறுதல் வழக்கோ? என் எதிரில் நில்லாது போ. நினது புன்மொழி நாவைச் சிதைக்காமல் பிழை பொறுத்தேன்.

நீதியும் நெறிமுறையும் அல்லாதவற்றை நினைத்தாய். அறிவிலி! இனி வாயை மூடு. பிறர் அறியின் பெருந் துன்பமாம்" என்று கடிந்து கொண்டாள்.

உறுதியுணர்த்தத் தவறேன்

சூழ்வினை மந்தரை போவாள் அல்லள். விடத்தை நீக்க முற்பட்டாலும் அது தீராது வருத்துதல் போல, அவள் அகலவில்லை; "வஞ்சியே! என் தஞ்சமே! நீ எத்துணைச் சீறினும் நினக்கு உறுதிப்பொருள் உணர்த் தத் தவறேன்" என்று அன்னை கைகேயியின் அடிகளில் வீழ்ந்து பின்னும் பல அறிவுறுத்தலானாள்:

"மூத்தவனுக்கு அரசு முறையுரித்து என்றாயே! மூத்த மன்னன் தசரதன் இருப்ப, இளையோன் இராமன் முடிபுனைதல் எவ்வாறு ஏற்கும்? அஃது ஏற்குமாயின், அவனைவிட இளைய பரதனுக்கும் இம்முறை இசையு மன்றோ? அது போகட்டும். அருளுடைய அருந்தவத்தோ ராயினும், அருஞ்செல்வம் பெற்றபின் அவர்க்கும் மனம் வேறுபடும். ஆதலின் இராமன் முதலியோர் இதுவரை உங்களைத் துன்புறுத்தாவிடினும், இனி இடையறாமல் இடர் செய்து உங்கள் மனத்தை வருத்துவரே! இராமன் அரசாள்வானாயின் நிலமெல்லாம் கோசலைக்கே உரியன. நின் புதல்வனுக்கும் நினக்கும் அவளே பார்த்து உதவிய பொருளன்றி வேறு யாது உரிமை கொண்டாடவுள்ளது? அதுவும் கிடக்க. வறுமைத்துயரால் நின்னை வந்து இரந்தவர்க்கு உதவ நீ இனி என்ன செய்வாய்? கோசலையை வேண்டிப் பொருள் பெற்று ஈவாயோ? அதற்கு இயலாமை பற்றி நாணுவாயோ? நெஞ்சு வருந்தி வருந்தி, நோயால் மாண்டு போவாயோ?

அன்றி, இல்லையென்றுதான் மறுப்பாயோ? இவை யெல்லாம் ஒழிக. இதனைக் கேள்: இனிச் சில நாளில் உன் தந்தையோ, தாயோ, உறவினரோ, நின் குலத் தோர் பிறரோ வறுமையுற்று அதனைப் போக்கிக்கொள்ள நின்னை வந்தடைவாராயின், அவர்கள் இங்குக் காண்பது என்ன? உன் வாழ்வையா? நின் மாற்றவள் செல்வத் தையே அன்றோ! ஏன் மனம் திகைக்கிறாய்? ஆராய்ந்து பார். நின் கணவன் தசரதனை அஞ்சியே இராமன் மாமனும் சனகன் உன் தந்தையைப் போரில் வென் றானில்லை. இனி இராமன் அரசேற்பின், உன் தந்தைக்கும் நல்வாழ்வுண்டோ! பேதாய்! உன்னைவிடப் பழிபடப் பிறந்தார் யாரே உளர்? உன் தந்தைக்குப் பெரும் பகைவர் பலர் உளர். அவரெல்லாம் உன் தந்தையோடு போரிட்டால் இந்நாட்டவர் சென்று உதவாரே! உதவா ராயின், அவன் எவ்வாறு வெற்றிபெற இயலும்? சுற்றமும் கெடுமாறு சுடு துயர்க்கடலில் வீழத் துணிந் தாயே! உன் அரும் புதல்வனை அரசு பெறாமல் கெடுத்து விட்டாய். இராமனுக்கு வந்துற்ற அவ்வாட்சித் திரு அவன் குலத்துக் கோமைந்தர்க்கும், அவனையடுத்த தம்பிக்குமே உரியதாயிற்று."

'நல்லருள் துறந்தனள்'

தீய மந்தரையின் மயக்க 'அறிவுரை' முடிவுற்றது. 'உறுதி' என இறுதியே செய்துவிட்டாள் இழிந்தவள். இப்போதனையால் தூய தேவியின் சிந்தையும் திரிந்து விட்டதே! இத்துணைக்காலமும் மகன் இராமன்பால் மாசற்ற அன்பு கொண்ட அன்னையின் மனத்தைச் சிறிது நேரம் தீயவள் நிகழ்த்திய சொல்லாற்றல் சிதைக்க

முடியுமோ? முடியாது, ஒரு தலையாக முடியாது. உண்மையில் மந்தரை தீவினைக் கருத்தா அல்லள்; அவள் ஒரு கருவியே. தேவர்கள்தம் மாயத்தாலும், அவர்கள் பெற்றுள்ள நல்வரம் தவருததாலும், அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும் தேவியது தூய சிந்தனை திரிவுற்றது. தாம் அழிந்துபட அரக்கர் செய்த பாவமும், தாம் வாழ்வு பெறத் தேவரும் முனிவரும் செய்த அறமும் ஏவுதலால் அருள் அன்னை கைகேயி அவ்வருள் துறந்தாள். "அவளது இரக்கமின்மையும் ஒருவகையால் நலமாயிற்று! அதனுலன்றே, இன்று உலகங்கள் இராமனது பரந்த நற்குணக் கடலில் படிந்து திளைத்து அவ்வமுதினைப் பருகுகின்றன!" என்று வியக்கிருன் கம்பன்.

"அரககர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்க மின்மையன் ரேஇவ் வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே"

நீயே பரதன் தாய்

கூனியை விரும்பி நோக்கினுள் கைகேயி; 'என்பால் விருப்பம் கொண்டுளாய்; என் மகனிடத்தும் அன்புடையாய். அவன் முடிபுனைதற்கு ஏற்ற உபாயம் கூறுக' என்று வேண்டினுள். மந்தரை மகிழ்வு பூத்தாள்; 'என் தோழி நல்லவள்; என் துணைவி வல்லவள்' என்று புகழ்ந்தாள்; அவளடி தொழுதாள்; 'நின் மகனுக்கு உலகம் ஏழையும் ஆக்குவேன்' என்றுறுதி கூறினுள்; "அன்று சம்பராசுரனேடு நின் கணவன் தசரதன் அமர் செய்து அவனை அழித்தபோது நினக்கு அவன் அருளிய

வரமிரண்டையும் இப்போது கொள்வாயாக. ஒரு வரத்தால் நின் மகனுக்கு அரசு கொள்க; மற்றொன்றால் இராமனை ஏழிரண்டு ஆண்டுகள் வனம் போக்குக. ஆட்சி நின் மகனுக்குக் கிடைக்க இதுவே உபாயம்" என்று அறிவுறுத்தாள். உரைத்த கூனியைக் கைகேயி உவந்து தழுவிப்பல பரிசில் நல்கி, "உலகமெல்லாம் என் மகனுக்கு அளித்த நீயே அவனுக்குத் தாய்! நன்று சொன்னாய்; நீ அறிவுறுத்தவாறே வரம் பெறுவேன்; பெற இயலாவிடில், என்னுயிர் துறப்பேன்" என்று துணிவு கூறினாள்.

சிதைந்தது கோலம்

கூனி போன பின்னர், கேகயன் மகள் தன் மலர்ப் படுக்கையினின்று இழிந்தாள்; கூந்தலிற் செருகிய மாலையைச் சிதைத்தெறிந்தாள்; தன் புகழ்க்கொடியை வேரறுப்பாள் போல மேகலையணியைச் சிந்தினாள்; கிண்கிணியோடு வளைகளையும் நீக்கினாள்; மதியத்தில் மறுவினைத் துடைப்பவள் போலத் தன் ஒளி நெற்றியில் திலகத்தையும் அழித்தாள்; பிற மணியணிகளையும் சிதறினாள்; கூந்தலை நிலத்திற் பரப்பிக் கண்ணீர் பெருக்கிக் கீழே வீழ்ந்து புரண்டாள். அவள் வீழ்ந்து கிடந்த நிலை மான் சோர்ந்து கிடந்தாற்போலவும், ஆடல் மயில் ஒடுங்கிக் கிடந்தாற் போலவும் இருந்தது. சானகியாம் திருமகள் நீங்குவாள் என்றுணர்ந்து அயோத்திக்கு முன்னமே வந்தடைந்த அத்திருமகளின் தவ்வை (மூத்தவள்) போல அவள் காணப்பட்டாள்!

'தாரமல்லள் துறந்தேன்'

மந்தரையால் மனம் பேதிக்கப்பட்ட கைகேயி, பல படத்தசரதன் வேண்டியும், மயங்கி வீழ்ந்தும், 'மண்ணே

கொள் நீ மற்றைய தொன்றும் மற' என்று இரந்தும் தன் கொள்கையினின்று தளர்ந்தாளில்லை; வசிட்ட முனிவன் வேண்டியும் நெஞ்சுறுதி நெகிழ்ந்தாள் இல்லை. இறுதியில் மன்னன் "இவள் என் தாரம் அல்லள்; துறந்து விட்டேன். மன்னனாக வரும் அப்பரதனையும் மகனாகக் கருதேன். முனிவா! அவனும் என் இறுதிக் கடனுக்குரியவன் அல்லன், கொடியவளே! என்னை வதைக்கிறாய். பழிக்கு நீ நாணவில்லை. பாவி! நின் கழுத்தின் மங்கல நாணே நின் மகனுக்கு இனி முடிசூட்டுகையில் கையிற்கட்டும் காப்புநாணும்" என்று புலம்பி மறுகினான்.

கணவனது உயிரையும் கவரும் அளவிற்கு மந்தரையின் சூழ்வினையால் மனம் மருண்டு விட்டாள் கைகேயி; வரமிரண்டும் கொண்டாள். வாய்மை வள்ளல் தசரதனும் அவற்றையளித்துவிட்டுத் தான் வானகம் கொண்டான்.

'வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்'

வனத்தில் இராமன் சுக்கிரீவனை முடிசூட்டி அரசியல் பற்றிய உறுதிகளை அவனுக்கு அறிவுறுத்திய காலத்தும், இம்மந்தரையின் செய்தியை நினைவு கொண்டான்; "சிறியரென்று இகழ்ந்து யாரையும் நோவு செய்யற்க. யானும் பண்டு கூனிக்கு ஒரு தீமையிழைக்கப் போய் அதனால் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்" என்று விளக்கலுற்றான். சாந்தவுள்ளத்துச் சத்துவன் இராகவன் உள்ளத்தையும், கூனியது கொடிய சூழ்வினை நினைவு கொல்வித்தது. அத்தகு தீவினை அது!

'தாயும் தம்பியுமாம் வரம் தருக!'

இராவண சங்காரம் முடிந்த பின்னர், தேவர் கோலத்தில் வந்த தசரதனிடம் தன் தாய் கைகேயியை

யும், தம்பி பரதனையும் மீண்டும் மனைவியாகவும் மகனாகவும் ஏற்றருளுமாறு வரம் வேண்டி, அரிதின் பெற்றுக் கொண்டான் அறத்தின் மூர்த்தியாம் இராமன்.

"தீயள் என்று நீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியு மாம்வரம் தருகெனத் தாழ்ந்தான்"

'கூனியிற் கொடியாரலரே!'

'உனக்கு யான் செய்யுமுதவியும் உண்டோ?' என்று அனுமனை மகிழ்ந்து வினவினாள் சீதை. அரக்கியர் அன்னைக்குச் செய்த கொடுமையை யெண்ணி வருந்திய மாருதியும் "திரிசடை நீங்கலாக ஏனைய அரக்கியரைக் குடல் குறைத்துக் குருதி குடித்து உடல் முறுக்கியிட்டு உண்பேன்" என்று கூறவே, அரக்கிய ரெல்லாம் அன்னை யைச் சரண் புகுந்தனர். அதுபோது அனுமனை உவந்து நோக்கி "இவர்கள் அரக்கன் சொன்னதைச் செய்தா ரேயன்றி, வேறென்ன தீமை செய்தார்? யான்செய்த வினைப்பயன் இது, கூனியை விட இவர் கொடியவரில் லையே!" என்று கூறினாள் சானகி. தூய சீதையின் மனத்திலும் தீய கூனியின் மாய வினைத்திறம் நிலைத்து விட்டது.

காப்பிய முடிவிலும்

தன் வரவு நோக்கி நின்ற பரதனைத் தீப்புகாது மீட் பிக்க அயோத்தி மீண்டான் ஐயன். முடிசூட்டு விழா நாள் குறிக்கப்பட்டது. அதுபோது விழாவிற்கு முற்படச் செல்லும் மந்தரையைக் கண்டு அவளைத் துன்புறுத்த முற்பட்டான் இலக்குவன்; இராமன் அறி வுரை கேட்டுச் சினந் தணிந்தான். காப்பிய முடிவிலும் 'மந்தரையின் சூழ்வினையால் வந்த அவலங்கள் இவை'

என்று சுட்டுவான் போல, உள்ளமும் உடலும் ஒருங்கே கூனிய மந்தரையைக் கண் முன்னர்க் காட்டுகிருன் கம்பன் !

வஞ்சப் பேதை

அரக்கன் அழிவிற்கு வழிகாட்டிப் பிற கருவிகளும் ஒருங்கியைந்தாற் போல, கூனியும் கைகேயியின் சிந்தையை மருட்டிய ஒரு கருவியே. அவளை மாத்திரம் பழிசாற்றுவது பயனில்லை யாயினும், அத் தீமை அவள் வாயிலாகப் புலப்பட்டமையால், அவளைத் தீவினை செய்தவளாகக் கருதுகிறோம். தான் கருதியவாறு கூனி கைகேயின் மனத்தைத் திரித்து விட்டாளாயினும், அவ்வெற்றி நிரம்பிற்றில்லை. பரதன் தாயின் செயற்கு விருப்பம் காட்டியிருப்பனுயின், அவள் செயல் வாகை புனைந்தது எனலாம். "படரெல்லாம் படைத்தவள், பழி வளர்க்கும் செவிலி, இத்துயர்மிக்கவுலகில் இடரில்லாத முகத்தவள்" என்று, பெற்ற மைந்தனே பழித்துரைக்கும் அளவிற்குக் கைகேயிக்கு அவலமே மிகுந்திருந்தது. ஆகவே, "எனக்கும் நீ நல்லவளில்லை ; என் மகனுக்கும் நல்லவளில்லை ; உனக்கும் நல்லவளில்லை" என்று கைகேயியே அறிவுறுத்தியவாறு தன் பிறவிப்பயன் முற்றும் கெட யார்க்கும் நன்மையின்றி வஞ்சனையே வடிவாகக் காலங் கழிக்கிருள் மந்தரை ; இராகவன் இளமையில் வில்லால் எய்த உருண்டை உடம்பில் பட்டதை நினைவு கொண்டு அதற்குப் பழிவாங்கும் நோக்கோடு இவள் செய்த ஒரு தீவினை காப்பியப் போக்கை எவ்வாறு மாற்றி விட்டது ! வாழ்நாளை வஞ்சனையோடு மாய்த்துக் கொண்ட பேதை முதியாளாகக் கம்பன் கூனியை நிறுத்துகிருன் !

சகுனி

பெரும் பொறுப்பாளி

இராமாயணத்தில் கூனிக்குரிய இடம் மாபாரதத்தில் சகுனிக்குண்டு. இருவரும் தீவினை முதிர்ந்த கீழ் மக்கள். திருதராட்டிரனுடைய மைத்துனன் சகுனி. திருதராட்டிரன் மனைவி காந்தாரி ; அழுக்காறே வடிவு கொண்டவள் ; துரியோதனன் முதலிய நூறு பாதகர்களையும் பயந்தவள். அவளுடைய உடன் பிறந்தானான சகுனி பெரும்பான்மையும் திருதராட்டிரன் மனையிலேயே வாழ்ந்து வந்தான். கௌரவர் நூற்றுவரும் பாண்டவர் மேல் அழுக்காறுற்று அநீதிபல இழைத்து அழியாப் பழியை எய்துவதற்குச் சகுனியே பெரும் பொறுப்பேற்றவனாவான்.

சகோதர பேதம்

ஐவரும் நூற்றுவரும் அத்தினாபுரத்தில் அமர்ந்து சேர்ந்து வாழ்வது சகுனி மனத்திற்குத் தளர்வு தந்தது. துரியோதனன் மனத்தைக் கரைத்து அவன் வாயிலாகப் பாண்டவரை அப்புறப் படுத்துவதில் அவன் நெஞ்சம் ஈடுபட்டது. 'உடன் பிறந்தவர்களோடு மருவி உடன் வாழ்வதே உறுதி' யென்று தந்தை, துரியோதனனுக்கு அறிவுரை பலவுரைத்தும், அவற்றை அரவக் கொடியோனாகிய துரியோதனன் அகம் கொண்டானில்லை; தனக்குத் துணையாகக் கன்னனும் சகுனியும் தம்பியும் இருத்தலே சிறந்தது என வாதாடிப் பாண்டவரை வாரணவத புரத்துக்கு அனுப்புவித்தான். அங்கு அரக்கு மாளிகை

யமைத்து அவர்களது உயிரைக் கவர வகுத்த வஞ்ச வினையிலும் சகுனிக்குப் பங்குண்டு !

இராச சூயம்

அறமே வாழ்வின் குறிக்கோள் எனக் கொண்ட பாண்டவர் பக்கலில் அறவடிவினனாகிய கண்ணன் துணையிருந்தமையால்,ஐவரும், நூற்றுவர் வகுத்த வஞ்சம் பலவற்றினின்றும் உய்ந்து பேரும் புகழும் பெற்றுப் பொலிவுறுவாராயினர். இந்திரப் பிரத்தம் அவர்களது கோநகராயிற்று. அங்கு மயன் பதினான்கு திங்களில், தனது சுதர்மையைவிட எழில் மிக்க ஒரு செழுமணி மண்டபம் செய்து அமைத்தான். தந்தை பாண்டு மன்னன் விருப்பத்திற்கேற்பத் தருமன் அம் மண்ட பத்தே இராச சூயயாகம்செய்ய விழைந்தான். தம்பியர் நால்வரும் திக்கு விசயம் செய்து திறைப்பொருள் கொணர்ந்தவற்றைத் தருமன் கண்டு மனம் மகிழ்ந்தான்; வேள்விக்கு வருமாறு கண்ணன் முதலியோர்க்கு ஆட் போக்கினான். அரசர்களும் முனிவர்களும் மண்டபத்தே வந்து நிறைந்தனர். வேள்வியும் ஏழுநாளில் விதி வழுவாது குறைவற முற்றியது. முடியுநாளில் தருமன் திறைப் பொருள்களைத் தானமும் தியாகமும் நல்கினான் ; வீடுமன் முதலிய மிக்கோர் விருப்பத்திற் கேற்பக் கண் ணனுக்கு முதற் பூசனை வழங்கினான். அதனை மறுத்துப் பலவாக அடாதமொழி பகர்ந்த சிசுபாலனைக் கண்ணன் உயிர் செகுத்தான். பலரும் மாயவனைப் பணிந்து பரவினர். தருமன் வந்திருந்த மன்னர் அனைவர்க்கும் முறைமை தவறாது சிறப்புச் செய்தான். இவ்வேள்வி வினையின் பின்னர், பாண்டவர்தம் புகழ் இன்னும் பன்மடங்கு பெருகலாயிற்று.

மதகரி விடுமோ ?

அழுக்காறு கொண்டு மனம் புழுங்கி அத்தினபுரம் மீண்ட துரியோதனன் ஓர் அவை கூட்டினன். மன்னர் பலரும் வந்து தம் இருக்கைகளில் அமர்ந்தனர். அவையிடைக் கன்னன் தருமபுத்திரன் வேள்வியைச் செய்து முடித்த சிறப்பைக் கூறி, ' அவன் செல்வ வாழ்விற்கு அளவுண்டோ ? யாரே அவனுக்கு எதிராவார் ? ' என்று தன் பாதக நினைவைப் பகர்ந்தான். கன்னன் கூற்றும் துரியோதனன் மனநிலையும் ஒத்து நின்ற இயற்கையைக் கண்டான் வசையையே இசையாகக் கொண்ட சகுனி ; " சிங்கம் எப்போதும் வெளிப்படாது குகைக் கண்ணேயே ஒடுங்கிக் கிடக்குமாயின், மதகரி அதனை மாய்க்காது விடுமோ ?" என்று தன் அழுக்காற்றுள்ளத்தை மெல்லப் புலப்படுத்தினன். துன்மதியுடைய தம்பி துச்சாதனன் " திங்கள் இரவில் ஒளி செய்யுமாயினும், பகலில் ஞாயிற்றின் முன்னர் எவ்வாறு நிற்க வல்லது ? " என்று தமையன் மனமகிழப் பேசினன். துரியோதனன் தன் தந்தையும் விதுரன் வீடுமன் துரோணன் முதலிய சான்றோரும் நிரம்பிய அரசவையில் பின்வரும் செய்திகளைக் கூறினன் :

இதுவே தருணம்

"இந்திரன் முதலான தேவரும் சிறப்புச் செய்ய, வேந்தர்களெல்லாரும் குற்றேவல் புரிய, முனிவர்கள் வேள்வியை முறைப்பட ஆற்றத் தருமனே சிறப்புப் பெற்றான். இனிச் சில நாள் செல்லின் அவன் நம் வாழ்வையும் கைக்கொள்வான். அவன் தம்பியரும் சூரர் ஆனர். முள் மரத்தைச் செடியிலேயே களையாவிடில், அது வயிரம் பற்றிய போது கோடரியையும் வாய் மழுக்கிவிடுமன்றோ ?

அவனுடைய செல்வம் எல்லாவற்றையும் இப்போதே நான் கவர்ந்து கொள்ளாவிடில் பின்னர் யார் அவனை வலியடக்க வல்லுநர் ? போர் செய்தாவது, வஞ்சம் ஒன்று புரிந்தாவது அவன் வாழ்வைக் கவர்வதே என் சிந்தை" என்று பாம்புக் கொடியோன் பகரவே, துச்சாதனன் அவையை நோக்கித் "துரியோதனன் அம் மண்டபம் சென்று கண்டபோது வீமன் நகைத்ததும் பாஞ்சாலி முறுவல் கொண்டதும் நீங்கள் கண்டீர் இல் லையோ ? வேள்விக்கு வந்த வேந்தர் பலரிடையே நாமும் ஒருவராகவே அடங்கி நின்றேமே ; கண் ணனுக்கே முதற் பூசனை வழங்கினன் தருமன் ; அதனை எதிர்க்கலுற்ற சிசுபாலனையும் அவ்வாய்மகனைக்கொண்டு ஆவி கவர்ந்தான். நாடெல்லாம் கவர வெண்ணி, எல்லா மன்னரையும் திக்கு விசயத்தால் கீழ்ப்படுத்திக் கண் ணனுக்கு மேன்மை உண்டாக்கவே அவன் வேள்வி செய்தான். இதுபோது கண்ணன் சல்லியன்மேல் போரி டச் சென்றுள்ளமையால் துணையின்றித் தனித்திருக்கும் தருமனைப் போரில் அழிப்பதற்கு இதுவே தக்க தருணம்" என்று தமையன் கருத்தை வழிமொழிந்து வலியுறுத் தினன். தம்பி கூற்றுக்குத் துரியோதனனும் தன்னி சைவைக் கூறினன்.

சூழ்ச்சியால் வெல்வதே கருமம்

வஞ்சனையால் தருமனை வெல்வதில் கன்னனுக்கு இசைவில்லை. 'வஞ்சனை கொண்டு வெல்ல மதிப்பது வாளால் வெல்ல அஞ்சினபோதன்றோ ?' என்று அவ் வங்கர் கோமான் விளம்பவே, சகுனி சாற்றலுற்றான் : 'இக்கன்னனேயன்றித் தேவரே எதிர்த்தாலும் தரும

புத்திரனைப் போரில் வெல்லமுடியாது. இடிம்பன், பகன், சராசந்தன் இவர்களைத் தன் தோள்வலியால் வெற்றி கொண்ட வீமன் அங்கே நிற்க, நம்படைப் பெருமையால் அவர்களை வென்று விடலாம் என்று கூறும் பேதைமை தான் என்னே! துரௌபதியை மணக்க விழைந்து விசயன் வேதியன் வேடத்தில் வந்து அம்பெய்து மீன் பொறியை வீழ்த்தியபோது, இப்பொழுது இங்கிருக்கும் வீரரான நாம் எல்லாரும் அங்கு இல்லாமலா போய்விட்டோம்? விசயன், வீமன் இவ்விருவரையும் போரிட்டு வெல்லுதல் நம்மால் இயலாது. இப்பிறப்பில் மாத்திர மன்று, எடுக்கும் ஏழெழு பிறப்பிலும் வாய்மை வழி தவருத நீதித் தருமனை வெல்லமாட்டோம். ஆதலின் ஏதேனும் ஓர் உபாயம் சூழ்ந்து சூதுபோர்செய்து அவர்களைத் தப்ப முடியாவாறு வெல்வதே கருமம்" என்ருன்.

சகுனியின் சூழ்ச்சி

துரியோதனன் மனமும் நாவும் குளிர மாமனைத் தழுவிக் கொண்டு அவனை உயர்ந்த ஆதனத்தில் அமர்த்திப் 'பாண்டவர்களை நின்கைச் சூதால் வெல்லும் கருத்தினை எனக்குரை' என்று வேண்டினன். சகுனியும் உவகை கூர்ந்து "மன்ன! நின் செல்வக் கோயிலின் கண் தேவரும் வியக்கும் வண்ணம் மண்டபம் ஒன்றைச் சிற்ப வினைஞரால் விரைவில் செய்விப்பாய். 'மண்டபம் காண நம்தமையன் வருக' என்று கூறியழைத்து வருக. அப்பாண்டவரும் கண்டு களித்து இருக்கும்போது, 'பொழுது போக்காகச் சூதாடலாம்; வருக என்று' தருமனை நோக்கிக் கூறுவோம். அவனும் இசைந்து

துணிவான். மாயவெஞ் சூதாட்டத்தால், விதியென்று சொல்லுமாறு பொருது, அவர்கள் தம் அரசையும் வாழ்வையும் நகர முதலிய பலவற்றையும் தோற்கும்படி செய்வேன்" என்று கூறவே, தம்பிமார்களும் 'இதுவே கருமம்' என்று மகிழ்ந்தனர். நிலமெல்லாம் தன்னைச் சார்ந்து விட்டதாக மகிழ்ந்தான் துரியோதனன்; தன் மார்பும் தோளும் பூரித்து உவந்தான்.

ஆமுறை தெரிந்துகொள்க

மாமன் உபாயப்படி தான் கருதியுள்ளவற்றை யெல்லாம் துரியோதனன் விதுரனிடம் விளம்பவே, அவன் மனம் நொந்து, "துரியோதன! நாட்டையும் அரசையும் கவர்தல் நின் கருத்தாயின் சூது கொண்டு புன்மையாற் கவரவேண்டா. நின் தந்தை அவற்றைத் தருமாறு ஐவருக்கும் ஓலை எழுதிவிட்டால், பாண்டவர் மறுத்துச் சொல்லார்; வேண்டியவையெல்லாம் தந்து விடுவர். தந்தையேவலால் தருமனும் தம்பிமாரும் நாட்டை விட்டுக் காடு செல்வர். வாழ்வு முழுதும் உமதேயாகி விடும். அப்போது அரசர் கேட்டாலும் அது பழியும் பாவமும் ஆகாது. மாயச் சூதினால் வெல்லுவது தோற்றமும் புகழும் அன்று. இப்பழி ஒருகாலும் நீங்காது" என்று அறிவுரை கூறினான். அரவக் கொடியோன் அதுகேட்டுச் சினம்மிக்குத் "தந்தை திருதராட்டிரனுக்கு ஒரு சாராரிடத்து மாத்திரம் அன்புரிமை பாராட்ட முடியுமோ? அவர்களது வாழ்வை வாங்கி எமக்குத் தந்தால் வசைஉரையாரோ? உனக்கு என்றும் பாண்டவர்மீதே நேயம். எனக்குயிர்த்தந்தையென்று நின்னை நான் மகிழ்ந்து காண்கிறேன். உனக்கும் உன் சுற்றத்துக்கும்

நாளும் உண்டியும் வாழ்வும் இங்கே ; ஆயின் நின் மனக் கருத்து அங்கே" என்று இழித்துப் பேசவே, விதுரனும் விளம்பலானுன்; "மறுவில்லாத அறிவினுய்! தந்தை யர்க்குப் புதல்வர்களில் ஒரு சாரரிடத்துத் தனித்த அன்பு இல்லை என்றுய். யானும் அத் தந்தையில்லை யோ ? நீங்களும் அவர்களும் நேசமுறை தவருது என்றும் உலகில் வாழ்ந்தால் பகை மன்னரெல்லாம் பணிவர். புகழும் வாழ்வும் உமக்கு வளரும். உங்களி டையே பிரிவுற்று எதிர்ப்பீரேல், 'குருகுலத்தலைவர்கள் தம்முள் பகையுற்றுர்' என்று நம் பகைவரெல்லாம் பூரிப்பர். ஆதலால் உறுதி சொன்னேன். பொருந்து முறை தெரிந்துகொள்க. இனி, யானும் அயலார்போல உனக்கு யாதும் உரையேன். தீயோர் பரிவுடையவர் போலக் கூறும் தீய மொழியே உனக்கு ஏற்குமன்றி என் மொழி ஏலாது" என்று கூறினுன். துரியோதனன் இழிவு கூறி நகைக்கவே, அவன் சூழ்ச்சிக்குத் தான் இசை யாமல் நீங்கியகன்றுன் நீதி விதுரன்.

நல்ல தந்திரம்

துரியோதனன் விழைவிற்கேற்ப வியக்கத்தக்க மண்டபம் விரைவில் அமைந்தது. 'காவிய மக்கட்கெல் லாம் கருத்துறு கவினு'க அது விளங்கிற்று! தன் தந்தையை எய்தித் துரியோதனன் தன் கருத்தெல்லாம் கூறி. அது முற்றுவதற்கு மண்டபம் சமைத்த படியையும் சாற்றி, அதன் பெருமை காணப்பாண்டவரை யழைக்கத் தூதுவன் ஒருவனை ஏவுமாறு வேண்டினுன். மகன் மொழியை நயந்து கேட்டான் தந்தை ; 'நல்ல தந்திரத் தால் வெல்லலுற்றீர். போரினுல் அவர்களை யழிக்க

முடியாது. சகுனியையன்றி வேறு யார் நிலத்தைத் தரவல்லார் ?' என்று பாராட்டியுரைத்தான் ; விதுரனைக் கூவி, 'நீ போய்க் கூறின் யாரே உன் மொழியை மறுப்பார் ? உன் மக்களாம் துரியோதனுதியர் வழியே ஒழுகும் வண்ணம், பாண்டவரை உன் பேச்சால் மருட்டி யழைத்து வருக' என்று வேண்டினன். 'உன் தம்பியர் நூற்றுவர் விரும்பிச் சமைத்த மண்டபத்தின் அழகைக் காண இங்கு வருக' என்று பைம்பொன் ஓலையைப் பண்புற எழுதித் தம்பி விதுரன் கையிற் கொடுத்து விடுத்தான்.

கருத்தினித் தெரியாதோ

விதுரன் பாண்டவரது இந்திரப் பிரத்த நகரை எய்தினன்; அந்நகரின் வளம் பலவும் விழிகளிப்பக் கண்டான், பாண்டவர், சிறிய தந்தை தம்மை நாடி வந்துற்றதனை அறிந்து மகிழ்ந்து விரைந்து எதிர் கொண்டனர். அவனும் அவர்களைத் தழுவி மெய் குளிர்ந்திட்டான். "திருதராட்டிரன் திருமுகம் ஒன்று எழுதி விடுத்துள்ளான். உங்களை யழைத்து வருமாறு ஏவினன் ; யானும் வந்தேன். அழைத்ததற்குக் காரணமும் உளது. நீ புரிந்த வேள்வி கண்டு அக் கண்ணிலான் மைந்தன் அழுக்காறுற்றான் ; தன் தம்பிமாரோடும் சகுனியோடும் சூழ்ச்சி செய்து ஒரு மண்டபம் தேவருலகம் என்னுமாறு சமைத்துள்ளான்; தந்தைக்கும் தன் கருத்தையெல்லாம் கூறினன். மண்டபத்தில் குடிபுகும் போது, மாமன் சகுனி உன்னையும் அங்கு வருவித்து மன்னரவையின் முன்னர் வஞ்சனை புரிந்து தான் கற்றுள்ள சூதினை உன்னுடன் ஆட வேண்டும் என்று கூறியுள்ளான். இனி அவர்கள் கருத்து உனக்குத் தெரியாததோ ?" என்று கூறித் திருதராட்டிரன் திருமுகத்

தையும் நீட்டவே, அதைத் தொழுது வாங்கினுன் தருமன் ; அதன் செய்தியறிந்து 'இறைவன் பணித்த தொழிலே மறுப்பதற்கு நாம் யார் ?' என்று கூறி, 'குரு குலத்தின் பெருமைக்கு இச்செயல் தகுமோ ?' எனச் சூதாட்டத்தின் புன்மைகளைப் பற்றியும்புகல்வாஞயினுன்.

சூதின் மேல் மனம் வைப்பரோ ?

"தலைமையும் ஆண்மையும் வலிமையும் சேனையும் அழகும் வெற்றியும் குடிமையும் மானமும் செல்வமும் பெருமையும் இன்பமும் ஒளியும் நற்குணமும் மறை யொழுக்கமும் புகழும் முன் பயின்ற கல்வியும் சூதினுல் ஒரு சேர மடியும். அறிவுடையோர் சூதின் மேல் மனம் வைப்பாரோ ? ' இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும், திருநீக்கப் பட்டார் தொடர்பு' அல்லவா ? ஞானம் மிக்க சான்ருேர் பலரும் பாதகங்களில் ஒன்றெனச் சூதினைப் பழித்துள்ளனர். புன் தொழிலையுடைய இளைஞர் போலச் சிறிதும் சிந்தனையின்றி, வஞ்சனைக் கருத்தோடு சகுனி சூதாட என்னையா தக்கவஞகக் கொண்டான்?" என்று பலவாறு வருந்திக் கூறினுன் தருமன். பின்னர் விதுரனை நோக்கி "நின்கருத்து யாது?" என வினவினுன். விதுரன் தருமனை நோக்கித் தான் மன்னரவையில் எல்லாரும் கேட்பச் சூதாடல் கூடாது எனக் கூறியதையும், தன் னறவுரையைத் துரியோதனன் மறுத்துத் தன்னை இகழ்ந் ததையும் கூறி, 'நினக்குத் தோன்றியவாறு செய்க' என்ருன்.

மறுப்பது கடனன்றே

வீமன் சினமிக்கு "அன்று துரியோதனன் கங்கை நீர்த்துறையில் கழுமரங்களை நிறுத்தி வைத்து எனனைக் கொல்ல வஞ்சனை செய்தான் ; அரக்கு மாளிகையைக்

கொளுத்தி நம்மனைவரையும் கொலை புரிய முயன்றான்; இன்று சூதினால் யாவையும் கவரத் தந்திரம் செய்து அழைத்திட்டான். முளையிலேயே கொல்லவல்ல நச்சு மரம் வயிரமுற்று விளைந்தால் என்ன செய்யாது? அவர்களோடு இனி நட்பு வேண்டா. வன்படை கொண்டு மோதிக் களைந்தால்தான் நமக்கு உய்வுண்டு" என்றுரைத்தான். அடுத்து, விசயன் "தெளியப்படாதவரைத் தெளிதலும், தெளியப்பட்டவரை ஐயுறுதலும், நண்பரைப் பகையாகக் கருதிப் பொருதலும், பகைவரை நட்பாகக்கொண்டு மருவி வாழ்தலும் அரசர்க்கு முறையல்லாதன என்றனர் ஆன்றோர். ஆதலின் அக்கொடியவர்பால் நாம் ஏன் செல்லவேண்டும்?" என்று சீறினான். நகுலனும் சகாதேவனும் 'ஏகுதல் தகாது' என்றனர். தருமன் தம்பியர் உரைத்த வார்த்தைக்கு முதலில் இசைந்தான். ஆயினும், "தந்தை சொல்லை நாம் மறுப்பதோ? புகழையேயன்றி உயிரை நிலைபெறுத்துபவர் யார்? அத்தினபுரம் நாம் செல்லாவிடினும் விதியால் விளையக்கூடியது விளைந்தே தீரும். நம் சிறிய தந்தை விதுரன் வந்திருப்பவும், பெரியதந்தை ஓலை விடுத்திருப்பவும் நாம் மறுப்பது கடனன்று. நாளையே புறப்படுவோம்" என்று நீதி பேசினான். தருமன் சொற்படி, முரசறையவே சேனைத் தலைவர்களும் அரசர்களும் கூடினர். பாண்டவர் ஐவரும் ஐந்து தேர்கள் மேற்கொண்டனர். சேனைகளோடு தம்பியர் நால்வரும் நாற்புறத்தும் சூழ்ந்து வரத் தருமனும் புறப்பட்டான். அரச மகளிரோடு திரௌபதியும் உடன்சென்றாள்.

திருதராட்டிரன் அறிவுரை

தருமபுத்திரனுக்குச் சில தீச்சகுனங்கள் நேர்ந்தன. நிமித்திகர் அவற்றைக் கூறவும், அவன் பொருட்படுத்த

வில்லை. அத்தினபுரியின் புறச்சோலையில் தம் படைகளோடு பாண்டவர் தங்கினர் ; யாவரும் இளைப்பாறினர்: அறத்தில் நில்லாத அரவக்கொடியோனது வஞ்சனையையுணர்ந்து அந்நகரம் புறத்தே தங்கிவிட்டது என்னுமாறு தருமனது அப் பாடி வீடு விளங்கிற்று ! பாண்டவர் வரவுகேட்டுத் துரியோதனனாதியர் மகிழ்ந்தனர். ஐவரும் திரௌபதியோடு அத்தினபுரி எய்தினர் ; பெரிய தந்தையின் கோயிலை யெய்தி அவன் பாதங்களைப் பணிந்தனர். தம்பி மைந்தரைத் தழுவிய திருதராட்டிரன் "உங்களை என் தம்பி காண நல்வினை செய்தானில்லையே! நீங்கள் உம் தம்பிமாரோடு மனமொத்து வாழ்க" என்று வஞ்சனையுள்ளத்தோடு வாழ்த்தினன் ; "தருமனே ! திறமையும் மந்திரமும் பெருமையும் ஆண்மையும் முயற்சியும் பீடும் பேரும் தருமமும் யாவும் நின் பாலுள்ளனவாதலால் கேடு இன்றி இனிதாக உன்னரசு செல்லும். பகைவரை வென்று திறை கொணர்ந்து நீ இராசசூய வேள்வி முடித்ததும், தானங்கள் செய்ததும் நின் தம்பிமார்கள் வந்து சொன்னார்கள். நில முழுவதும் குருகுலத்தோர் கைப்பற்றி ஆண்டதாகும். இந்நிலத்தைத் துண்டியாமல் நின் துணைவராகிய தம்பிமாரோடு முன்போலவே ஒற்றுமைப்பட வாழ்க. தொலைவிலிருந்து கொண்டு நும் புகழைக் கேள்வியுற்று அன்புறும் மகிழ்ச்சி தவிர உங்களைக் கண்களால் காணப் பாக்கியம் பெற்றிலேன்" என்று நேசம் கொண்டவனைப் போல இன்மொழிபேசி விடுத்தான். பின்னர், பாண்டவர் காந்தாரியைப் பணிந்தனர்; அடுத்து, வீடுமனைப் பணிந்து தாம் வந்த காரணத்தைச் சொல்லினர். கள்ள வஞ்சகர் கடிய உபாயம் செய்தனர்போலும், என்று கூறினன் வீடுமன்.

தருமன் அறிவுரை

துரோணன் முதலியோரை வணங்கி அவர்களது ஆசி பெற்ற பாண்டவர் விதுரன் மாளிகை எய்தினர்; அவன் மனையிலேயே தங்கினர். மறு நாட்காலை விடிந்தது. தருமபுத்திரன் முனிவரர்க்கெல்லாம் தானம் செய்தான். துரியோதனன் பிராதிகாமி என்பானை அனுப்பி மண்டபத்தின் அழகு காணப் பாண்டவரை அழைப்பித்தான். தருமன் திரௌபதியைக் காந்தாரிபால் இருக்கச் செய்து தம்பியரோடு அரச சபையைச் சார்ந்தான்; பெரியோர்களை வணங்கிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தான்; மண்டபத்தின் எழிலைப் பல வாறு வியந்து பாராட்டினன். தம்பியர் நால்வரும் வந்தமர்ந்தனர். துரியோதனன் தருமனை நோக்கித் "தந்தை மாளிகையில் உணவு கொள்ளப்போகின்ற வரையில் பொழுது போக்காக, மாயமொன்றும் எண்ணாத மாமன் சகுனியும் நீயும் இன்று சூதாட்டம் விளையாடுகிறீர்களா ?" என்று வினவினன். அது கேட்டுத் துணுக்குற்றான் தருமன். "வஞ்சனை மிகக் கோபங் கொள்ளுதல், பிறர் பழி தூற்றல், ஒருவரை நட்புச் செய்துகொண்டு பிறகு ஐயுறுதல், சூதாட்டத்தை விழைதல், சொன்ன சூளுரையைத் தவறுதல் என்னுமிவை தீயவை என்று நூல்கள் கூறும். காதல் மிக்க மாமனோடு நான் வஞ்சனைச் சூதாட்டம் மேற்கொண்டு அதில் தோற்றுப் பொருளெல்லாம் இழந்து தோல்வியடைய வேண்டும் என்பது உம் கருத்தா? நீங்கள் மனத்தில் எது பெறவேண்டும் என்று கருதுகிறீர்களோ, அப் பொருளை இப்போதே நுமக்கு அளிப்பேன்" என்று தருமன் மறு மாற்றம் இசைத்தான்.

போரில் எவ்வாறு உய்வாய் ?

அது கேட்ட சகுனி "தப்பில்லாத கவறு உருள்வதால் வரும் தாயம் இருதிறத்தார்க்கும் ஒப்பதே. காய்களை வைப்பதில் அறிவின் திறன் உண்டேயன்றி வேறு வஞ்சமில்லை. உண்டு எனக் கூறின் இவனை 'ஆடவருக என்று யார் அழைப்பார்? வேண்டுமாகில் தன்னூரை நாடி நடக்கவிடுப்பீர்! அவன் இசைந்து ஆடுவானுனால் நானும் இனிமையோடு நீரெல்லாம் காணுமாறு, விளையாடலாம். தருமனே ! கேள். விரும்பி நாம் ஆடுகின்ற சூதில் வெற்றியும் தோல்வியும் இரு சாரார்க்கும் ஒக்கும். வறிஞரைப்போல நீ அஞ்சியோடக் காரணம், பந்தயப் பொருளை வைப்பதற்கு நீ உலோபியாயிருப்பதோ? யான் எறிந்த கவறு வெல்லுமாயின், நீ வைத்த பணயத்தை இழப்பாய். நீ எறிந்த கவறு வெல்லுமாயின் நின் பணயத்தினும் இரு மடங்கு தருவேன். அஞ்சவேண்டா ; சூதாட வருக" என்று ஆசை காட்டி அழைக்கலுற்றுன். தருமன் ஒன்றும் விடை கூருது இருப்பவே, கன்னன், "போது போகச் சூதாடுவோம் வருக ' என்றழைப்பவும், சூது போருக்கு அஞ்சி உள்ளம் நடுங்குகிருய் ; மோது போரில் எவ்வாறு உய்வாயோ ? நின் தம்பியரோடு தேரில் நின்னகர்க்குச் செல்வாயாக'' என்று இழித்துரைத்தான், அது கேட்டு விசயன் சினந்தெழுந்தான் ; "மண்டபம் கட்டித் தந்திரமாக எம்மைக் கூவி இதுபோது சூதாட அழைத்ததால் என் தமையன் மறுத்தான். போர்க்கு அஞ்சினுன் எனத் தகாத சொல்லெடுத்து வைத நின் வாயைத் துணிப்பேன்'' என்று அவன் மேல் அம்பு தொடுக்க வில்லைக் கையிலெடுத்தான். அவனைத் தருமன் கையமர்த்தி

இருக்கச் செய்து, மற்றவர்கள் அமைதியுறுவதற்காக மாயச் சூதாட்டத்தில் ஈடுபடலானுன்.

விதுரன் அறிவுரை

துரியோதனன் "தரும! உன்னைச் சகுனி வென்றால் பணயப் பொருளை நீ கொடுத்தல் வேண்டும். நீ அவனை வென்றால், யானே பணயப் பொருளைத் தந்துவிடுகிறேன். ஆயின் உன்னை வெல்வது எளிதன்று!" என்று எடுத்துக் கூறினுன். சூதாட்டம் தொடங்கியது. தருமன் பல பொருள்களையும் பணயம் வைத்து இழந்தான்; நாற் படைகளையும் இழந்தான்; நிலத்தை இழந்தான்; அரச பதவியை இழந்தான்; தம்பியரையும் தன்னையும், முறையே வைத்திழந்தான். பின்னர், திரௌபதியையும் பணயம் வைக்குமாறு சகுனி தூண்டவே, அதுகேட்டு விதுரன் பொருது தன் தமையனை நோக்கி விளம் பலுற்ருன்: "உனது அறிவின்மையால் இத்தகைய முறைகேடு நிகழ்கிறதேயன்றி, அறிவுடையார் இதனை நினைத்தலும் செய்வாரோ? இச் செயல்கள் நமக்கு அடுக்குமோ 'இது நமக்கு அடாது' என்று நீ சொல்வா யாயின், நின்நேய மைந்தர்கள் நின் சொல்லை மறுப்பரோ? உன்மக்கள் வஞ்சனை மிக்குப் பாண்டவர்க்குத் தீமை செய் யும் போது, பெரியதந்தையாம் நீ அத்தீமைக்கு உடன் பட்டிருப்பது தகுமோ? நீ விலங்கும் இல்லை; பறவையும் இல்லை; மனிதனுயிருந்தும் இரக்கமற்ற அரக்க உள்ளம் படைத்தாய்; நின்னிடம் நாங்கள் அடைந்து வாழ்வது எங்கள் அறிவிலாமையே ஆகும். பின் பிறந்த தம்பி மைந் தராம் பாண்டவர் துயரமுற, முன்பிறந்த தமையன்மக்க ளாம் கௌரவர் வஞ்சனையால் அவர்களை வலியத் துன் புறுத்துவாரோ? உன் தம்பி மக்களிடம் உனக்கு அன்பில்

லாவிடினும், நீதி அழியுமாறு நீ அவர்களை நடத்தினால், இவ்வுலகில் எண்ணிலாக்காலம் என்ன என்ன தீங்குகள் தாம் விளையுமோ? இத்தருமனை வென்ற வஞ்சமன்றி, இவன் தருமபத்தினியையும் பணயமாக வைத்துச் சூதாடச் சொல்லல் தருமமோ? இது தருமம் அன்று. உனக்கு அழிவுகாலம் வந்து விட்டதாதலின் உன்மனம் மாறுபடுகிறது" என்று பேசி முடித்தான்.

மாமனோ மறலியென்பார்

கண்ணிலான் செவியுமிலான் போலிருந்து விட்டான். சகுனி சொற்படி தருமன் பாஞ்சாலியைப் பணயம் வைத்துச் சூதாடி இழந்தான். அவைக்கணிருந்த அரசர் பலரும் இந்தத் துயரநிலை கண்டு இரங்கியேங்கினர். "துரியோதனன் மிகக் கொடியோன் காணீர்! மருமகன் உயிருக்கு இந்த மாமன் கூற்றுவனாக வந்துற்றானே! தருமன் இத்தனை நாள் செய்த தருமமும் பொய்யாகுமோ? வீமன் சினந்தெழுந்தால் என்னும்? விசயனும் விழி திறந்து விட்டான் காணீர்! அறமும், ஒளியும், மனு நெறியும் அழிந்தனவோ? திரௌபதியின் புண்ணியம் பொய்யாதே. வழிவழியாக நிற்கும் வசையைத் திருதராட்டிரன் செய்து விட்டான்" என்று பலவாகத் தம்முள் பேசிக் கொண்டனர். "தருமன் செய்த பாவமோ, சகுனி செய்த புண்ணியமோ, அப்பொது மகள் பாஞ்சாலி யாகசாலை நண்ணியதவமோ, தம்பியர் நால்வரும் செருக்குற்ற பெருமித எண்ணமோ இவ்வாறு விளைந்து விட்டது" என்று வீடுமனை நோக்கித் துரி யோதனன் செருக்கி மொழிந்தான். 'நம்மில் நாம் புன்மை கூறுதல் நம்குல மரபுக்கேற்றது அன்று. செற்றம் நீங்குக' என அறிவுரை கூறினான் வீடுமன்.

நெஞ்சில் நினையாதே

சூதில் தருமன் தோற்ற பொருள்களையெல்லாம் கவர்ந்து வருமாறு ஏவலிட விதுரனைப் பணித்தான் துரியோதனன்; திரௌபதியையும் அரசவைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டான். விதுரன் மனம் நொந்து. "அறனல்லாத தீயநெறியில், சூதுபோரில் தருமன் செல்வத்தையெல்லாம் கவர்ந்தாய். நினது இச் செயல் வலியுமன்று, வாழ்வுமன்று, புகழுமன்று, மதியுமன்று. பிறவெல்லாம் செய்வாய் எனினும், இம் மன்னர் முன்னிலையில் கற்பு மடந்தையைச் சொல்லக்கூடாத சொற்களால் சொல்லுதலை மாத்திரம் நெஞ்சில் நினையாதே. அருந்ததி ஒத்த அவளை நீ பழித்துரைத்த சொல்லைக் கேட்கும் போது நின் அழிவுகாலம் அடுத்து விட்டது என்றே யுணர்கிறேன்" என்று இறுதியாக உறுதிகள் உரைத்தான். துரியோதனன் அவனை எள்ளியிகழ்ந்து, திரௌபதியைக் கொணருமாறு பிராதிகாமியைப் பணித்தான்.

திரௌபதி அரசவை அடைதல்

வருத்த மிக்க மனத்தோடு அத்தேர்ப்பாகன் பாதி வழியில் மீண்டும் வேந்தனுக்கு ஏற்பச் சொன்னான்: "என்னைத் தோற்றுத் தருமன் தன்னைத் தோற்றானோ? அன்றித் தன்னைத் தோற்றுத் தன் மனத்தளர்வால் என்னைத் தோற்றானோ? தன்னைத் தோற்பதன் முன்னர்த் தோற்ற பொருள்களைக் கவர்தல் முறையேயன்றிக் தன்னைத் தோற்ற பின்னர்த் தோற்ற பொருள்களைக் கவர்தல் முறையன்று" என்று திரௌபதி கூறியதாகக் கூறினான். அது கேட்டுப் பாவி தரியாமல் பாஞ்சாலியைக் கொணருமாறு துச்சாதனனிடம் பணித்

தான். அவனும் தன் தாய்மனையை எய்தி அங்கே திரௌபதியைக் கண்டான்; அவளை நோக்கித் "தருமன் தானுகவே சூதாடி எல்லாப் பொருள்களையும் இழந்து, பின்னர் வயதில் மூத்ததன்னை முதலிலும், பின்னர் அம்முறைப்படியே வீமன் முதலிய தம்பியரையும், அதன் பின்னர் எல்லாரினும் இளைய உன்னையும் பணயம் வைத்து முறைப்படி தோற்றுன். ஆதலின் நின் கணவரைப்போலவே நீயும் எங்கட்கு அடிமையாவாய். ஆகவே, எம் தமையன் விருப்பப்படி அரசவைக்கு வருக. அன்று இந்திரப் பிரத்தநகரத்தில் சபாமண்டபத்தில் எங்கள் தமையனைச் சிரித்து இகழ்ந்த உன் செங்கனிவாய் அழுதரற்ற, வேந்தர்களுக்கு எதிரே உன் கணவன் தரும புத்திரனை நாங்கள் சிரித்து இகழ்கின்ற இழி நிலையைக் காண்பாயாக. ஐவரையும் தழுவித் தழுவிப் பொய்யே மெய்போல் நடிக்கும் நலம் உடையவளே! நீ நல்ல குலத்திற்குரிய ஒழுக்கம் தவறியவள் ஆனுய். ஆகவே, கூசாது என்பின்னே வரக்கடவாய்" என்று சொல்லி அவள் கருங்குழலைத் தொட்டுப் பிடித்தான்; சூழ்ச்சி முடித்தான். வலைவாய்ப்பட்ட மான்போலக் கொடியோன் கையிலகப்பட்ட பாஞ்சாலி, மாமி காந்தாரியின் மருங்கே சேர்ந்தாள். அவளும் சிறிதும் இரக்கம் காட்டாமல், "உன்னையழைப்பவர் பகைவரில்லை; சுற்றத்தவரே. அவர்கள் அழைத்தால் உன் கருத்தைச் சொல்லிவர அஞ்சாது ஏகு" என்று விடுத்தாள். பல பாதகரைப் பெற்ற பெரும் பாதகி யல்லளோ இவள்!

முன்னம் பொறுத்தீர்! இன்னும் பொறுப்பீர்

துச்சாதனன் திரௌபதியின் உடலைத் தீண்டாமல் குழல் பற்றி இழுத்துச் சென்றுன். குழல்குலைய,

மானம் குலைய, மனம் குலைய 'அவையில் கணவர் இருப்பர்' என்று எண்ணிப் பாஞ்சாலி அவன் வழியே சென்ருள். 'உற்பாதம் உண்டாயிற்று' என்று கண்டவர் எல்லாம் அஞ்ச, கருங்குழல் வீழ்ந்துபுரளக் கயவன் அவளை இழுத்துச் சென்ருன். நகரமாந்தர் 'இதுவுமோர் அவலம் என்னே' என வருந்திப் பலப்பல மொழிந்தனர். கண்ணீர் சோரக் குழல் சோர, உள்ளம் சோரக் காவலன் அவைமுன்னர்ப் புக்காள் கற்பு நங்கை. எல்லா அரசரும் இச் சோகம் காணப் பொருமல் தலைகவிழ்ந்து வருந்தினர். திருதராட்டிரன் வாளாவிருந்தான். அது காலை தீயநிமித்தங்கள் பல நேர்ந்தன. மேகம் குருதி பொழிந்தது! விண்மீன்கள் பகற்போதிலேயே மிக விளங்கின; பூகம்பம் நிகழ்ந்தது. வீமன் கதைமேற் கை வைத்தான்; விசயன் சிலை மேல் விழி வைத்தான்; நகுல சகாதேவரும் தத்தம் கருத்தில் சினமூண்டனர். அவர்களது சீற்றத் தழலைத் தணிக்கும் வண்ணம் தருமன் நல்ல அறிவுரை கூறுவானுனன்: "சில மலர்கள் வாடும் காலத்துச் சிலமலர்கள் மலரும். வெங்கானம் வேகும் போது அங்கு வாழ்வன எல்லாம் ஒருசேர வெந்து விடுமல்லவா ? அம்முறையிலேயே பொருள்கள் உண்டாகும்போது உண்டாவதன்றி இறைவன் ஆணையின்படி அழியும் காலத்தே எல்லாம் போய்விடும். ஆதலின், முன்னர்ப் பலமுறை பொறுத்திருந்தீர்கள் ; இன்னும் சிலகாலம் பொறுமின்" என்ருன் தருமன். தமையன் அறிவுரை கேட்டுத் தம்பியர் அடங்கினர்.

வாய்மைத் தோன்றல்

கோகோவென்று கதறிக் கோச் சபையில் சோர்வுற்ருள் பாஞ்சாலி. அவள் முகம் நோக்கித் துச்சாதனன்,

"இவ்வவையில் நின்மாமன் இருக்கிறன். ஐவரும் முன்னிருக்கின்றனர். விழிநீர் சொரியுமாறு, உனக்கு என்ன வந்தது? பொது மகளிர்க்கு விழிநீர் அரிதோ" என்று வினவவே, அதற்கு ஒன்றும் சொல்லாதிருந்த பேரவையை நோக்கித் திரௌபதி தொழுதாள் ; அழுதாள் ; "எல்லாம் உணர்ந்த பெரியோர்க்கு இதுவோ இயல்பு?" என்று புலம்பினள் ; "தருமன் சூதாட்டத்தில் முறைப்படி என்னைப் பணயம் வைத்துத் தோற்றிருப்பின் உம் விருப்பப்படி என்னை அடிமைகொள்ளுமின் ; என்னை முன் தோற்றபின் தன்னைத்தான் தோற்ருனே ? அன்றித் தன்னை முன் தோற்றபின் என்னைத்தான் தோற்ருனே ? பெரியீரே ! உண்மை பேசுக" என்று விழிநீர் வெள்ளத்தில் வீழ்ந்து அரற்றினள். அவளுக்கு ஒன்றும் விடை கூருது ஊமர் போலிருந்த அவையோரிடை விகர்ணன் என்னும் வாய்மைத் தோன்றல் எழுந்தான், "வாள்வேந்தீர் ! நீங்கள் எல்லாம் பொல்லாத நரகிற் போகாதவண்ணம் நீதியைக் கூறுமின். இவள் முறையோடு வருந்தி வினவவும், நீங்கள் விடைகூற அச்சம் கொண்டிருக்கின்றீர்கள். காரணம், நினைவு இன்மையோ ? அன்றித் துரியோதனன் சினங்கொள்வான் என்ற அச்சமோ? குலத்தில் பிறந்தவர்கள் கண்கண்டதை ஒளியாது கூருரோ ? ஆகவே, நியாயம் கூறுதல் குறையாமோ? தருமன் முதலில் தன்னைத் தோற்றுவிட்டானுதலின், பின்னர் இவளைப் பணயம் வைத்திழக்க அவனுக்கு உரிமையில்லை என்று நியாயம் கூறீரோ ?" என்று அவை மன்னர் இதயமெல்லாம் மகிழச் சொன்னுன். அவனைக் கன்னன் அடக்கினுன்.

மடிமீது இருத்துக

அடிமைகளுக்கு மேலாடை கூடாதாதலின், பாண்டவரிடத்தும், திரௌபதியிடத்தும் உள்ள மேல் துகிலை உரியுமாறு துரியோதனன் துச்சாதனனை நோக்கிக் கூறினன். ஐவரும் தம் மார்பினின்று அதுவரை வாங்காத உத்தரியத்தை வாங்கி யீந்தார். பாஞ்சாலியைத் துகிலுரிய அங்நீசன் அருகு அணையவே, அவளும் எம்பெருமான் இணையடிக்கே இதயம் வைத்து இருகைம் மலர்களையும் குவித்தாள்; வேறோர் சொல்லும் கூருமல் 'கோவிந்தா! கோவிந்தா!' என்று அரற்றி அழுதாள்; நாவில் அமுதம் ஊற உடல்மயிர் சிலிர்க்கப் பெற்று உள்ளம் எல்லாம் உருகினுள். கண்ணன் திருவருளால் அவள் மேலாடை வளர்ந்தது. துச்சாதனனும் சலித்து இருகையிளைத்து நின்ருன். திரௌபதியின் கற்பு நிலைகண்டு வீடுமன், விதுரன் முதலியோர் கைகுவித்தனர். தேவ துந்துபிகள் முழங்கின. வானவர் பூமழை சொரிந்தார். வீமன், உருத்து எழுந்தான்; "எம்தமையன் சொற்கு அடங்கினேமேயன்றி, இங்கு நும்மில் யார்க்கும் அஞ்சினேமில்லை; நூற்றுவரும் என்னெதிர் போரிட வருக" என்று அறைகூவினுன். அவ்வறைகூவலைச் செவியேற்காத அரவக் கொடியோன் சூரத்தம்பியை நோக்கித் திரௌபதியைத் தன் மடியின்மீது இருத்துமாறு பணித்திட்டான்.

வஞ்சினம்

துரியோதனனது நச்சுமொழிகேட்டு இடியேறுண்ட நாகம் போல நடுக்குற்ருள் கற்பு மடந்தை. "யான் வந்து அமர இக் கீழ்மகன் காட்டியதொடைவழியே கழுகு குத்த இவன் ஆவி சென்றிடுக" எனச் சபித்தாள்; "அரசவை

யில் என் குழலைத் தீண்டித் துகிலைத் தீண்டி வேந்தர் எதிரே தகாதவை பலவும் விளம்பிய இக்கொடியோர் அமர்க்களத்தே தலைகள் துணியக் குருதியாறு கொப்புளித்து ஓட, வெற்றி முரசு ஒலி கேட்கும் போதல்லால், எனது விரித்த குழலை முடியேன்" என்று வஞ்சினம் மொழிந்தாள். "பாஞ்சாலிக்கு அரசவையில் பழுதுரைத்த பாதகனது உடலினை என்படையாகிய தண்டினால் போரிட்டு அழிப்பேன்; அவள்கூந்தலைப் பிடித்துத் துகில் உரிந்த கொடியோனது உடல் உதிரத்தை வாரியுண்டு உடல் குளிர்வேன்; அதன் முன்னர் இக்கரத்தால் நீருண்ணேன்; ஒருகால் உண்ணநேரிடின், என்கைத்தண்டால் நீரை எற்றி மேலெழுந்து வீழும் நீர்த்திவலைகளையே பருகி உயிர்வாழ்வேன்" என்று வீமன் சபதம் செய்தான். 'கன்னனது உயிரை மாய்ப்பேன்' என விசயனும், 'சகுனியின் மகனைக் கொல்வேன்' என நகுலனும், சகுனியைத் தலைதுணிப்பதாகச் சகாதேவனும், சூளுரைத்தனர்.

வயப்புலியை வாலுருவி விடுகின்றீரே !

அதுகாலை, தீய சகுனங்கள் பல நிகழ்ந்தன. திருதராட்டிரன் மனம் நடுங்கினான்; திரௌபதியை வணங்கித் தன் புதல்வர்கள் அறியாமையால் செய்த பிழையைப் பொறுக்குமாறுவேண்டினான்; அவர்கள் செயலைப் பித்தர் செயலாகக் கருதி மறக்குமாறு வேண்டினான்; பாண்டவர் ஒவ்வொருவர்க்கும் தனித்தனியே ஆறுதல் உரைத்தான்; தான் தம்பி பாண்டுவிடத்துக் கொண்டிருந்த அன்பு பற்றிக் கல்லும் கரையக்கூறி, ஏதோ விளையாட்டு எனத்தான் கருதியது, இவ்வளவிற்குக் கொடியதாக முடியும் என்பதைத் தான் அறியாமையையும் சொல்லிச் சூதுபோரில் அவர்கள் இழந்தவற்றையெல்லாம் அவர்

களே எடுத்துக்கொண்டு நாட்டிற்கு மீண்டு செல்லுமாறு விடை கொடுக்கலுற்ருன். இந்நிலையைக் கண்ட சகுனி மனம் கருகினுன்; தான் இழந்தவற்றையெல்லாம் தருமன் பெற்றுச் செல்ல விடுவது வயப்புலியை வாலுருவி விடுவதற்கு நிகர் ஆகும் என்ருன் ;

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

அன்ருே? "நீவிர் வாயினுற் சொன்ன சொற்களேயும் அவமானங்களேயும் பாண்டவர் மறக்க மாட்டார் என்பது ஒருதலே. ஆதலின் நாட்டைமீட்டுக் கொடுப்பது பெரும் பிழையே" என்று இடித்துரைத்தான்.

அடிமை நீங்கல்

அதுகேட்ட துரியோதனன் ஏவியவாறே, துச்சாதனன் "நாட்டை மீட்டுந் தரமாட்டோம். ஐவரும், திரெளபதியும் அடிமை நீங்கிச் செல்க" என்ருன். அவ்வுரை கேட்ட திருதராட்டிரன் ஒரு நிலேயில் நில்லாத வஞ்ச நெஞ்சமுடையவனுதலின், வீடுமன் விதுரன் முதலியோரோடு ஆராயலுற்ருன். அம்முடிவைத் திருதராட்டிரன் கருத்திற்கேற்பத் துரோணன் தருமனுக்குரைத்தான்: "பாண்டவர் பன்னீராண்டுகாட்டிலும், பிறகு ஓராண்டு நகரத்தில் மறைந்தும் வாழ்ந்து மீண்டபின் நாட்டாட்சி பெறலாம். அவ்வாறு மறைந்து வாழுங்காலத்தே அவர்களேத் துரியோதனுதியர் கண்டுவிடின் மீண்டும் அவர்கள்காடு செல்லக் கடவர்" என்ருன். அம்மொழிக்குப் பாண்டவர் உடன் பட்டனர்; நூற்றுவருக்கும் அதுவே உடன்பாடாயிற்று. திரெளபதி, தன்னேப் பணயம் வைத்துச் சூதாட அடிமையான பின் தருமனுக்கு உரிமை

யில்லை என்பதை நிறுவுவாள் போல, தானும் தருமன் முதலாயினோரும் தன் மைந்தரும் அடிமை நீங்கி உரிமை பெறுமாறு மறுசூதாட வேண்டும் என்று வலியுறுத்தினாள். தருமன் கண்ணனை மனத்திருத்தித் தன் புண்ணிய மனைத்தையும் பணயமாக வைத்துச் சூதாடி வென்று தங்கள் அடிமைத் தளையை அறுத்துக் கொண்டான்.

நூற்றுவர் முடிவு

பன்னிரண்டும் ஒன்றுமாகக் கடவ ஆண்டுகளை முறைப்படக் கழித்து மீண்ட பாண்டவர்க்குப் பாம்புக் கொடியோன் நிலம் கொடுக்க மறுத்திட்டான். உலூகன் தூதும், சஞ்சயன் தூதும் உதவாமற் போயின. கண்ணன் தூது சென்றதும் பயன் விளைக்கவில்லை. ஐந்துஊர் தரவும் ஐந்து இல்லம் தரவும் கூட மறுத்து விட்டான் கண்ணிலான் மைந்தன். "ஈயிருக்கும் இடம் எனினும் இனி அவர்க்கு ஈயேன்" என்று கூறிவிட்டான். இறுதியில் அமர் மூண்டது. பதினெட்டுநாள் பாரதப் போர் நிகழ்ந்தது. சகுனி முதலியோர் துரியோதனன் பக்கம் படைத் தலைவர்களாக அமர்ந்தனர். பதினேழாம் நாட்போரில் பாஞ்சாலி, வீமன் இவர்களுடைய வஞ்சினம் ஒரு பகுதி நிறைவேறிற்று; விசயன் வஞ்சினம் முற்றவும் வாய்த்தது. நகுலசகாதேவர் சூளுரைகளும் இனி நிறைவேற ஒரு நாட் போர் எஞ்சி நின்றது. பதினெட்டாம் நாட் போரில் அவையும் குறைவற நிறைவுற்றன. வஞ்சனைக்கு வாழிடமான சகுனி இறுதிநாட் போரில், வஞ்சினம் பிழையாமல் சகாதேவன் வேலால் மடிந்தான். கயவன் சகுனியின் வஞ்சனையே பாரத அமர்க்கு ஒரு வித்தாயிற்று. ஆம்; ஊழ்வினை அவன் வடிவில் உருத்து அமருக்கு அடிகோலிவிட்டது எனலாம்!

கட்டியங்காரன்

அறைபோகு அமைச்சன்

ஏமாங்கத நாட்டு அரசன் சச்சந்தன் விதேயநாட்டு மன்னன் மகளாகிய விசயமாதேவியை மணம் புரிந்து கொண்டான்; அவளை மணந்தநாள் முதல் தன் நாட்டுக் காவலை மறந்து, விண்ணகம் இருளுமாறு சந்திரன் உரோகிணியோடு சென்று ஒளித்தாற் போல, இன்பக் கடலில் திளைக்கலுற்றான். அமைச்சர்களில் ஒருவனாகிய கட்டியங்காரன் என்பவனை மன்னன் தன் உயிரைப் போலக் கருதி வந்தான். ஆயின் அவன் வஞ்சனை உள்ளம் உடைய அமைச்சன்; நயவஞ்சகன்; களவும் பொய்யுமே வடிவெடுத்தவன். நிமித்திகன் எனும் நல்லமைச்சனைச் சச்சந்தன் தனக்குத் துணையாக நாடாமல், இத் தீயோனையே விடாது கொண்டொழுகி வரலானான். முடியும் குடையும் நீங்கிய உயர்ந்த சிறப்புக்களை அவனுக்குச் செய்து நாடு முற்றுமறிய முரசறைவித்தான்.

திருநலம் பெறுக

ஒரு நாள் மன்னன் கட்டியங்காரனையழைத்து "நான் விசயமாதேவியை விட்டுப் பிரிதல் இயலாது. அவள் எனக்கு அமிர்தம் போன்றவள். ஆதலின் நீயே வேந்தன் போல் இருந்து என் நாட்டினைக் காத்தல் வேண்டும்" என்றான். கட்டியங்காரனும் தான் கருதியிருந்தவைகளை அரசனே கூறக்கேட்டு மகிழ்ந்தான்; "நாடு காவலை நீ எனக்கு அருளுவது யானையின் முதுகின் மேலிடும் ஆதனத்தை நாயின் மேலிட்டது போலவாகும்" என்று மறுப்பதாகக்

கூறி நடித்தான். வேந்தன் ‘என் ஆணையை நீ மறுத்து மொழியாதே’ என்று கூறினன். தீயஅமைச்சன் தொழுது வணங்கி, “வெல்வேலோய்! பழிபிறவாதவாறு நிலத்தைக் காக்கும் பெரிய பாரத்தை யான் பூண்பேன்” என்றான்.

நிமித்திகன் அறிவுரை

கட்டியங்காரன் சேனைக்காவலை மேற்கொண்டான் என்று கூறக் கேட்டான் அறிவமைச்சன் நிமித்திகன். அவன் மன்னனை எய்தி, “நினது அரசுரிமையை ஒருவன் மேல் வைத்தால், நிலமும் திருவும் நீங்கும். நீயே இதனை அறிந்து கொள்க” என்று கூறினன். அவ்வுறுதியைக் கேளாது, “கட்டியங்காரன் எனக்கு உயிராவான்; அவன் என்னைத் தவிர பிறரை இல்லான்; முன்னே பல போரிலும் பொருது வென்றுள்ளான். அவனுக்கு நான் செய்யத் தக்கனவற்றைச் செய்தேன்; அவன் எனக்குச் செய்வன செய்க. நீ சிறிதும் பொருமை பேசாதே. நீயும் நின் நிலையில் வாழ்க. இது பேச வேண்டா” என்று கடிந்துரைத்தான் காவலன். “மன்ன! நினக்குத் திருவுள்ளம் அன்றேனும் அருளிக் கேட்பாயாக; அமைச்சர் சொல்லைக் கேட்பார்க்குத் தீங்குகள் வாரா. மகளிரிடத்துக் கொண்ட காமங்காரணமாகப் பாவமும் பழியும் உற்றார் பற்பலர் காண்!” என்று நிமித்திகன் மன்னர் பலருடைய காமத்தின் அவலத்தைக் காட்டி, இடித்துரைத்தான். அருகிலிருந்த உருத்திர தத்தனும் “இந்திரனும்அமைச்சர் சொல்லையே ஏற்று நடப்பான். அவனைப்போல நீயும் அறிவு பெறுவாய்; இந்நிமித்திகனது அறிவுரையைக் கேளாமையால் நின் தேவிக்கே துன்பம்செய்து, நீ ஓரறிவே உடையவனகி விட்டாய்” என்றான். மன்னன் தன் கொள்கை தளர்ந்தானில்லை. “அமைச்சர்களே,! கருவில் தோன்றுங்

காலத்திலேயே மக்கட்கு இன்பம் எல்லாம் அளந்து வைக்கப்பட்டு உள்ளன. அவரவர்க்கு அப்பொழுதே வாழும் நாளும் அளக்கப்பட்டன. ஆதலின் அதனை எனக்கு நீவிர் சொல்ல வேண்டா '' என்று மன்னன் மறுத்து மொழியவே, நிமித்திகன் வருந்தினன்; "வேந்தே! அறநூல் வழக்கிற்கேற்ப உறுதி நோக்கி இத்துணையும் கூறினேன். நீ என்னைச் சினந்தாலும், நின் தவறு காணுமல் நான் துறவு பூணப் போகிறேன் '' என்று அவையினின்று புறப்பட்டான்.

நின் பெண்மையை என்னென்பேன்!

ஒரு நாள் வைகறையில் விசயை ஒரு கனவு கண்டாள்; "ஓர் அசோகமரம் தன் பூங்கொத்துக்களோடு வீழ்ந்தது. அதனடியில் ஒரு முளை தோன்றியது. அம் முளை எட்டுமாலைகளையுடையதொரு முடிக்கு இருப்பிடமாக நட்டு வைத்தது போல ஓங்கிவளர்ந்தது". என்று கனவு நிகழ்ச்சியை விசயை கணவனுக்குரைத்தாள். அவனும் "முளை நின் மகனுவன்; பூமாலைகள் எட்டும் அவன் மணக்கும் தேவியர்'' என்றுகூறி, மரம் வீழ்ந்ததன் பயனைப்பற்றி ஒன்றும் பேசாதிருந்துவிட்டான். அதனைத் தேவி வற்புறுத்திக் கேட்கவே, விரைவில் தனக்கு இடையூறு வரும் என்றுன். அது கேட்ட அளவில் விசயை பொறுக்கமாட்டாமல் மயக்குற்றுள். மன்னன் அவளைத் தேற்றினன்; "கனவின் தன்மையைக் மெய்யெனக் கருதும் நின் பெண்மையை நான் என்னென்பேன் என்று ஆறுதல் கூறித் துயரம் தீர்த்தான்.

மன்னவன் பகை

பின்னர் விசயை கருவுற்ருள். தனக்கு இறுதி வரும் என்பதைச் சச்சந்தன் உணர்ந்துகொண்டான்; ஆயின் அதுபற்றிக் கவலையுருமல் தேவியைக் காக்க முற்பட்டான். ஒரு மயிற்பொறி கைவல் கம்மியனுல் இயற்றப் பட்டது. அதனை விண்ணில் இயக்கவும், நிலத்தில் இறக்கவும் மன்னன் மாதேவிக்குப் பயிற்றுவித்தான். விசையையும் அதில் வல்லமை பெற்ருள். இப்பால், ஆட்சியைக் கைக்கொண்ட கட்டியங்காரன் தன் ஆணை முழுவதும் செலுத்தத் தலைப்பட்டான்; எல்லா அமைச்சரையும் தன்கீழ்ப் படுத்திக் கொண்டான்; தானைத் தலைவனிடமிருந்து அத்தலைமையைத் தானே ஏற்ருன். படையெல்லாம் அவன் வயப்பட்டன. ஒரு நாள் அக்கொடியோன் தன் அவையிற் பேசலுற்ருன்; "அரசியல் மக்களே! நம் மன்னனுக்குப் பகையான ஒரு தெய்வம் என்னைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கிறது. இரவும் பகலும் என்னை அது நெருக்கி நின்று, 'நீ அவனைக் கொன்றிடு' என்கிறது. யான் என் செய்வேன்? கூறுமின்" என்ருன். என்னேயொரு வஞ்சனை! அம்மாற்றம் கேட்டு மற்ற அமைச்சரெல்லாரும் அஞ்சினர். அது பொருமல் தருமதத்தன் என்னும் அமைச்சன் சிலவுறுதிமொழிகள் உரைக்கலுற்ருன்:

மன்னன் போய்த் துறக்கம் ஆள்க

"கட்டியங்கார! நம் வேந்தன் அந்தப்புரமே இடமாகப் பிறவற்றில் எண்ணமின்றி ஒடுங்கினுன். தன் அறிவுரையை மன்னன் கேளாமையால் நிமித்திகன் துறவு பூண்டுவிட்டான். இந்நிலம் திருமகளோடு

நினக்குரியதாயிற்று ! தன்னையாக்கிய வேந்தனைக் கொலை செய்யக் கருதுதல் குலத்தையும் திருவையும் குலைக்கும். மன்னர்கள் தேவரினும் மாண்புடையவர். வேந்து என்னும் தெய்வம் அருளுமாயின் ஒருவனை அரசாக்கும் ; காயுமாயின் சுட்டிடும். அவன் உறங்குவானாயினும் அவன் ஒளி உலகைக் காக்கும். மன்னனைக் கொன்று நாடாளக் கருதும் நின் எண்ணம் நன்றன்று. தன் கணவனைத் தவிர வேறொருவனை நாடியவளும், தன்னைப் பிழை செய்யாத மனைவியை மனத்தால் கொள்ளாது விட்டவனும், ஐம்பெருங் குரவரையும் பேணாதவனும் இன்னல் நோய்களுக்கு இரையாவர். நட்பினரை வஞ்சித்தவனும், பிறர் மனையாளை விழைந்தவனும், கன்னியர்க்குத் தீமைசெய்தவனும், உயிர்களைக் கொன்று தின்றவனும் அமைச்சனாயிருந்து அரசனைக் கொன்றவனும் ஆகிய இவர்கள் இம்மையில் குட்டநோயிலும், மறுமையில் நரகத்திலும் வருந்துவர்" எனப் பலவாறு அறிவுரை பகர்ந்தான். கட்டியங்காரன் மைத்துனன் மதனன் என்பான் வெகுண்டு உடல் வியர்த்து, "தருமதத்தா ! பகைவர்கள் தலைகள் சிதற வாளால் வஞ்சினம் பேசுவேனேயன்றி, வாயால் பேசேன். காளமேகம் போல இங்கு நீ பேசுகிறாய் ; போரில் வாளெடுக்கவும் நின்கை கூசும்" என்று முழங்கினான். என்னைத் தவிர நின் கொடுஞ்சொற் பொறுப்பவர் யாரும் இல்லை. நம்மன்னன் போய்த் தேவர்க்கு இறைவனாகச் சுவர்க்கம் ஆள்க. பூமியெல்லாம் பொன்விளையுமாறு நான் காப்பேன் '' என்று கட்டியங்காரன் வெடிபட நகைத்துக் கூறினான். "என்மீது வெகுளவேண்டா. காவலனைக் கொல்லும் கூற்றம் நிலமகளாய்க் கொல்லும் ; தான்

செய்த தவருய்க் கொல்லும் ; நீதியாகவும் அருளாகவும் கொல்லும். ஆகவே, அவனுக்கு அக்கொலை பொருந்துக" என்று மறுமாற்றம் இசைத்துத் தருமதத்தன் புறப்பட்டான்.

நங்கை நீ நடத்தல் வேண்டும்

கட்டியங்காரன் மதனனேடு சூழ்ந்து, மன்னன் சுற்றத்தாரை விலங்கிட்டுச் சிறைசெய்வித்தான் ; தன்னைச் சார்ந்தோருக்கெல்லாம் நிதியை அள்ளி வீசினன் ; பழியாகிய விளக்கைக் குன்றிலிட்டான் ; மன்னவன் தப்பிப் போகாதவாறு பெருஞ்சேனையோடு அந்தப் புரத்தை வளைத்துக் கொண்டான். கட்டியங்காரன் கொலைகுறித்துத் தானையோடு சூழ்ந்துள்ளமையை வாயிலோன் ஒருவன் மன்னனிடம் கூறினன். சச்சந்தன் நிலை கலங்கிப் பண்டை நினைவோடு படைதிரட்ட ஆணையிட்டான் ! 'கட்டியங்காரன் வீரத்தைக் கண்டுவிடுவோம் !' என்று வாளைக் கையிலேந்தி வெடிபட நகைத்தான் ; அழுது அரற்றிக் கொண்டுவந்த விசயையை நோக்கி "நங்காய் ! நீ வருந்தல் வேண்டா ; நினக்காக அன்றேனும் நின்மைந்தனைக் காப்பதற்கேனும் நீ அப்பால்தப்பிச் செல்லுதல் வேண்டும். நீ அன்று இரவிற் கண்ட கனவெல்லாம் பலித்தன காண்" என்று கூறித் தழுவி ஆறுதல் செய்து இவ்வுலகத்து நிலையாமைகளையெடுத்து இயம்பினன் ; 'இல்லினுள் இரண்டுநாள் சுற்றமே ' போன்றது என்று 'இம்மையின் வாழ்க்கையை எடுத்துரைத்துக் கவலையை மாற்றலுற்ருன். "உரிமை மகளிரை முன்னே போக்கியல்லது மன்னர் போர்க்குப் போகார். ஆதலால் இவ்வாறு யான் பேசுவது கடன் ;

நீ போவதும் கடன் ; ஏறுதற்கு மயிலூர்தியும் ஏற்ப உள்ளது" என வற்புறுத்தி, இறைவன் ஆணை மொழியைக் கூறி ஊர்தியில் அவளைச் சேர்த்தான்.

ஆண்டகை அவிந்தான்

களிற்றின் மீதமர்ந்து போர்க்களம் சார்ந்தான் சச்சந்தன்; ஊழித்தீகடலைச் சுடுவது போல முழங்கினன்; பகையானைகளின் மத்தகத்தைப் பிளந்தெறிந்தான். கட்டியங்காரனும் களிற்றை யுந்தி சக்கரப்படையோடு சார்ந்தான். மன்னன் ஓச்சிய வாளால் மந்திரியது யானையின் கை துணிந்தது. அவன் வேறொரு களிற்றில் இவர்ந்து கப்பணங்களை வழியிற் சிதறினன். கப்பணங்கள் கிடத்தலால் யானையினின்று இறங்கினன் மன்னன் ; வீரர்கள் வீசிய படைக்கு அவன் கண்கள் இமைக்கவில்லை. பண்டு, கன்னனோடு போரிட்டுப் புறங்காட்டாது நின்ற அபிமன்னுவைப் போலப் போரிற் பொலிவுற்றான் சச்சந்தன். இறுதியில் பகைவர் வேல் மார்பில் அழுந்தவே, தன் வலிகுன்றி மறையும் ஞாயிறு போல மன்னன் மாய்ந்தான்.

சீவகன் தோற்றம்

மயிற்பொறியில் விண்ணில் இயங்கிக் கொண்டிருந்த விசயை கட்டியங்காரனது வெற்றிப் பறையின் கொட்டினைச் செவியுற்றாள் ; ஊர்தியிலேயே மயக்குற்றாள். பொறியியக்கம் பிழை பட்டது. விசைகுன்றி அது நகர்ப் புறத்தே மயானத்தே வந்திழிந்தது. விசயை ஆண்டு ஓர் ஆண்மகவைக் கருவுயிர்த்தாள். மயானத் துறையும் தெய்வம் தோழியின் வடிவம் கொண்டு

வந்து அவளைத் தேற்றியது; மகனுடைய வருங் கால ஆக்கம் பற்றியெல்லாம் மொழிந்தது. தன் மகவை ஆண்டு அடக்கம் செய்ய வந்த கந்துக்கடன் அன்று தன் மனைக்குவந்த முனிவன் ஒருவன்சொன்னவாறே விசயை யின் மகவைக் கண்டு களிகூர்ந்து எடுத்துச் சென்று, தன் மனைவி சுநந்தையின் கையிற் கொடுத்தான். அவ்விரவே மகப்பிறந்தநாள் விழாவும் கொண்டாடப்பட்டது. தோழி அறிவுறுத்தியவாறு மகனது ஆக்கம் கருதி விசயை தண்டகவனத்தைச் சார்ந்து ஆண்டுத்தாபதப் பள்ளியில் நோன்பு இயற்றலானாள். கந்துக்கடன் விசயையின் சிறுவனுக்குச் சீவகன் எனப்பெயரிட்டான்.

ஓராண்டு பொறுக்க

அச்சணந்தி என்னும் ஆசிரியன்பால் சீவகனும், கந்துக்கடன் மகன் நந்தட்டனும், மற்றும் சிலரும் கல்வி பயின்றனர். கலை நலம் பலவும் நிறைந்து சீவகன் பொலிவுற்றான்; இசைக்கலையில் பெருந் தேர்ச்சி பெற்றான். ஏனைய படைக்கலைகளும் அவனுக்கு எளிதிலே கைவந்தன. ஒரு நாள், ஆசிரியன் சீவகனைத் தனியிடம் அழைத்துச் சென்று ஒரு கதை வாயிலாக அவனது பிறப்பு வரலாற்றையறிவுறுத்தினான்; பகைவனை அழிக்கக் கிளர்ந்தெழுந்த மைந்தனை நோக்கி 'இன்னும் ஓராண்டு நீ பொறுத்தல் வேண்டும்' என்று கூறினான். சீவகனும் சீற்றம் அவிந்தான். பின்னர் ஆசிரியன் தன் வரலாற்றையும் கூறித் துறவுபூண்டு தவம் செய்யக் கானகம் போய் விட்டான்.

படைஞர் தோல்வி

நாகர் உலகு போன்ற இராசமாபுரத்தில் சீவகன் இளமை நலத்துடன் வாழ்ந்து வந்தான். நிலவுலகிடைக்

காமன் எனக் காண்பவர் காமுறும் வண்ணம் சீவகன் நகரிடைத் திகழ்வா னுயினுன். 'ஞானமும் அழகும் வீரமும் சீவகனேயன்றி அவை தனியே உலகில் இல்லை' என மக்கள் அவனை வியந்தனர். நகர்ப்புறத்தே மேயலுற்ற பசுநிரைகளை ஆண்டுக் குன்றில் வாழும் வேடர்கள் ஒரு முறை கவர்ந்து சென்றனர். வேடர்களது அம்புமழைக்கு ஆற்ருது ஆயர்கள் தம் குழல்களையும், கோடரிகளையும் போட்டுவிட்டுத் தம் ஊருக்குள் ஓடித் தப்பினர். ஆயர்களின் தலைவன் நந்தகோன் ஆற்ருெணுத் துயர்ப்பட்டான். நகருள் மன்னன் கட்டியங்காரனுக்குச் சொல்ல ஆயர்கள் விரைந்தனர்; "வேடர்கள் ஆன் நிரைகளைக் கவர்ந்து கொண்டு தம்மலைக்குப் போய்விட்டனர்" என்று ஆயர் மன்னனிடம் கூறினர். வந்து செய்தி சொன்ன வாயிற் காவலனைக் கடிந்து கொண்டான் கட்டியங்காரன்; இடையரைக் கூவி நிகழ்ந்ததை அவர் வாயாலறிந்தான்; கடிதிற் சென்று ஆன்நிரையை மீட்டு வருமாறு தன் படைஞரை ஏவினுன். இருதிறத்துப் படைகளும் இரவும் பகலும் போல எதிர்த்தன. முடிவில் வேடரது வில்வலிக்கு ஆற்ருது வேந்தனுடைய நாற்படைகளும் புறங்கொடுத்தன. படையின் தோல்வியை ஆயர்கள் கட்டியங்காரனுக்குச் செப்பினர். மன்னன் வருந்தினுன்; எனினும் மேற்கொண்டொன்றும் செய்ய மாட்டாது வாளாவிருந்தான்.

நிரை மீட்சி

அரசனும் உதவாமற்போகவே, நந்தகோன் செய்திறன் அறியாது மனம் மயங்கினுன்; எவ்வாறேனும்

நிரைகளை மீட்க நினைத்தான்; "நிரைகளை மீட்டுத் தரவல்லவன் என் மகள் கோவிந்தையை மணம் செய்து கொள்வானாக. நான் அவனுக்கு அவளை மணம் புரிவிப் பேன்" என்று இராசமாபுரவீதிதோறும் முரசு அறைவித் தான். ஒருவரும் முயலாத செய்தி மெல்லச் சீவகன் செவிப்பட்டது. நந்தகோன் துயரம் கேட்டுச் சீவகன் தன் தோழருடன் சேர்ந்து வேடர்மீது படை எடுத்தான். வஞ்சினம்சாற்றித் தேர்மீதேறிப் புறப்பட்டான். வேடர் படையுள் நிமித்தம் கூறுபவன் தேர்வருகை சாற்றி வேடர் தோல்வியுறுதல் பற்றித் துணிந்துரைத்தான். சீவ கன் தேரைத் திசை தோறும் திருப்பும் ஆற்றல் கண்டு வேடர்கள் வியந்தனர்; தேர் வெள்ளம் நம்மைச் சூழ்ந் தது என்று மயங்கினர்; சீவகனோடு விற்போர்புரிய ஆற் ருது வேடர் புறங்காட்டினர். வேடர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் வில்லொலியாலேயே அவர்களை வென்று நிரை மீட்டான் சீவகன்.

புண்ணில் வேல்முறிவு

"சீவகன் தன் தோழரைத் துணைகொண்டு சென்று பொருது வேடரை வென்று நிரைகளை மீட்டுவிட்டான்" என்ற செய்தி கேட்டான் கட்டியங்காரன்; தன் படை தோற்ற பிறகு இவன் வெற்றி பெற்றுவிட்டானே என அழுக்காறுற்ருன்; புண்ணில் வேல் பாய்ந்து அது முறிந் தாற் போன்ற துயரம் எய்தி வெகுண்டான். ஆவினம் நகரத்திற்கு வந்தது. நந்தகோன் மகளைச் சீவகன் தன் நண்பன் பதுமுகனுக்கு மணம் செய்து வைத்தான். சீவக னது இவ்வெற்றி கண்டு அந்நாள் முதலாகக் கட்டியங் காரன் செற்றம் பாராட்டி அவனைக் கொல்லத் துணிந் தான்.

மாநகர்க்கு மன்னன் யாவன்?

ஒரு முறை, கட்டியங்காரன் அவையில் அனங்க மாலை என்னும் ஆடல் மகள் நாட்டியமாடினுள். இயலிசைநாடக நடையறிந்த புலவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க அவளை அரம்பையும் நாணுமாறு அணிசெய்தான் சீவகன். அனங்கமாலை முறுவல் என்னும் தோழிமூலமாக நெடுங்கண் என்னும் ஓலையை எழுதிச் சீவகனுக்கு விடுத்தாள். கட்டியங்காரனை அவள் நோக்கினுளில்லை. சீவகனிடத்து அவள் வேட்கை சென்றதைக் குறிப்பாலுணர்ந்து கொண்ட கட்டியங்காரன் கூத்து முடிந்தபின்னர் அவளை வலியக்கொண்டு அரண்மனையை அடைந்தான். அங்கும் அவள் சீவகன் நலத்தையே கூறிப் புலம்பினுள். ஆயின், கட்டியங்காரன் மேலும் அவள் பொருட்டாக உருகித் தன் அமைச்சரை நோக்கிக் கூறலுற்ருன்; "நான்கு வேழங்களை வெல்லும் ஆற்றலுடையவன் கந்துக்கடன் மகனே" என்று உலகம் அவன் பெருமையே கூறுகிறது. இம்மாநகர்க்கு யான் மன்னனோ அன்றி அவன் மன்னனோ? என்று வினவினுன்.

இழந்தேன் அரசு

"அச்சீவகன் இம்மாநகர்க்குள் பலர் தீண்டி எடுக்க முடியாத ஒரு கல்லுருண்டையைத் தானே தோளில் ஏந்தியாடினுன்; அவனே- யானையால் எடுக்க இயலாத இரண்டு கல்லினையும் வஞ்சினங்கூறி இருகைகளிலும் பூப்போல ஏந்தினுன். வேடர்களின் அம்பு மழைக்கு ஆற்ருமல் வீரம் மிக்க நம்படை தோற்று மீண்ட பின்னர், தானே சென்று அம்பு பொழிந்து நிரைகளை

மீட்டுப் புகழ்மாலே சூடினுன். அன்று நாம் பசித்து வருந்தியபோது பருப்புச் சோறு ஆயிரம் மிடாவும், நறு நெய் வெள்ளமும் பிறவும் கொணர்ந்து கொடுத்து நம் பசியைப் போக்கினுன்" என்று அவ்வமைச்சர் கூறினர். கொடியோன் சினம் பன்மடங்கு பெருகுவதாயிற்று; 'அரசையிழந்து விட்டேன்' என்று மனங்கலங்கி, அவ னைக் கொல்லும் வழியைக் கட்டியங்காரன் சூழ்வாறு யினுன்.

இசை வெற்றி

காந்தருவ தத்தையை யாழில் வெல்லக் கருதிய சீவகன் தந்தை கந்துக்கடனது இசைவை நாடினுன். 'படையமைத்துக் கொண்டு போவீர்' என்று முன்னெச் சரிக்கை யாகக் கந்துக்கடன் மொழிந்து வைத்தான். இதற்கு முன்னர் ஆறுநாட்களாக மன்னர் பலரும் காந் தருவ தத்தைக்கு யாழில் தோற்றுப் போயினர். கட்டியங் காரனும் நாள்தோறும் விழா நிகழ்ச்சிக்கு அரசன் என் னும் முறையில் வந்து வீற்றிருந்து கண்டு போயினுன். சீவகன் யானேமீதேறி யாழ் மண்டபத்தில் தோன்றினுன். ஏழாம்நாள் தோழி வீணுபதி நீட்டிய யாழ்களேயெல்லாம் குற்றமுடையன எனப் போக்கி, இறுதியில் அவள் தந்த இனிய யாழைக் கையிற் கொண்டு, தம்பி நபுலன் கையி னின்று நல்ல நரம்பை வாங்கி வீக்கி வாசிக்கலுற்ருன். பருந்தும் அதன் நிழலும்போல அவன் கண்டப்பாட்டும் வீணே இசையும் இசைந்தமை கண்டு தத்தையே வியந் தாள். அடுத்து அவள் பாடினுள். அவள் பாடிய பாடலும் இசைத்த யாழும் பொருந்தாமல் வேறுவகையாக இருந் தன. வாதத்திற்கு எடுத்த கீதத்தில் சிறிதுதரம் குறை ந்து இசையில் தோற்று விட்டாள் காந்தருவ தத்தை.

முல்லைப் பந்தைக் கொல்லை மலையாக்கினீர்

சீவகன் கழுத்தைத் தத்தையின் மணமாலை அணி செய்தது. 'சீவகன் வீணைப்போரில் விஞ்சையர் மகளை (தத்தையை) வென்று விட்டான்' என்ற ஒலி கடலொலியைக் கடந்தது. அது பொருது கட்டியங்காரன் மனம் புழுங்கிப் பிற அரசரைக் கொண்டு சீவகனைப் போரில் வெல்ல வேண்டிச் சில தீமொழிகளைச் செப்பலுற்றான். "வணிகன் மகளை அரசன் மணந்து கொள்ளுதலன்றி, அரசன் மகளை வணிகனுக்கு நீங்கள் கொடுக்கின்றமையால் மேருப்போல உயர்ந்த உம் குலத்துக்கு ஒரு பழியுண்டாக்கிக் கொண்டீர். இவ் வசைமொழி என்றும் மாறாது. அப்பழியைப் போக்கும் வாட்போருக்கு நீர் அஞ்சின், முனிவராய்க் காடு செல்லுமின். கையால் பிசைந்து போடத்தக்க ஒரு முல்லைப் பூம்பந்தைக் கொல்லைக் குன்றாக்கி விட்டீர். இனி, நும் நிலமகளும் புகழாகிய போர்வையைப் போர்த்துக்கொண்டு அவனையே நாளை நாடிச் செல்வாள். ஆதலின், இச் செவ்வியை நெகிழ விடாது போர் செய்வீர்" என்றான். அதற்கிசைந்து மன்னர்களும் சீவகனது சினத்தீயில் மூழ்கத் தலைப்பட்டனர்.

அமர் வெற்றி

கட்டியங்காரன் அங்கு வந்த மன்னர்களைக் கொண்டு சீவகனைக் கொல்ல எண்ணியதைச் சீவகனுடைய தோழன் பதுமுகன் அறிந்து கொண்டான்; அம்மன்னர்களை நோக்கி நால்வகை யுபாயமும் தோன்ற உறுதி பல உரைத்தான். சீவகன் தத்தைக்கு ஆறுதல் கூறிக் காவலோடு அவளை இருத்தி விட்டுத் தன் நண்பர்களோடும்

படைஞரோடும் சேர்ந்து, தன்னை யெதிர்த்தெழும் வேந்தரை எதிர்த்துப் போரிடலுற்றான். முடிவில் பகைமன்னர்கள் புறங்கொடுத்துப் போயினர். பின்னர் சீவகனுக்கும் தத்தைக்கும் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சியாலும் கட்டியங்காரனது பகைமைத்தீ பின்னும் கொழுந்து விடலாயிற்று.

ஆடவர் இல்லையோ ?

அவ்வாண்டு இளவேனிற் பருவத்தே இராசமாபுரத்தில் நீராட்டு விழா நிகழ்ந்தது. நீராடல் முடிந்து மாந்தர் தம் மனை மீளலுற்றனர். அதுபோது கட்டியங்காரனது அசனி வேகம் என்னும் பட்டத்து வேழம் மதம் கொண்டு கடல் போலவும், காற்றுப் போலவும், இடி போலவும் ஊழித்தீப் போலவும் தெருவில் தோன்றியது. மக்கள் அஞ்சி ஓடினர். குணமாலை என்னும் நங்கையின் சிவிகையைத் தாங்கிச் செல்பவர் கீழே வைத்து விட்டு ஓடினர். அவள் அஞ்சி நடுங்கினாள். அவள் தோழி மாலை என்பவள் "இவ்யானை என்னைக் கொன்று இவள் மீது செல்லும்போது ஒரு வீரன் தோன்றிக் காப்பான். காவாவிடில், யானிறந்தால் பின்னை ஆவது ஆகுக" என்று நினைத்துத் தன் இரு கரங்களையும் தலைமேற் கூப்பி "இவ்விடத்து ஆடவர் இல்லையோ ?" என்று கூப்பிட்டு யானை எதிரே சென்று அஞ்சிக் கவிழ்ந்து நின்றாள்.

வேழம் பெயர்ந்தது.

தோழர்கள் சூழச் செல்லும் சீவகன் குணமாலையின் துயரநிலை கண்டான்; "இப்பெண்ணுயிர் விடுதலை நோக்கி இவ்விடரை நீக்காது நான் வாழ்வதைவிடச் சாதல் குற்றமில்லை," என்று எண்ணினான்; கைக் கடகங்களை

ஏற்றிக் கச்சினுல் ஆடையை இறுக்கிக் கொண்டு அக்களிற்றின்மேல் ஆரவாரித்த வண்ணம் ஓடினுன்; மின்னலைப் போல விரைந்து அதனை எய்தினுன். குணமாலையை நோக்கிச் சென்ற யானை அவளை விட்டு நீங்கிச் சீவகனைக் கைக்கொண்டது. மைந்தனும் அதன் கொம்புகளிடையே புகுந்து, கால்களின் கீழே வட்டுப் போல அடங்கி மறைந்து அதனையகற்றினுன். கம்சன் விடுத்த குவலயாபீடத்தை யடக்கி அதனைக் கொல்லாது விடுத்த கண்ணனைப் போன்ருன் கந்துக்கடன் மகன். வேழம் பெயர்ந்தது. நங்கை உயிர் உய்ந்தாள். சீவகனும் தன் நண்பரெல்லாம் புடைசூழ்ந்து பாராட்டப் பொழிலிடைச் சேர்ந்தான்.

பற்றிக்கோணர்மின் !

சீவகனுக்குத் தோற்ற யானை நாணித் தன் கொம்புகளுக்கிடையே கையைத் தொங்க விட்டுக்கொண்டு உணவு கொள்ளாமல் வருத்தத்தோடு நின்றது. போரில் புறங்கொடுத்த வேந்தன் போல, யானை வருந்தி நிற்பவே, அதனைக் கண்டு கட்டியங்காரன் என்னுற்றது ? என வினவினுன்; "நீர் விளையாட்டன்று சீவகன் இதற்குச் சினம் விளைவித்தான். அதனுல் இது மதம்மிக்கது. இதற்கு மேல் யானும் அறியேன்" என்று பாகன் கூறவே மன்னன் நெருப்பெழச் சினந்து மதனனை நோக்கி, அச்செட்டி மகன், "வேடரோடு போரில் வென்றதையும், காந்தருவ தத்தையின் வீணைப்போரில் வந்துற்ற அரசரை வென்றதையும் நினைத்து என்னுடன் போரிடக் கருதியுள்ளான். இப்போதே அவன் ஆண்மையைப் போக்குவேன். ஓடி அவனைப்பற்றிக் கொணர்மின் !" என்று ஏவினுன்.

சிறு நரிக்குழாம் :

உருத்திரனும் உமையும்போலச் சீவகனும் குணமாலையும் மாளிகையில் தங்கியிருந்தனர். கட்டியங்காரன் ஆட்கள் சிங்கத்தைச் சூழ்ந்து நிற்கும் சிறு நரிக்குழாம் போல வந்து மாளிகையைச் சூழ்ந்தனர். தோழி அதனைக் கூறினாள். சீவகனும் கழலைக் கட்டிக்கொண்டு, வில்லையும் ஏந்தியவண்ணம் புறம்போந்து படைஞரை நோக்கி வந்த காரியம் என்ன? என வினவினான். "அனங்கமாலையை விரும்பி, அரசர் தொழிலையும் நடாத்துகிற சீவகனது வாழ்நாள் இன்று மாள்கிறது போலும்; அவனைக்கைக்கொண்டு வருக என்று எம் வேந்தன் அருளிச்செய்தான். அவனடிநிழலையடைய வருக" என்று அவர்கள் கூறவே, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்போலச் சீவகன் சினந்து தம்பி நந்தட்டனை நோக்கி "இனிக்கட்டியங்காரன் தோள்கள் சாய்ந்தன. நீ போய்த் தேரை யமைக்க" என்றேவினான். நந்தட்டன் போனபிறகு, கந்துக்கடன் சீவகனது படைக்கோலம் கண்டு அஞ்சி, "அரசனோடு பகைத்தல் அழிபவரது தொழில் ஆகும். ஆகவே, யாம் அது செய்யாது இவன் வெகுளியை நீக்கி இவர்களுடன் போகவிட்டால் அது மன்னன் வெகுளியை நீக்கும்," என்று தன் மனத்திற் கருதினான். சீவகனும் தான் ஆசிரியனுக்கு வழங்கிய சொல்லை நினைவுகூர்ந்து தன் சினம் ஆறிநின்றான். கந்துக்கடனும் சுநந்தையும் 'அரசன் காக்குமாறு ஒழுகுவது நமக்குக் கடன்' என்றனர். குரவருடைய சொல்லால் கயிறு பூட்டிப் பிணிக்கப்பட்டவன் போல் ஆனான் சீவகன். மதனன் முதலியோர் அவனைச் சிறை செய்து அழைத்துச் செல்வாராயினர்.

பிழை பொறுக்க

நகரமே சீவகன் செல்வது கண்டு துயருற்றது. சிலந்தியின் நூலால் கட்டப்பட்ட சிங்கம்போவது போலச் சீவகன் போகலுற்றான்; "என் எதிரே கூற்றுவனும் நில்லான்; இந்நிலத்தவர் யாரும் என் முன்னே பகைத்து உயிர் வாழ்வார் இல்லை. ஆதலின் நீங்கள் புலம்பி அழாதீர்கள்" என்று நகரமாந்தர்க்கு ஆறுதல்சொல்லியவாறு நடப்பானானான். 'கட்டியங்காரன் சினத்தைப் பெருநிதியம் கொடுத்துத் தணித்திடலாம்' என்று கருதிய கந்துக்கடன் பன்னிருகோடி பொற்காசுகள் கொண்டு அவன் பாதங்களில் வைத்துப் பணிந்து சொல்லலுற்றான் "மன்னவ! அருளிக் கேள்; நின் மதயானை கொடிபோன்ற ஒரு பெண்ணை, பெண்கொலை புரிந்தறியாத இவ்வூரில் கொல்லத் தொடங்கியது. நினக்கு அது வடு என்று எண்ணி என் மகன் அக்கொலையை நீக்கி அவளை உயிர் காத்தான். இந்நன்மைச்செயலே குற்றமாய் முடிந்தால் இனிக்குணம் தான் யாதுளது? "மகளிர் நடுக்கத்தை நீக்குதல் அரசனது கடனே, என்று அறியாமல், அவன்தான் மீட்ட பசு நிரைபோல எண்ணி அறியாமையாலே அவள் உயிரைக் காக்கத்துணிந்தான்; அவன் குற்றத்தைப் பொறுப்பாயாக. தொன்று தொட்டு வந்த பொருளெல்லாம் தருவேன்" என்று கூறி வணங்கி நின்றான். கட்டியங்காரன், சினந்து சொல்வானானான்:

முனிவன் மொழியமுதம்

"அசனி வேகத்தின் கொம்பே எழுத்தாணியாக, சீவகன் அகன்ற மார்பமே ஓலையாக, அவன் வென்ற திசையெல்லாம் கேட்கும்படி கள்வரைக் கொல்லுமாறு

போல, எழுதுவிப்பேன். நீ வருத்தம் நீங்கி மனைமீள்க" என்று கொடியோன் கூறக்கேட்டு, உள்ளம் நடுங்கிய கந்துக்கடன் வேழமுண்ட விளங்கனிபோல அறிவு முதலியன நீங்கிச் செயலற்று நின்றான்; அவன் முன்னர் முனிவன் ஒருவன் சொன்ன சொல்லாலே மனம் ஆறுதலுற்றான்; மனைக்குமீண்டு சென்றான்; வருந்திக் கொண்டிருந்த தன் இல்லாளை நோக்கி "ஓர் இயக்கன் சீவகனைக் காப்பான்" என்று முன்பு முனிவர் சொன்ன மொழியை இயம்பினான்; சில நாள் கழித்து அவனைக் காணலாம் என்று கூறிக் குணமாலையும் சுநந்தையும் கொண்ட துயரத்தைப் போக்கினான்.

தோழனை நினைத்தல்

சீவகன் சிறைப்பட்ட செய்தி பதுமுகன் முதலிய தோழர்கள் செவிப்பட்டது. சீவகன் நிலையையறிந்துவர ஓர் ஒற்றனைப் பதுமுகன் விடுத்தான். அவனும், தந்தை கந்துக்கடனும் வேண்டியவாறே சென்று சீவகன் சிறைப் பட்டுச் செல்வதாக மீண்டு வந்து அறிவித்தான். நண்பர் கள் ஊரைப் பலவிடத்தும் தீயிட்டு, மதனனைக் கொன்று மைந்தன் சீவகனை மீட்க எழுந்தனர். இச்செய்தி யாவும் உணர்ந்த தத்தை தன் விஞ்சையால் வழிபட்டுப் பல தெய்வங்களை ஏவி அவனை மீட்க எண்ணினாள்; ஆயின் தன் மனைவி தன்னைச்சிறை மீட்டாள் எனும்பழி சீவகனை எய்துமே என்று துணுக்குற்றாள்; செய்திறமறியாது தடுமாறினாள். "என் தோழர்கள் நகரைச் சுடுவர்; அன்றி, மதனனைக் கொல்வர். விஞ்சையில்வல்ல தத்தை யும் என்னை மீட்க உபாயம் செய்வாள். அவள் என்னை விடுதலை செய்ய நான் பிழைத்துப்போய் உயிர் வாழ்தலை

விரும்பேன். கட்டியங்காரனது உயிரை உண்ணும் நாள் எல்லை இன்னும்வரவில்லை. இப்படைகளைக்கொன்று பயன் என்ன? இதுபோது என் தோழன் சுதஞ்சணனை நினைப்பேன்'' என்று சீவகன் கருதி அவனை நினைத்தான்.

சிறை மீட்சி:

நினைவு ஆற்றலால் சுதஞ்சணன் சீவகனது நிலையை உணர்ந்துகொண்டான்; தன் ஊர்தியாகிய மேகத்திலேறினன். அவனுணையால் பெருங் காற்றும் மழையும் கடுக வந்தன. அம்மழையாலும் காற்ருலும் மாந்தர் அனைவரும் விண்ணும் மண்ணும் அறியாது கண்ணும் வாயுமிழந்து நின்றனர். சுதஞ்சணன் பிறர் அறியாதபடி சீவகனை எடுத்துக்கொண்டு மேலேயெழுந்தான். காற்றும் சிறிது நேரத்தில் நிற்கவே, வீரர்கள் சீவகனைக் காணது திகைத்தனர். கட்டியங்காரன் சினங்கொள்வானே என்று கருதிய வீரர்கள் வீதியிற் சென்ற ஒருவனை உருவுதோன்ருவாறு வாளாற் பிளந்து புரட்டியிட்டனர்; மன்னனை யெய்தி "வழியில் காற்றும் மழையும் இருளும் தோன்றவே, அவன் பிழைத்துப்போக முயன்ருன்; அதனுல் யாங்கள் அவன் மார்பைப் பிளந்து உருட்டினேம்.'' என்று சொல்லி அவன் நம்பும்படி செய்தனர். கட்டியங்காரனும் மதனனைப் பெரிதும் வியந்து சிறப்புச் செய்தான்.

விசைய நகரில்:

திங்கள் சில சென்றன. ஒரு நாள் சீவகன் தோழரோடு தண்டகவனத்தை அடைந்தான்; அங்குத் தவம் செய்து கொண்டிருந்த தன் தாயைக் கண்டு அவள் அறிவுரைகளை யேற்று, இராசமாபுரம் மீண்டான்;

தாய்தந்தையர் இசைவுபெற்றுக் குதிரை வணிகன் போல வேடங்கொண்டு மாமனுகிய கோவிந்தராசனது விதைய நாட்டிற்கு விரைந்து சென்முன். சீவகனே வரவேற்கக் கோநகர் அணி செய்யப்பெற்றது. நண்பர்கள் பின் தொடரப் பிடியிவர்ந்து செல்லும் சீவககுமாரனே வீதியின் இருமருங்கும் நகர மாந்தர் நல்வரவு கூறி வாழ்த்தினர். கோயிலுள் புக்க மைந்தன், மாமன் கோவிந்தனேயும் பட்டத்துத் தேவியாரையும் கண்டு வணங்கினுன். கோவிந்தராசன் தன் மந்திரியரோடு சீவகனேயும் சித்திர கூடத்தில் உடன் கொண்டு, மேல் நிகழவிருப்பன பற்றிச் சூழ்வானுயினுன். கட்டியங்காரனேடு போர்புரிய நினேந் திருந்த கோவிந்தராசன் முன்னரே நல்லதொரு நாளில் தன் மகன் சீதத்தனுக்கு அரசுரிமையைக் கொடுத்தான். சீவகனுக்குச் செய்தாற்போலவே அவன் நண்பர்கட்கும் வேந்தன் விழுமிய சிறப்புச் செய்தான்; பின்னர், கட்டியங்காரன் தனக்கு விடுத்தவோர் ஓலையைச் சீவகன் கேட்குமாறு விரிசிகன் என்பானே வாசிக்கச் சொன்னுன்.

சூழ்ச்சி இதுதான்

"கட்டியங்காரன் ஓலயிது. விதைய நாட்டு மன்னன் காண்க. ஒரு பொய்ப்பழி என்மேற் கிடந்தது. அதனே நீயும் பொய்யென்று கருதாமல் மெய்யென்றே கொண்டாய். இனி, என்னுயிர் சிதையுமாறு, என் நெஞ்சம் பிளந்து காட்டித் தெளிவித்தாலும் தெளிபவர் இல்லேயே; என்ன செய்வேன்! ஆதலின் நானேயாயினும் தெளிவிக்கிறேன். முன்னர், பட்டத்து யானே அசனி வேகம் மதம் கொண்டு பிற யானேகள் ஓடுமாறு பாய்ந்து தேர்களேயழித்துக் குதிரைகளேக் குத்தி வீரர்களேயும்

சீறி ஊரைக் கலக்கிற்று ; அது பொருமல் சச்சந்தன் பாகர் நூறு பேரை ஏவினுனுக, அஃது அவர்களையெல் லாம் கொன்றது. மன்னன் அது கேட்டுத் தானே சென்று அதனை யடக்கி அதன் மீது ஏறிச் சென்முன். பின்னர் தூணில் கட்டும் போழ்தில் அவனை அது கொன்றது. இதுவே நடந்த செய்தி. உலகம்கூறும் பழியை நீ நினைத் துக்காலம் தாழ்த்தாமல் என் சொல்லைத் தெளிந்து ஈங்கு வரின் பழியும் நீங்கும்;நினக்கு யான் உயிரையும் ஈவேன். இனி எனக்கு நீயே இறைவன் ஆதலின், இந்நிலவுரி மையை விரும்பி ஏற்க விரைவில் வருக" என்று எழுதிய ஓலையை விரிசிகன் வாசித்தான். 'கூற்றத்தைக் கையால் விளிக்கிருன் கட்டியங்காரன்' என்று சீவகன் கருதி நகைத்து, 'இவனைக் கொல்லச் சூழ்ச்சி இதுவே போல் வேறொன்றில்லை' என்முன். கோவிந்தன் அதுகேட்டுக் "கள்ளத்தால் நம்மைக் கொல்லக் கருதியவனை நாமும் அவ்வாறேவெல்லக் கருதியுள்ளோம்" என்று கூறினுன். பின்னர்ப் படைகூடும்படி ஊரிலே முரசறையுமாறு ஆணையிட்டான். அவ்வாறே முரசமும் முழங்கியது. வந்து திரண்ட படைகளைக் கோவிந்தன் மாடத்துச்சியில் குடை நிழலில் நின்று காண்பானுயினுன்; சீவகன் முதலி யோர்க்கு வேண்டுவன கூறி அவன் யானை மேற் சென்முன்.

இருமடங்கு சிறந்தன

கோவிந்தராசன் படைகள் ஆரவாரத்தோடு ஏமாங்கத நாட்டை எய்தின. கோவிந்தன் மதிலின் புறத்தையே தனக்குப் பாடி வீடாகக் கொண்டான். அவ்வாறு கோவிந்தன் படைகள்வந்து மதிற்புறத்தில் தங்கியபோது,

கட்டியங்காரனுடைய தேவிமாரின் வலக்கண்கள் துடித்தன. தீயகனவுகளை அவர்கள் கண்டனர். கட்டியங்காரனுடைய மேனியொளி கெட்டது. கோயிலில் கோட்டான் பகற்காலத்தில் குழறியது. பின்னும் பல உற்பாதங்கள் நேர்ந்தன. கோவிந்தராசன் வருகையறிந்து மகிழ்ந்து, அவனையும் வஞ்சனையாற் கொன்று அவன் நாட்டையும் கவரலாம் எனக் கட்டியங்காரன் களிப்புற்றிருந்தான்; அவனுக்குச் சிறப்புச் செய்பவன் போல யானை தேர் குதிரைகளை அவன்பால் விடுத்தான். கோவிந்தராசனும் அவ்வாறு சிலவற்றை அனுப்பிச் சிறப்புச் செய்தான். "கட்டியங்காரன் யான் அனுப்பியவற்றைவிட இவை இருமடங்கு சிறந்தன" என்று மகிழ்ந்தான்.

வேழத்து இன்னுயிர் விழுங்கும்

கோவிந்தன் சீவகனைக் கொண்டே கட்டியங்காரனுடைய உயிரை வாங்க ஒரு சூழ்ச்சி செய்தான்; "நான் வகுத்த திரிபன்றியைத் தவருமல் குறிவைத்து எய்தவனே என்மகள் இலக்கணைக்குக் கணவனுகத்தக்கவன்" என்று முரசறைவித்தான். செய்தியறிந்து பல நாட்டு வேந்தரும் இராசமாபுரத்திற்கு வந்து சேர்ந்தனர். திரிபன்றியை எறிவதற்குப்பலர் முயன்றனர். அனைவரும் தோல்வியுற்றனர். ஆறுநாள் சென்றபின் ஏழாம்நாட் காலையில் களிற்றின்மேல் ஏறிக்கொண்டு சீவகன் புறப்பட்டான். வேழத்தின் மேற்ருேன்றிய வீரனைக் கண்ட கட்டியங்காரன் புலியைக் கண்ட மான் போலக் கலங்கினுன். "புலியை அகப்படுத்திக் கொண்ட யான் அதனை வாலுருவி விட்டுவிட்டேன்; மதனன் இவனைக்

கொல்லாது உயிர்பிழைக்கவிட்டுவிட்டான்" என்றுயானை யிலிருந்த வண்ணம் கைபுடைத்து மெய்சோர்ந்தான். சீவகன் களிற்றினின்று இறங்கி வில்லின் நாணைத் தெறித்தான். அப்போதே பகைவர் வாழ்நாள்களும் முடிந்தன. கட்டியங்காரன் நல்வினையும் திரிபன்றியாகிய பொறியும் அற்றுவிழுமாறு சீவகன் அம்பு செலுத்தினான்; அம்பு சென்று "திரிபன்றியை வீழ்த்தியது. அவ்வெற்றி கண்டு சேனைக்கடல் ஆரவாரித்தது. கோவிந்தன் சீவகன் தோன்றிய குலத்தைக் கட்டியங்காரனுக்கு முதலிற் கூறிப் பின்னர் எல்லாருமறியச் சாற்றினான். அதுகாலை வானத்தில் ஓர் இயக்கன் தோன்றிச் "சீவகன் என்னும் சிங்கம் கட்டியங்காரனும் வேழத்து இன்னுயிரை விழுங்கும்" என்றான்.

இன்னதால் வினையின் ஆக்கம்

"விஞ்சையர்களின் படைகொண்டு வந்துவிட்டாய் என அஞ்சுவேனோ? என் ஆற்றலை உன் தந்தை அறிவான்; நீயறியாய்; உன்னையும் என்னைக் களவாற் கொலை சூழ்ந்த கோவிந்தனையும் அழிப்பேன்" என்று கூறிக் கட்டியங்காரன் ஆரவாரித்தான். சீவகன் வெற்றியைக் கேட்ட அளவில் மதனனும் கார்காலத்து இடிபோலக் கனன்றான்.

இருதிறத்துப்படைகளும் திரண்டன; போரிட்டன. இறுதியில் கட்டியங்காரன் வகுத்த பதும வியூகம் என்னும் படைஅணி சிதைந்தது. அவன் மக்கள் நூற்றுவரும் அழிந்தனர். தனியாக நின்றுகொண்டிருந்த கட்டியங்காரன் ஊழ்வினையை வியந்து சீவகனிடம் சில உரைப்பானாயினான்; "நல்வினையுடையோர் நஞ்சுண்டாலும் அமுத

மாம். அந்நல்வினை இல்லையேல், அமுதும் நஞ்சமாம். இருவினையின் ஆக்கமும் இத்தன்மையாயிருக்கிறது. யான் இவனைக் கொல்வேன் என்றும் இவன் என்னைக் கொல்வான் என்றும் அறிவுடையார் நினைக்க மாட்டார். நின்கையில் அகப்படுவதற்குரிய தீவினையை யுடைய என் புதல்வரை ஆக்குவார் யாரே? நல்வினையுடையவரை ஒன்றும் இல்லாதவராகச் செய்யவும் முடியுமோ? இனி ஞாயிறும் தன் தன்மை கெட்டுத் தண்மை யெய்தும் போலும்; திங்களும் தன் தண்மை திரிந்து வெம்மை யெய்தும் போலும்; நெய்யும் திரியும் மாண்டபோதே விளக்கு அணைந்து போமன்றோ? அதுபோல, நல்வினை மாயும்போது செல்வம் கெடாதபடி அதனைப் பிடித்து வைப்பார் யாருமில்லை. ஆதலின் இது நின் செயலன்று; எல்லாம் நின் நல்வினையே" என்றான்.

கலியரசு அழிந்தது:

சீவகனும் நகைத்துப் "போர்க்கு அஞ்சினாய், ஆதலால் இவ்வாறு பேசுகின்றாய்" என்று இகழ்ந்தான். கட்டியங்காரன் "வெல்வது விதிவலியால் உண்டாம். வீர! நின் கையில் உள்ள வேல் என்மேல் வந்தால் நான் கண் இமைப்பேனாயின் என்னை 'அஞ்சினாய்'என்று நகைப்பாய்" என்று கூறிக் கையிலே வில்லையெடுத்து இடி யென முழங்கினான்; "நான் தோற்றுப் போயின், மனையாளைக் கண்டு அஞ்சி, வந்த விருந்தினரின் முகத்தை மகிழ்ச்சி செய்யாதுவிட்ட இழிந்தவன் ஆகக்கடவேன்" என்று வஞ்சினம் சாற்றி அம்பைத் தொடுத்தான் சீவகன். அவன் விடுத்த கணை கட்டியங்காரனுடைய அம்பையும் வில்லையும் வீழ்த்தவே, அவன் சினந்து தேர்மீது பாய்ந்

தான். சீவகன் விடுத்த பகழிகள் அவன் மார்பிற் பாய்ந்து ஆவியைப் பறித்துப் போயின. விண்ணி னின்று மதி வீழ்வது போலக் கொடியோனும் வீழ்ந்து மாய்ந்தான். கலியரசு அழிந்தது. 'இனிப் போர் ஒழிக' என்று கொற்ற முரசம் கொட்டிற்று. வீரர்கள் ஆரவாரம் செய்தனர். சீவகன் வீரர்க்குரிய சிறப்பினைச் செய்து கொண்டான்.

முழு வஞ்சகன்

கட்டியங்காரன் முடிவோடு சீவக சிந்தாமணியுள் பெரும்பகுதி முற்றுகிறது. எஞ்சிய பகுதி சீவகன் பூமகளை மணப்பதும், இலக்கணையை மணப்பதும், பின்னர்த்துறவு பூண்பதும் ஆம். தொடக்கம் முதல் கட்டியங்காரனை முழு வஞ்சகனாகவே காண்கிறோம் ; எவ்வாறேனும் சீவகனை முடிக்கவேண்டும் என்ற ஓரெண் ணமே அவன் மனத்தில் முனைந்து நிற்கிறது. அதனால் சீவகனுடைய நல்ல குணம் செயல்களையும் நாட அவன் உள்ளம் மறுக்கிறது. மக்கள் நூற்றுவரும், மதனன் முதலிய சுற்றத்தாரும் இருந்தும் அவனுக்கு உறுதி சொல்லுவார் ஒருவரும் இலர். சொன்னாலும் கேட்டிரான் போலும்! சீவகனை வாயார ஒருமுறை கட்டியங்காரன் புகழ்கின்றான். சீவகனைக் கொன்று வந்ததாகச் செப்பிய மதனனை நோக்கிக் கூறுவது அது :

" அருள்வலி ஆண்மை கல்வி அழகறி விளமை
ஊக்கம்

திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம்

ஒருவர் இவ்வுலகில் யாரே சீவகன் ஒக்கும் நீரார் ?" என்றான். 'சீவகன் மாய்ந்து விட்டான்' என்று தெரிந்த பின்னரே சொல்லும் புகழ்ச்சியுரை இது.

காப்பியவுலகம் நிலவும் அளவும் சீவகன் சிறப்பும் கெடுமதி அமைச்சனாகிய கட்டியங்காரன் சிறுமையும் நிலைத்து நிற்கும்.

---

4. நயவஞ்சகன்

கண்ணகியின் கற்புத் திறத்தால் தீ மதுரை மாநகரையே எரித்தது. அவ்வெரியின் வெம்மை தாங்க மாட்டாமல், மதுரையின் காவல் தெய்வமாகிய மதுராபதி கண்ணகியின் முன்னிலையில் செல்லமாட்டாது, பின்னிலையில் தொடர்ந்தது. "நங்காய்! என் குறைகேள்" என்று வேண்டியது. "யார் நீ என்பின் வருவோய் ? என் துயரம் அறிவாயோ ?" என்று பத்தினி வினவினள். மதுராபதி "நின் துயர்நிலை அறிவேன். இம்மதுரை மாநகரைக் காக்கும் காவல் தெய்வம் யான்; என்பெயர் மதுராபதி என்பது. யான், நின் கணவனுக்கு விளைந்த துன்பம் கண்டு கவலையுறுகிறேன். என் நெஞ்சம் வருந்துகிறது. ஒரு செய்தி கேட்பாயாக. மதுரைக் கோமகனுன பாண்டியனுக்கு ஊழ்வினை வந்துருத்த வகையைக் கூறுவேன் கேள். உன் கணவனுக்குத் தீமை வந்த வினைத்திறமும் கூறுவேன் கேள்" என்று கூறியது.

இழுக்கம் தாராது

"இப்பாண்டியன் செவிகள் நீதிமொழிகளை யன்றி, வாயிலிற் கட்டிய மணி நாவோசையைச் சிறிதும் கேட்டறியாதன. தன் திருவடிகளைத் தொழுது வணங்காத பகை மன்னராலன்றிக் குடிமக்களால் இவன் செங்கோல் பழி தூற்றப்படாதது. இன்னுங்கேள் : இப்பாண்டியன் குடிப்பிறந்தவர் ஒழுக்கமிக்கவர்.

பொற்கைப் பாண்டியன்

"வறிய வாழ்க்கையுடைய கீரந்தை என்னும் அந்தணன் ஒருவன் தன் மனையாளிடம் ஒரு நாள் உரையா

டிக் கொண்டிருக்கையில், இப்பாண்டியர் குல முன்னேன் ஒருவன் நகர் சோதனைக்குச் சென்று கொண்டிருந்தான். வீட்டிற் கள்வன் புகுந்தானே? என வேந்தன் ஐயுற்று வீட்டுவாயிற் கதவைத் தட்டினன். அவ்வோசை கேட்டு அந்தணன் தன் இல்லாளை ஐயங் கொண்டு நோக்கவே, அவள் சொல்லுவாள் : "அரசனது காவலன்றி வேறு காவல் நினக்கு இல்லை, என்று கூறி முன்பு ஒருநாள் என்னை மனையில் இருத்திச் சென்றீரே; இன்றும் அக்காவல் என்னைக் காவாதோ ?" என்று கூறவே, அம்மொழியை வெளியே கதவருகே நின்று கொண்டிருந்த மன்னன் கேட்டான்; காய்ந்த இரும்பாணி போல் அச்சொல் அவன் செவிப்புக்கது. கங்கையாடப் போன கணவன் மீண்டு விட்டான் என்பதுணர்ந்து கொண்டான் கொற்றவன்; தான் கதவைப் புடைத்த செயல் விபரீதம் விளைத்து விட்டதையும் தெரிந்து கொண்டான். அப்பெண் மீது கணவன் ஐயுருவகையாக மன்னன் அத்தெருவின் எல்லாக் கதவுகளையும் தட்டிவிட்டுச் சென்ருன்; மறுநாள் அதுபற்றி அந்தணர்களெல்லாரும் மன்னனிடம் வந்து வழக்குரைத்தனர். அவர்கள் முன்னிலையில் பாண்டிய மன்னன் தன் தவற்றைக் கூறி, அக்குற்றத்திற்குத் தண்டமாகத் தன்கையைக் குறைத்துக்கொண்டான்.

பொறுத்தல் நும் கடன்

"இன்னும் கேட்பாயாக. சோழ நாட்டில் பராசரன் என்னும் அந்தணன் ஒருவன் சேரமன்னனது கொடைத்திறம் கேள்வியுற்றுக் காடும் நாடும் ஊரும் கடந்து, மலயமலையையும் கடந்து சேரனது வஞ்சிநகர் எய்தினன். ஆங்கு இருந்த அந்தணர்களுடன் தம் நாவன்மை

யால் தருக்கம் செய்து வென்று பார்ப்பன வாகைசூடிப் பலநல்ல அணிகலன்களைப் பரிசில், பெற்றான்; தன் நகர் மீளலுற்றான்; மீளும் வழியிடையே பாண்டிய நாட்டில் தங்கால் எனும் ஊரில் ஒருபோதி மன்றத்தில் தன் கோல், குண்டிகை, வெண்குடை, பரிசுமுடை, பாதக் காப்பு இவற்றைக் களைந்துவைத்து இளைப்பாறினான்; சேரனைப் பலவாறு வாழ்த்தி மகிழ்ந்தான். அதுபோது பார்ப்பனச் சிறுவரெல்லாம், விளையாடிக் கொண்டிருந் தவர், அவனைச் சூழ்ந்து கொண்டனர். பராசரன் அவர் களை நோக்கித் தன்னோடு வேதம் ஓதிப் பரிசில் பெற்றுச் செல்லுமாறு கூறினான். சிறுவர்களும் உடன் ஓதினர். வார்த்திகன் என்பவனுடைய புதல்வன் தக்கிணன் என்பான், தன்னையொத்த மறைச்சிறார் யாவரினும் மிக்கு ஓசைமுறை வழுவாது மனமகிழ்வோடு பராசர னோடு ஒப்ப வேதம் ஓதினான். அந்தணன் மகிழ்ந்து தான் பெற்றுவந்த பரிசில்களில் சிலவற்றை அவனுக்கு ஈந்துவிட்டுப் புறப்பட்டான். வார்த்திகன் மனையில் செல்வம் நிறைந்தது கண்டு பொறாமல், அரச வினைஞர் சிலர் ‘அரச நீதியின்றிப் புதையற் பொருளை இவன் தானே கவர்ந்து கொண்டான்’ என்று பழி கூறி வார்த்தி கனைச் சிறைக்கோட்டத்திலிட்டனர். வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பவள் அலந்தனள்; புலந்தனள்; அழு தனள்; பொங்கினள்; அவ்வூர்க் கொற்றவை அவள் துயரைப் பொறுக்கமாட்டாதவளானாள். அவ்விறைவி யின் கோயிற் கதவு திறக்க இயலவில்லை. அச்செய்தி மன்னன் செவிக்குப் போந்தது. ‘நீதிமுறை தவறிய செயல் ஏதேனும் நிகழ்ந்ததோ? கொற்றவைக்குற்ற துயரத்தை அறிந்து வருக’ என்று வேந்தன் பணிக்கவே

வார்த்திகன் சிறைப்பட்ட செய்தியைக் காவல் வினைஞர் சொல்லி நின்றனர். உண்மையை நாடியுணர்ந்த மன்னன் வார்த்திகனைச் சிறையினின்று விடுதலை செய்தான்; "அறியாத மாக்களால் என்முறை தவறிற்று. இதனைப் பொறுத்தல் நும் கடன்" என்று கூறித் திருத்தங்கால், வயலூர் என்னும் ஊர்களை அவனுக்குப் பரிசில் நல்கினான்; கொற்றவை கோயிற் கதவும் திறந்து கொண்டது. "இடுபொருளாயினும் படுபொருளாயினும் எடுத்துக் கொண்டவர்க்கே அஃது உரியது" என்று மன்னன் முரசறைவித்தான்!

இட்டசாபம் கட்டியது

"அன்றியும் கேள். 'ஆடித்திங்களில் இருட் பக்கத்தே, அட்டமியும் கார்த்திகையின் குறையும் சேர்ந்த வெள்ளிவாரத்தில் மதுரை எரியுண்டு அரசழியும்' என்ற சாபவுரையும் உண்டு. மேலும், முற்பிறப்பில் கோவலன் பரதன் என்ற பெயருடையவனாய்ச் சிங்கபுரத்தை யாண்டு வந்த வசு என்னும் மன்னனிடம் துணைத் தொழில் பூண்டிருந்தான். கபிலபுரத்துச் சங்கமன் என்னும் வணிகன் சிங்கபுரத்துக்குத் தன் மனைவியோடு வந்து வாணிகம் செய்யலுற்றான். அச் சங்கமனைக் 'கபிலபுரத்து வேந்தனாகிய குமரனின் ஒற்றன் இவன்' என்று பரதன் தன் அரசனிடம் பற்றிக் கொடுத்துக் கொலை செய்வித்தான். கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி நீலி என்பாள் தனக்கு நிலைக்களம் காணாமல் பலவாறு வருந்தி அழுதாள்; பதினான்கு நாட்கள் கழிந்த பின்னர் ஒரு மலை மீதேறி விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டாள். அவள் இறக்குமுன்

எமக்கு இத்துயர் செய்தவர் மறுமையில் தாமும் இத் துயரம் உறுக' என்று சாபமிட்டாள். அவள் இட்ட சாபமே நின்னைக் கிட்டியதுகாண். பண்டைத் தீவினை வந்து உருத்தபோது செய்தவமும் உதவாது போய் விடும்,'' என்று வினைப்பயன் விளைந்த வரலாற்றை விளங்கவுரைத்தது. வீரபத்தினியாகிய கண்ணகியை வேண்டித் தீயினால் மேலும் எரியாதவாறு மதுராபதி என்னும் தெய்வம் மதுரையைப் பாதுகாத்தது.

பொற்கொல்லன் செய்த தவறு

கோவலனுயிரையுண்டது பண்டை வினையே என்பது தெளிவு. ஆயினும் அவ்வினை மதுரைப் பொன்வினைக் கொல்லன் ஒருவன் வாயிலாகத் தன்னை வெளிப்படுத்தியது. பொற்கொல்லன் போந்து கோவலனைச் 'சிலம்பு கவர்ந்த கள்வன், எனக் கொல்வித்தமையைக் காணும்போது, ஆராய்ச்சியின்றிக் கோவலனைக் கொல்ல ஆணையிட்ட பாண்டியன்மீது நம்சினம் செல்லவில்லை. வினைவிளைவின் காரணத்தால் அவன் வாய் சோர்ந்து சொல்லி விட்டதாகவே உணர்கின்றோம். ஆயின், பொன்செய்கொல்லன் செயலை மாத்திரம் 'தீவினை யுருத்த திறமிது' என்று கருத நம் மனம் இடங் கொடுக்கவில்லை. அவனைக் கயமகனாக—இழிந்த தீவினையுடையவனாக-மதிப்பிடவே நம்முள்ளம் ஒருப்படுகிறது. அவ்வாறு முடிவு செய்யும் வண்ணமாக அவனுடைய சொல்லும் செயலும் ஒருங்கு அமைகின்றன.

மாதரி அடைக்கலம் ஏற்றல்

மதுரை செல்ல வழித்துணையாக வந்த கவுந்தியடிகள் கோவலன் கண்ணகி இருவரோடும் மதுரைப்

புறஞ்சேரியில் தங்கியிருந்தார்; அதுகாலை தன்னைக் கண்டு அடிபணியவந்த இடைக்குல மடந்தையாகிய மாதரியிடத்தே கோவலன் கண்ணகி யிருவரையும் அடைக்கலப் படுத்தினார். அடைக்கலப் பொருளைக் காத்தோம்பும் சிறப்பையும் விளக்கினார். மாதரி இருவரோடும் மன மகிழப் புறப்பட்டாள். காவலையுடைய அழகிய சிறிய வீட்டில் அவர்களைத் தங்க வைத்தாள். தன் மகள் ஐயை என்பவளைக் கண்ணகிக்குத் துணையாக இருக்குமாறு அமைத்தாள்.

மாறி வருவன்

கோவலன் சிலம்பு விற்கச் சென்ற அன்று கண்ணகி தன் கைவினைத்திறத்தால் நல்ல அடிசில் ஆக்கிக் கணவனுக்குப் படைத்தாள். கண்ணனும் நப்பின்னையும் போலக் காதலர் இருவரும் ஐயைக்கும் அவள் அன்னைக்கும் காட்சி வழங்கினர். உணவு உண்டு இனிது வீற்றிருந்த கணவனுக்குக் கண்ணகி வெற்றிலை பாக்கு வழங்கினாள். கோவலன் அவளை 'அருகில் வருக' என அழைத்துத் தன் பண்டைப் பொய்வாழ்வு குறித்துப் பலபட வருந்திப் பேசி இரங்கினான். கண்ணகி "நும் சொல்லை மாற்றாத மனவாழ்க்கை யுடையேனாதலின் நும்மோடு மதுரைக்கு வந்துவிட்டேன்" என்றாள். கோவலன் அவளை அன்போடு பார்த்துப் "பொன்னே! மணியே! புனைபூங் கோதாய்! நாணின்பாவாய்! நீள்நில விளக்கே!-கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி" எனப் பலவாறாகப் பாராட்டினான். பின்பு "நின் சிறிய பாதச்சிலம்புகளில் ஒன்றைக் கொண்டு போய்மாறி வருவேன்; மீளும் வரை மயங்காதிருப்பாயாக" என்று ஆறுதல் கூறிப் புறப்பட்டுச் சென்றான். 'மாறி

வருவேன்' என்று அவன் சொன்ன மொழியில் 'விற்று வருவேன்' என்ற பொருளன்றியும், 'இவ்வுடலை விட்டுத் தேவர் உருவில் வருவேன்' என்றோர் கருத்தும் ஒலிக்கிறது.

கூற்றத்தூதன்

கண்ணகியின் தனிமைகண்டு தன் கண்களில் பெருகும் கண்ணீரைக் கோவலன் அவள் அறியாதவாறு மறைத்துக்கொண்டு தளர்ந்த நடையோடு இடையர் சேரியைக் கடக்கும்போது ஒரு காளை அவனை எதிர்த்து வந்தது. அவன் தீய சகுனமாக அதனைக் கருதாமல், எருமன்றத்தைக் கடந்து சென்றான். கணிகையர் வீதியையும் கடந்து, கடைத்தெருவை அவன் கண்ணுற்றான்; நுண்வினைப் பொற்கொல்லர் நூறுபேர் பின்வர, சட்டையிட்டுப் பெருமித நடையோடு கையில் ஒரு பிரம்பு கொண்டுவந்த பொற்கொல்லனைக் கோவலன் கண்டான்; "இவன் பாண்டிய மன்னனிடம் சிறப்புப் பெற்ற பொன் வினைக்கொல்லன் போலும்!" என எண்ணி, அவனிடம் சென்றான்; "அரசமாதேவிக்கு அணியத்தகும் சிலம்பு ஒன்றை விலைமதிக்கவல்லையோ?" என்று வினவினான். "அடியேன் அறியேன்; ஆயினும், மன்னர்க்குரிய முடி முதலிய அணிகளைச் சமைப்பவன் யான்" என்று பணிவோடு கூறி அக்கூற்றத்தூதன் கோவலனைக் கைதொழுதான்.

கலங்கா உள்ளம்

கோவலனும் சிலம்பிருந்த பைவாயை அவிழ்த்தான்; மணியும் வயிரமும் இழைத்த அச்சித்திரப்பொற்

சிலம்பைப் பொற்கொல்லன் கண்ணுற்ருன். அதன் நுண்ணிய வேலைப்பாட்டுத் திறமெல்லாம் விரும்பி நோக்கினன்; "கோப்பெருந்தேவிக்கல்லது இ ச் சி ல ம் பு பிறர்க்குப் பொருந்தாத நலமுடையது. வேந்தனுக்கு யான் இதுபற்றி விளம்பி வரும்வரை நீர் இங்கு ஓரிடத்தில் இருப்பீராக" என்று கூறிப் புறப்பட்டான்; போகும் போதே "அரண்மனையினின்று அரசமாதேவியின் சிலம்பை நான் கவர்ந்து கொண்டுள்ள செய்தி வெளிப்படு முன்னர், அச்சிலம்பையொத்த இச்சிலம்பை விற்கக் கொணர்ந்துள்ள இப்புதியோன் மூலம் என் களவுக் குற்றத்தை மறைத்திடுவேன்" என்று கலங்காத தன் உள்ளத்தைக் கரந்துகொண்டு செல்கிருன்.

கொன்று அச்சிலம்பு கொணர்க

இப்பால், நாடகமொன்றை அவையில் தேவியோடு நயந்து கண்டுகொண்டிருக்கிருன் மன்னவன். 'கூடல் மகளிருடைய ஆடலும் முகத்தோற்றமும் கொற்றவனைக் கவர்ந்துவிட்டன' என்று கோப்பெருந்தேவி ஊடல் கொண்டு அதை மறைத்தவாறே 'தலைநோய்' எனக் கூறிச் சென்றுவிடுகிருள். அவளது புலவியைக் குறிப்பால் உணர்ந்துகொண்ட மன்னன், நாடகஅவையினின்று நீங்கித் தோழியர் சிலரோடு அவளைப் பின்தொடர்ந்து செல்லலுறுகிருன். அந்தப்புர வா யி லை அவன் அணுகுதற்குமுன், பொய்த்தொழிற் கொல்லன் அவனைக் கண்டுகொள்ளுகிருன்; அவனடிகளில் வீழ்ந்து, "கன்னக் கோல் கவைக்கோல் இல்லாமல், மந்திரத்தையே துணையாகக் கொண்டு வாயிற் காவலரையெல்லாம் தூங்கச் செய்து, கோயிலில் தேவியது சிலம்பைக் கவர்ந்த கள்வன் ஊர்க்காவலர் கண்ணிற்படாது மறைந்து வந்து

இதுபோது கடைத்தெருவில் இருக்கிறுன்" என்று சாற்று கிருன். தீவினை தன் பலனைக் கொடுக்கும் காலம் வந்து விட்டது! ஆதலின் நீதி வழுவாச் செங்கோல் தென்னவன் வாக்கில் அநீதி பிறக்கிறது. பாண்டிமா தேவியின் ஊடலைத் தணிக்கச் செல்லும் மன்னனுக்கு அச்சிலம்பு ஊடல் மருந்தாய்த் தோன்றுகிறது. தன் வேலைக்காரர்களை நோக்கி 'கொல்லக் கொணர்க' என்று சொல்ல நினைத்தவன், வினைவயத்தால் "அக்கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க" என்று ஏவினுன்!

சிலம்பு காண வந்தோர் இவர்!

பொற்கொல்லன் தன்னெண்ணம் முடிந்து விட்டதாக மகிழ்ந்து வேலைக்காரர்களோடு புறப்படுகிருன்; தீவினையாகிய வலையில் முன்னரே அகப்பட்டிருந்த கோவலனைக் குறுகுகிருன்; "மன்னன் ஏவற்கிணங்க நின் சிலம்பைக் காண வந்தவர்கள் இவர்கள்," என்று கோவலனை நோக்கிக் கூறி, அவர்களைத் தனியிடம் அழைத்துச் சென்று, அச்சிலம்பு அந்தப்புரச் சிலம்போடு எவ்வாறு ஒத்துள்ளது என்னும் நுட்பங்களையெல்லாம் அவர்கட்குப் புலப்படக் கூறுகிருன். தன் சிலம்பு நல்ல விலை பெற நயந்து பொற்கொல்லன் பேசுவதாகக் கோவலன் கருதுகிருன், பாவம்! "இலக்கண முறையோடு காணப்படும் இவன் கொலைசெய்யப்படத் தக்கவன் அல்லன்" என்று அக்கொலைகாரருள் ஒருவன் கூறினுன். அவர்களை நோக்கி நகைத்துக் கருந்தொழிற் கொல்லன் களவு நூல்களிலுள்ள சில நுட்பங்களைக் காட்டியுரைக்கலுறுகிருன்:

நூல்திறம்

"மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்னும் எட்டினையுமன்றே களவு

செய்துண்ணும் மாக்கள் துணையாகக்கொண்டு திரிகின்றனர். இக்கள்வனது மருந்தில் அகப்பட்டீராயின், நம் மன்னனால் கடுந்தண்டனையுறுவீர். இத்தகைக் கள்வர் நாவில் மந்திரம் சொல்லுவாராயின், தேவகுமரரைப்போல விளங்குவர். அவரையும் யாம் காண்டல் இயலாது. தம் தெய்வ வடிவினை உள்ளத்தே அவர்கள் தெளிய நினைப்பாராயின், தாம் கைக்கொண்ட பொருளை நமக்குக் காட்டியும் மறைவர். மருந்தாலே அவர்கள் நம்மை மயக்குவாராயின், இருந்த நாம் எழுந்துபோக ஓரிடமும் உண்டோ? நல்ல நிமித்தம் வாய்த்தாலன்றி, அரும் பொருள் தானே வந்து கையிற் புகினும், அவர்கள் எளிய இடமாயினும் புகமாட்டார்; களவு நூலில் சொல்லிய தொழில்களை ஆராய்ந்து செய்வரேல், இந்திரன் மார்பின் மாலையையும் எய்துவர்! 'இப்பொருளைக் கொள்ள இவ்விடமே ஏற்றது' என்று இடங் கருதிக் களவு செய்வரேல், அவ்விடத்து அவரையாரும் காண வியலாது; அவ்வாறே காலம் கருதிப் பொருளைக் கைக்கொள்வரேல், தேவரும் அதனை விலக்கக் கூடுமோ? கருவிகொண்டு பொருளைக் களவு செய்யின் யாரே அவரைக் காண வியலும்? இரவு பகலென அவர்களுக்கு இரண்டு திறம் இல்லை. அவர்கள் களவிடத்தைக் கேட்பினோ, நாம் ஒளியத்தகும் இடமும் வேறில்லை.

ஓரெடுத்துக் காட்டு

"முன்னொரு நாள், ஒரு கள்வன் தூதர் கோலத்தில் பகற்காலத்தே அரசனது வாயிலில் தங்கி இருந்தான்; இரவின்கண் பெண்ணுருவோடு உள்ளே புக்கான்; விளக்கு நிழலின்கண் நடுக்கமின்றி நடந்து பள்ளியறையுள் நுழைந்தான்; ஆங்கு நம் மன்னனுடைய இளவலாம்

இளங்கோ வேந்தன் துயின்று கொண்டிருந்தவனுடைய வயிரமிழைத்த ஆரத்தை அதன் ஒளியாலே மார்பினின்று வாங்கினுன். விரைவில் துயிலுணர்ந்த அவ்விளவரசன் ஆரத்தைத் தோளிற்காணுது தன் உடைவாளையுருவினுன். அதன் உறையை இக்கள்வன் தன் கையிற் பற்றிக் கொண்டான்; அரசன் தன்னைக் குத்துந்தோறும் அக்குத்தினை உறையிற் செறித்துக்கொண்டான்; மன்னன் வாட்போர்க்கு ஆற்ருது, மற்போர் செய்ய லுற்ருன். ஆங்கு நின்ற தோர் மணித்தூணைத் தானுகக் காட்டித் தனது களவு நூற் கல்வியால் மறைந்திட்டான் மாயக்கள்வன். அவனைக் கண்டோர் உளராயின் காட்டுமின். இக்கள்வர்கட்கு ஒப்பாவார் இவ்வுலகத் துண்டோ ?" என்று பொற் கொல்லன் வகுத்துரைத் தான்.

கோவலன் வீழ்தல்

அப்பால், பின்னும் ஓர் இளைஞன் மாரிக்காலத்து ஒரு நாள் இரவில் தன் கைவாளை வாங்கி மறைந்த ஒரு கள்வனைப் பற்றிய தன் அனுபவம் கூறி "இக் கள்வர் செய்திகள் அரியன. நேரம் கடப்பின், அரசனும் நம்மை அலைப்பான். விரைவில் உரியதொன்றைக் கூறுமின்" என்றெழுந்தான். அவ்வளவில் கல்லாக் களிமகன் ஒருவன் தன் வெள்வாளைக் கோவலன் மீது வீசவே, அது கோவலன் மார்பில் பட்டது, புண்ணினின்று குருதி கொப்பளிப்ப, மண்மகள்துயரம் கூர, மன்னவன் செங் கோல் வளைவுறக் கோவலன் வீழ்ந்து மாய்ந்தான்.

ஊழ்வினையே

கோவலன் கொலை பற்றிய நிகழ்ச்சியைக் கேட்ட தும், நம்மனம் அவன் ஊழ்வினையை யெண்ணி யுணரா மலில்லை. கண்ணகியின் கனவும், கோவலன் கனவும், கோப்பெருந் தேவியது கனவும், மதுராபதியின் கட்டுரை யும் எல்லாம் அவ்விதிப்பயனை வலியுறுத்துகின்றன. மயக்க முற்றிருந்த காவலன் 'கொன்று அச்சிலம்பு கொணர்க' என்று ஏவலரை ஏவியதும் வினைவிளைவு என்றே தெளிகிறோம். மன்னன் செங்கோல் வளைந்தமை யைக் கண்டு 'ஊழ்வினையே' என்று இரக்கமுற்ற நாம், அவன் கண்ணகியது வழக்குரையைக் கேட்டுத் தன் தவறுணர்ந்து கொண்டதும், உடனே உயிர் நீத்தமையும் அறிந்து, மேலும் துயர் உறுகிறோம். வல் வினையால் பாண்டியன் கோல் வளைக்கப்பட்டது; அவனது போகுயிர் வளைவு தீர்த்துச் செங்கோலாக்கிவிட்டது!

நயவஞ்சகன்

இவ்வாறு பிறவெல்லாம் ஊழ்வினையே என்று துணிந்த நம்மனம் பொற்கொல்லன் செய்தியில் மாத்திரம் அவனது வஞ்சனையை-கயமைக் குணத்தைக் காணுந் தோறும் சினந்தெழுகிறது. அவன் செயலை 'ஊழ்வினை' என்று அமைதிகொள்ள மனம்மறுக்கிறது. அவன்கோவல னிடம் கூறும் பணி மொழியும், தன் களவுக் குற்றத்தை அப்புதியோன் மீது போக்கிக் கொள்ளத் துணிவதும், மன்னனிடம் சென்று மொழிவதும், வேலைக்காரர்களைக் குறித்துக் கோவலனிடம் "இவர்கள் நின்சிலம்பைக் காண வந்தவர்கள்" என்பதும், அவர்களைத் தனியிடம் கொண்டு சென்று சிலம்பின் வினைத்திறத்தைப் பாராட்

டுவான் போல அவனைக் கள்வனென வலியுறுத்து வதும், 'இலக்கண முகத்தையுடைய இவன் கொலைப்படு மகன் அல்லன்' என்று கூறும் அவர்கட்குக் களவு நூற் செய்திகளை எடுத்துக்காட்டோடு விளக்குவதும் எல்லாம் அவனைத் தீவினைக் கயவனாகவே காட்டுகின்றன ; கோவலன் கண்ணகி இவர்களது வாழ்வைக் கெடுத்துவிட்ட நயவஞ்சகனாகவே அவன் காணப்படுகிறான்.

சிலப்பதிகாரத்துள் வரும் தீவினைஞனும் இப்பொற் கொல்லன் கயமைக்கு எல்லையாக நின்று காப்பியப் போக்கை மாற்றிவிட்டான்! 'கருந்தொழிற் கொல்லன் என்றும், பொய்த் தொழிற் கொல்லன்' என்றும் இளங் கோவடிகள் அவன் கயமையைக் கணித்துச் சுட்டுகிறார்!

5. குடிலன்

குடிலன் யார் ?—ஓர் அறிமுகம்

மனோன்மணீய நாடகத்துள் வரும் தீவினைக் கயவன் குடிலன் ; பாண்டிய மன்னன் சீவக வழுதியினுடைய அறைபோகு அமைச்சன். நாடக முழுவதும் அவனுடைய தீவினைத் திறத்தையே காண்கிறோம் இழிமகனால் காப்பியம் பெயரிடக் கூடாமையின், குடிலனுடைய பெயர் நாடகத்திற்கு அமையவில்லை. அவனுடைய தன்னலமும், அழுக்காறும், வஞ்சனையும், செப்பமின்மையும் நூல் முற்றக் காண்கிறோம் ; பொய்ம்மொழி முதலாகிய புன்மைக்கும் குறைவில்லை. சூதுவாதற்ற மன்னனைத் தன்னிச்சைப்படி ஆட்டிப்படைக்கும் குடிலனது நோக்கம், அவனை மாய்த்துத் தான் அரசாட்சியைக் கைப்பற்றுவதேயாகும். அச்சூழ்வினையில் முதலிற் சில வெற்றிகளும் அவன் எய்தி விடுகிறான். அவ்வெற்றிகளே இறுதி முடிய—சுருங்கை வழியே புருடோத்தமனை எய்தித் தன் வஞ்ச மனத்தை அவனுக்குக் காட்டும் வரை—அவனை மேன்மேலும் தன் சூழ்ச்சியைத் தொடர வழிகாட்டி யூக்குவிக்கின்றன. குடிலன் சூழ்வினைகளைச் சீவகன் ஐயுறவில்லை. சுந்தரமுனிவர் நாராயணன் முதற் கொண்டு குடிமக்கள், உழவர் வரை எல்லாரும் அவனது நஞ்சனைய வஞ்சனையை யுணர்ந்து கொண்டிருந்தனர். ‘நானே அவன் ; இங்கு அவனே யானும்’ எனக் குடிலனை நாராயணன் முன்னர்ப் பாராட்டிப் பேசுகிறான் மன்னன். நீதியும் ஒழுக்கமும் கடுகத்தனையுமில்லாத அக்கயவனுடைய சூழ்ச்சித் திறனையும், சொல்

லாற்றலையும், காலமும் இடமும் வகுத்துக் கொள்ளும் மதி வலிமையையும் கண்டு வியக்கிறோம். குலகுரு சுந்தரமுனிவரிடத்தும் சீவகனுக்கு வெறுப்புண்டாகுமாறு படிப்படியாக அவன் பழிசுட்டும் பான்மைதான் என்னே! நாராயணன் மேல் குற்றம் கூறத் தொடங்கி, 'சுத்தன்' என அவனைப் பற்றி உயர்வாகப் புகழ்வது போலப் பேசிச் சினத்தைத் தூண்டிவிட்டு மன்னனையே பலபட அவனை வைதுரைக்குமாறு செய்து தண்டனையும் விதிக்குமாறு செய்த குடிலனது அரிய அறிவாற்றல்தான் என்னே! ஊழ், நாள், கோள் முதலியவற்றில் குடிலனுக்கு நம்பிக்கையில்லை ; 'பாக்கியமெனப் பகர்வதெல்லாம்' அவனுக்குப் பாழுரையே. தன்னைப் போலவே கயவர் நிறைந்ததாக உலகம் அவனுக்குக் காட்சி வழங்குகிறது. பிறர் துன்பங்கண்டு இரக்கம் காட்ட மறுக்கிறது அவனது அரக்கமனம். தன் வஞ்சனையை உலகம் கண்டுவிடுமோ என அடிக்கடி அஞ்சுகிறான் குடிலன் ; யார் எது கூறினும் அது தன்னைக் குறித்ததோ எனத் தடுமாறுகிறான் ; தன் கள்ள மனம் தன்னையே தின்பதையும் அவனுணரத் தவறவில்லை. ஆயின், உணர்ந்து திருந்த மனநிலையில்லை. 'கொன்றபின் அன்றோ முதலை நின்றழும்' என்பது அம்மனம் காட்டும் அமைதி. குடிலன் வஞ்சமனத்தானாதலின், அவன் அஞ்சி நடுங்குவதும் காண்கிறோம். கயவனிடத்துக் கோழைமைதவிர வேறு யாது காணக் கூடும் ? இறுதியில் நல்லூழ் வினைதலின், சீவகவழுதி தன் மனத்தூய்மைக்கு ஏற்ப இன்பமே எய்துகிறான்; குடிலன் சேரனால் விலங்கிடப்பட்டுத் தலை கவிழ்கிறான். உலகோர் அவனது வஞ்ச மனத்தைத் தூற்றுகின்றனர். சீவகவழுதிக்கும் உண்மை புலப்

படுகிறது. நல்வினையால் நன்மை—அறம்—வென்றது; தீவினையால் தீமை—பாவம்—தோற்றது.

கதைப் போக்கு :

பாண்டியன் சீவகவழுதி சூழ்ச்சியின் மிக்க தீவினை நெஞ்சனுகிய குடிலன் என்னும் அமைச்சன் சொற்கேட்டு அவன் கைப்பதுமையாகிருன் ; அவன் கூறியவாறே மதுரையாகிய தன் தலைநகரை விடுத்துத் திருநெல்வேலி யில் கோட்டைகட்டி அதில் உறைகின்ருன். சீவகவழுதியின் குலகுரு சுந்தர முனிவர். மன்னவனைக் காக்க வேண்டி அவ்வரண்மனையிலேயே தமக்கென ஓர் அறை வாங்கிக் கொள்கிருர் ; அவ்வறையினின்று கோட்டையின் புறத்தே தமது தவச்சாலைவரை ஒரு சுருங்கை வழியை ஒருவர்க்கும் தெரியாவகை அமைத்திருக்கிருர். சீவகனுக்கு ஒரே மகள் மனோன்மணி. அவள் சேரமன்னன் புருடோத்தமவன்மனைக் கனவில் காண்கிருள். புருடோத்தமனும் மனோன்மணியைக் கனவிற் காண்கிருன். இருவரும்ஊழ்வலியால் ஒருவரையொருவர் காதல்கொள்கின்றனர். அதன் முன்னரே மனோன்மணியின் தோழியாகிய வாணியும் நடராசன் என்பவனும் ஒருவரையொருவர் கண்டு காதல்கொண்டுள்ளனர். வாணியின் தந்தை சகடர் என்பார். அவர் பொருளாசை மிக்குத் தன் மகளை அவள் விருப்பத்திற்கு மாருகக் குடிலன் மகனுகிய பலதேவனுக்கு மணமுடிக்கத் துணி கிருர். மன்னனது இசைவையும் பெற்றுக் கொள்கிருர். சுந்தரமுனிவர் சீவகன்பால் ‘மனோன்மணிக்கு ஏற்ற மணவாளன் புருடோத்தமனே’ என்று அறிவுறுத்தியுள்ளமையை யறிகிருன் குடிலன் ; மனோன்மணியைத் தன்

மகனுக்கு மண முடித்தால் நாடும் ஆட்சியும் எய்தலாம் என்று பேராசையுற்று ஒரு சூழ்ச்சி புரிகிருன் ; முனிவர் கூறியவாறு நடராசனை விடுக்காது, தன் மகன் பலதேவனையே புருடோத்தமன்பால் தூதுவிடுக்கச் செய்து சேரன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வருமாறு செய்விக்கிருன். முதல் நாட்போரில் பாண்டியர் சேனை புறங்காட்டுகிறது. குடிலனையே இன்னமும் தனக் குற்ற துணைவனுக நம்பியுள்ள சீவகவழுதி, பலதேவ னுக்கு மனேன்மணியை அன்றிரவே மணம் புரிவித்து முனிவரோடு சுருங்கை வழியில் பாதுகாப்பாக விடுப்ப தற்குக் கருதுகிருன். மனேன்மணியும் துயருறும் தந்தைக்கோர் ஆறுதல் விளைக்கத் தன்கடன் இது எனத் துணிந்து அக்கயவனை மணக்கத் துணிகிருள். நடுநிசியில் ஒரு மணவறையில் மணச் சடங்கு சுந்தரமுனிவர் முன்னிலையில் நிகழ்கிறது. மனேன்மணி பலதேவன் எதிரே கையில் மாலையோடு வந்து நிற்கிருள். இதற் கிடையே குடிலன் சுருங்கை வழியில் நடந்து சென்று சேரன் பாசறை எய்திப் புருடோத்தமனிடத்தே சீவக வழுதியைச் சிறைப் பிடிக்க உபாயம் சொல்லித் தன் வஞ்சனையைப் புலப்படுத்தி நிற்கிருன். அப்பாதகனுக்கு விலங்கிடுவித்து அவன் காட்டிய அக்கற்படை வழியே புருடோத்தமன் சில படைஞரோடு வருகிருன் ; சிறிது நேரத்தே பலதேவனுக்கு மாலையிட நிற்கும் மனேன்மணி யின் கண்முன்னர்த் தோன்றுகிருன். அவளும் அவன் பால் சென்று அவனுக்கு மாலையிடுகிருள். உண்மைக் காதல் வெற்றி பெறுகிறது.

இக்கதைப் பகுதியுள் குடிலனுடைய வஞ்சவினை களைத் தொடக்கமுதல் எஞ்சாது காணலாம்.

முனிவரும் மனிதரே

நெல்லைக்கு வந்த பிறகு சீவகவழுதி, தான் அமைத்த அரணைச் சுந்தர முனிவர்க்குக் காட்டுமாறு குடிலனைப் பணிக்கிருன். குடிலனும் மதில், அகழி, கொடிகள், பொறிகள் முதலிய பலவற்றின் மாட்சியையும் பரக்கக் கூறி முனிவர்க்குக் காட்டுகிருன். அவர்க்கு அவற்றி லெல்லாம் மனம் அமைதி பெறவில்லை. நாட்டிற்குப் பிற அறக்காவல் வேண்டுமென்பது அவர் திருவுள்ளம். குடிலனது சூழ்வினைக்கொப்பவே அவ்வரண் அமைக்கப் பட்டமையும் அவர் அறிவார். முனிவர் போன பின்னர், அரணிலேயே நகரமாந்தர் மூவர் குடிலன் பொய்வினை களைப் பற்றியும், அவற்றை முனிவர் அறிந்தமை பற்றி யும், முனிவர்க்கு முன் அவன் முகம் வேறுபட்டமை பற்றியும் தம்முள் பேசிக் கொள்கின்றனர். குடிலன் மனத்துக் கொடிய வஞ்சம் ! ஊரார்க்கும் எட்டிவிட்டது. ஆயின், மன்னன் உணர்ந்தானில்லை. மன்னன் மனத்தில் மெல்ல முனிவரைப் பற்றிய நல்லெண்ணத்தை மாற்ற முயல்கிருன் வஞ்சகன்; "ஒன்றும் அரணில் குறை யில்லை ; முனிவர்கள் ஆலயமொன்றையே அறிவர். சுந்தரர் சொல்லியவாறு கோவில் கட்டி விழா வெடுக் காமல் இவ்வரணையெடுத்தோம். ஆதலின் இவ்வாறு ஓதினர். துறந்தோரும் அழுக்காறுடையார் போலும் ! முனிவரேயாயினும் அவரும் மனிதரே ! ஆலயமொன் றெடுத்து அதில் உலகிலுள்ள பொருளெல்லாம் நிரப்பினும் அவரது ஆசை நிரம்பாது. அரசர் செல்வ மெல்லாவற்றையும் முன்னர் வசிட்டர் வேள்வியில் புகைத்தார். விசுவாமித்திரர் இரக்கவே, மன்னன் அரிச்சந்திரன் பட்டபாடுதான் என்னே ! முனிவர்களது

செயலால் இந்திரனும் தனது வடிவு கரந்து திரிந்தான்'' என்றெல்லாம் கூறவே, சீவகனும் அவ்வுரைக்குத் தலையசைக்கிருன்.

ஆவதாயின் அறிவியேனே ?

சகடர் சீவகவழுதியிடம் வந்து தம் மகள் வாணியைக் குடிலன் மகன் பலதேவனுக்கு மணம் புரிவிக்க விழைவதாகப் புகல்கிருர் ; அதற்கு மன்னனது அருளையும் நாடுகிருர். 'குடில, இதனை எனக்கு ஏன் சொல்லாது ஒளித்தாய்? எனச் சீவகன் வினவவே, 'ஆவதாயின் அறிவியாது ஒழிவேனே ? என்று நயம்பட வுரைக்கிருன் குடிலன். அவனுக்கு இம்மணவினையில் விருப்பமில்லை. அவன் மனேன்மணியை மருமகளாக்கிக் கொள்ள விழைகிருன் ; வாணி நடராசன் என்பவனைக் காதலிப்பதாகச் சகடரைச் சொல்லுவித்துத் தன் மகனுக்கு அவளை மணம் முடிப்பது அமையாது என்று குறிப்பால் புலப்படுத்துகிருன்; "நடராசனுக்கு அவளை மணம் புரிவித்தால் என்? ஏன் தந்தை மகடகிடையே முரண்பாடு ?'' என்று சீவகன் முன்னிலையில் அமைதி பேசுகிருன்.

பிடித்தால் கற்றை விடுத்தால் கூளம் !

தான் மேற்கொள்ள முனைந்தவை யாவும் முறையே வெற்றியாக முடிவதைக் குடிலன் எண்ணி மகிழ்கிருன் ; "அறிவே ஆற்றல். மதுரையை விடுத்து மன்னனை நெல்லைக்குக் கொணர்ந்து கோட்டையும் கட்டுவித்தோம்; மன்னன் நமது நிழலில் மறைந்தான். பிடித்தால் கற்றை விடுத்தால் கூளம், மன்னன் இறப்பின் யாரே இனி இந் நாட்டிற்கு அரசர்? கருவியும் காலமும் அறிந்து செய்தால்

எது அரியது ? மனோன்மணி பருவம் வந்துற்றமையால் காதலனைப் பற்ற விழைந்தாள். அவ்வளவே ! அவள் ஒருவனைக் கண்டு காமமுறவில்லை. அருகுள்ளது எட்டி மரமேயாயினும் முல்லைபற்றிப் படரும் தன்மைத்து. அவள்பால் பலதேவனைப் பலமுறை விடுப்போம்" என்று தன் ஆற்றலை வியந்தெண்ணுகிறான் ; அது போது, மனோன்மணியைப் புருடோத்தமனுக்கு மணம்செய்விக்கத் தான் விரும்புவதாக மன்னன் ஓர் ஓலை விடுக்கவே, அவ்வோலைகண்டு மகிழ்வதாக நடித்து அச்சேவகனுக்கு ஒரு மணிமாலை பரிசளிக்கிறான் ; விடியுமுன்னர் மன்னவைக்கு வருவதாகச் சொல்லி விடுக்கிறான். சேரனிடம் தன் மகனைத் தூது விடுத்து அவன் சினத்தினைத் தூண்டிப் பாண்டி நாட்டின் மேல் அவனைப் படையெடுக்கச் செய்ய குடிலன் மனத்தே வஞ்சனை குடி கொள்கிறது ; தன் சூழ்வினை அறிவாற்றல்முன் சுந்தரரது எந்திர தந்திரம் எதுவும் பலியாது என அவன் துணிகிறான் ; பரிசு பெற்றுக் கொண்டு தன்னை வாழ்த்திப் புகழ்ந்து சென்ற சேவகனது அறியாமையைக் கண்டு உலகத்தின் பேதைமையை எடை போட்டு விடுகிறான்; மன்னனது பேதைமையையும் கூறினான்.

என் மகன் இளைஞன் காரியம் பெரிது

மன்னனை எய்திய குடிலன் மனோன்மணியின் திருமணச் செய்தியில் பெரிதும் ஈடுபாடுடையவன் போலவும் மகிழ்ச்சியுடையவன் போலவும் காட்டுகிறான் ; அரண் கட்டி முடிக்கும் அற்றம் நோக்கியே அதுவரை காத்திருந்ததாகச் சாற்றுகிறான் ; புருடோத்தமனையும் புகழ்ந்துரைக்கிறான் ; சேரன் மனமறியத் தூதுவரை

விடுக்க வேண்டுமெனவும் வேண்டுகிருன்" "மணம் செய்ய முதன்முதல் ஆடவர் வீட்டினரே பேசிவர வேண்டும். ஆடவரைத் தேடி மகள் வீட்டார் செல்லுதல் தகாது என்று உலகம் கூறினும், நமக்கு அதில் ஒன்றும் குறையில்லை" என்று கூறுகிருன்; "அரசிளங் குமரியை விழைந்து வந்த மன்னவகுமரர் பலரையும் விடச் சேரனே சிறந்தோன்; ஆயினும் இளையோன் ஆதலின் இங்கு வரவில்லை போலும். அவன் கருத்தினை யுணர்வதன் முன் எங்ஙனம் தூதரை விடுப்பது?" என்று ஐயுற்ருன் போல் வினவி, அதற்கோர் உபாயமும் உரைக்கிருன்: "சேர நாட்டுள் நன்செய் நாடு என்னும் பகுதி நமக்குரியது. அங்கு வழங்கும் மொழியே அதற்குச் சான்று. சில காலமாகச் சேரன் அதனையாண்டாலும் அந்நாட்டுரிமையை நாம் இதுவரை விடுத்ததில்லை இதனை அவனுக்கு எடுத்துரைப்பின், நமது அரண் வலியை அறிந்து நமக்கு அப்பகுதியை அவன் விடுத்திடுவான். வாதம் பல புரியினும் ஒருவாறு உடன்படுவான். பின்னர் திருமணம் பற்றிய செய்தியைக் குறிப்பின் மறுக்கமாட்டான்; மணம் முடித்திடுவோம்" என்ற குடிலன் கூற்று மன்னனுக்குக் களிப்பூட்டுகிறது; மணம் நடந்துவிட்டதாகவே மதிக்கிருன் பேதை. பின்னர், குடிலன் தூது விடுத்தற்குரியாரைப் பற்றிய உயர் இலக்கணங்களையெல்லாம் ஓதி அதற்கிசைந்தவன் பல தேவனே எனச் சீவக வழுதியே சொல்லும்படி செய்கிருன்! 'என் மகன் இளைஞன்; செல்லும் காரியம் பெரிது' என்று தயங்குவதாகக் கூறி நடிக்கிருன் 'சுந்தரர் கருதிய நடேசனுக்கு யாது தெரியும்? என்னே முனிவர் கருத்து?' என்று சீவகவழுதியிடம் மீண்டும்

சுந்தரரைப் பற்றிச் சிலவசை யுரைக்கிருன் ; 'கட்டுக கோயில், வெட்டுக ஏரி என்று திரியும் இவர்களோ நம் நன்மை தீமை நாடுபவர் ? என்று பழித்துப் பேசுகிருன்.

சூதே உருவினன் :

நாராயணன் தன் மூக்கிற் கரி தேய்த்து வந்து "மூக்கிற் கரியார் உளர் என நாயனுர் நவின்றவாறே, எல்லாம் உள்ள நின்னவையில் இவ்வகையினரும் இல்லாது போவரோ? என்று குறிப்பால் குடிலனது வஞ்ச நெஞ்சத்தைக் கூறுகிருன். அப்பொழுதும் ஒன்றும் அறிந்துகொள்ள மாட்டாணுகிருன் அரசன். அவனது நிலேகண்டு வருந்தி நாராயணன் "என்ன செய்வேன் ? அரசன் வெளுத்ததெல்லாம் பாலென நம்பியுள்ளான்; குடிலனே உறுதியாக நம்பிவிட்டான். குடிலனே சூதே உருவினன். அவன் சொல்வனவும் செய்வனவும் தன்னயம் கருதியே யன்றி மன்னன் நன்மைக்கு அன்று. நல்லவனுக நடிக்கிருன் அவ்வஞ்சன். அரசபாரம் பொறுத்தல் எத்துணே அரிது ! அரசர்க்கு அமைச்சர் அவயவம் ஆவார். உறுப்புக்களே உயிரினேத் தின்று விட்டால் உய்வேது ! குடிலன் செய்யும் வஞ்சனே களே வெளிப்பட உரைக்கலாம் எனிலோ, அவை சான்ருேடு காட்டும் தன்மையன அல்ல !" எனத் தன்னுள் பலபட மொழிந்து கொள்கிருன்.

தூதுவெற்றி :

பலதேவனேப் புருடோத்தமன் பால் தன் சூழ்வினே முடித்துவர வேண்டுவன கூறி விடுத்தபின், குடிலன் சீவகனே எய்துகிருன் ; வஞ்சி நாட்டவனுல் மகனுக்கு

ஏதேனும் ஏதம் வருமோ எனத்தான் அஞ்சுவதாக நடிக்கிருன் ; "மனேன்மணியின் வதுவை பற்றிக் குறிப் பால் மொழியினும் சேரன் மகிழ்ச்சிமிக்கு இப்பால் தலேயாலோடி வருவான். அவன் சினம் நம்மை என் செய்யும்?" என்று செப்பிய மன்னனுக்கு, மனேன் மணியின் வடிவு நலத்தைப் பலதேவன் பலவாகப் பாராட்டுவதையும், அவளது பணிவிடையைத் தன் பாக்கியமாகப் போற்றுவதையும் சாற்றித் தனக்கே யன்றித் தன் மகனுக்குமுள்ள மெய்ம்மை ஈடுபாட்டை மொழிகிருன். சேரனது செருக்கு மிகுதிபற்றி மன்னன் சுட்டவே, 'செல்வமும் அரணும் சேனேயும் ஊக்கமும் உரனும் உன்னேவிட யார்க்குள ? ஆயின் செருக்கு உன் பால் தினேயளவு முண்டோ ?' என்று புகழ்ந்து மன்னனே மகிழ்விக்கிருன் மதியமைச்சன். 'தினேத்துணே உன் மகனுக்குத் தீங்கிழைப்பினும் என் மகளுக்குப் பனேத் துணே செய்ததாக நான் பழி பாராட்டுவேன்' என்று மன்னன் இயம்புகிருன். அந்நேரத்து ஒற்றன் ஓர் ஓலே கொணரவே, குடிலன் அவன் முகக்குறிகண்டு 'மன்ன னுக்கு இறுதியும் நமக்கு உறுதியும் வந்தன' என்று துணிகிருன் ; சேரன் விடுத்த செய்தியை வாசித்தறிந்த குடிலன் மகிழ்ந்து "போர் முகத்தில் அச்சிறுவன் பிழை யான். மயக்கத்தால் போரிட எழுந்துள்ளான். உடனே அவன் புறப்படலால் வெற்றிபெறும் சேனே மிகுதியாக அவனிடமிராது" என ஆறுதலுரைத்து மன்னன் ஆணேப் படி அமர்க்கு வேண்டுவன அமைக்க எழுகிருன்.

மஞ்சளும் கரியாம்

சேரனது படையெழுச்சி கண்டு வழியில் உழவர்கள் தம்முள் உரையாடிக் கொள்கின்றனர். "போருக்கு

வலிய அழைத்தால் யார் அணுகார்? மணமொழி விடுத்த செய்தி பிணமொழியாயிற்று. குடிலன் கைதொடின் மஞ்சளும் கரியாம். அவன் பொய்யன்; நாடும் முடியும் கவர்ந்து மனோன்மணியையும் தன் மகனுக்கு மண முடிக்கக் கருதியுள்ளான்; மன்னனைக் கொல்ல மலையனைத் தனக்குச் சூதாய்த் துணைவரக் கூவியுள்ளான்" என்று எளிய அவ்வுழவு மக்கட்கும் அரண்மனைச் செய்தி அம்பலமாகியிருக்கிறது. குடிலனது கொடிய வினையை நாடேயறியும் போலும்! ஆம், சீவகன் ஒருவனே குடிலன் வஞ்சனையை அறியான். 'குடிலன் ஆள்வதைவிடக் குட நாட்டான் ஆள்வதேமேல்' என்றும் அம்மக்கள் துணி கின்றனர்.

கோழையர் எங்ஙனம் கூடுவாரின்பம்?

சீவகன் படை அணிவகுத்து நிற்கிறது. குடிலன் அரசனை எதிர்நோக்கி நின்ற வண்ணம் சில எண்ணமிடு கிறான். அவனது தன்னல நாட்டத்திற்கு அவை எல்லை காட்டுகின்றன. "பருதியும் எழுந்தது; போரும் வந்தது. ஒருவனது ஆசையால் உலகில் வரும் துயரம் பெரிது. இன்று மாலைக்குள் இக்களத்தே மாண்டிடுவார் தொகை யாரே மதிக்க முடியும்? அவ்வீரர்தம் மனைவியர், உற்றார், பெற்றோர், நட்பினர் உறும் துயரத்தை என்னென்பது! ஆ! என்மதி என்னையும் எடுத்தெறிந்து ஏகுகிறதே. சீச்சீ! மன்னர்க்காகச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே இவர்கள் கடன். பலர் துயர மடைந்தாலன்றி உலகில் யாரொருவர் இன்பமடையக் கூடும்? உழவுத் தொழிலோர், ஆடை நெய்வோர், வாகனம் சுமப்போர் இவர்கள் படும் துன்பம் நோக்கி உலகில் யாரே வாழாது ஓடுவார்? அவரவர் தத்தம்

நலனையே நாடுவார். மதிவல்லார் காலம் பார்த்து அடங்கியிருப்பர்; வாய்க்கும் போது பயன் கொள்வர். துணிந்தபின் எண்ணலாகாது; தாமதம் பண்ண லாகாது; அறிவில்லாதவரல்லரோ இவ்வாறு இரங்குவர்? கோழையர்க்கு என்றுமின்பம் இல்லை" என்று தன் செயலுக்கு ஓர் அமைதி நாடுகிறான்.

குடிலனை நம்பாதே!

இடப்புறம் பலதேவன் படையும், வலப்புறம் குடிலன் படையும் துணைபோல நிற்ப, நடுவே சீவகன் நிற்கிறான். படைகட்கிடையே ஒரு பெருங்குழப்பம்! குடிலனே விளைத்தகொடுமை இது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மன்னனை மாய்த்துவிடுவது அவனது வஞ்சத் திட்டம். நாராயணன் இவ்வவல நிலையைக் கோட்டை மேல் உலாவி நின்று பார்க்கிறான்! முருகனைப் படையோடு துணைக்கு விரைய ஏகுமாறு பணிக்கிறான். படை ஞரை நோக்கி 'மன்னனுக்குத் தோல்வி இமைப்போதில் எய்தினும் எய்தும். விரைவில் நாம் அங்கு எய்துவோம்' என்று அறிவுறுத்துகிறான். பிறபடையினரும் வந்தெய்து கின்றனர். முருகன் செவியில் 'குடிலனை நம்பலாகாது' எனக் கூறித் தானும் முருகனுமாகப் படைஞரோடு மன்னன் இருமருங்கிலும் செல்கிறான் நாராயணன். மன் னனும் உயிர் உய்கிறான்.

உத்தம பத்தியில் உனைப்போல் யாரோ?

முதல் நாட்போரின் தோல்வி பொருது வாளால் தன் னையே மாய்த்துக்கொள்ள நினைக்கின்றான் மானமுடைய மன்னன் சீவகன். அதுபோது நாராயணன்வந்து மனோன்

மணியின் ஆக்கத்தை நினைவுறுத்தி மன்னன் மன நிலையை மாற்றுகிருன். 'வெல்லுவோம் இனியும்; மீட்போம் நம் புகழ்' எனக் கிளர்ந்து எழுகிருன் சீவகன். "உள்ளத் தெழுச்சியும் உவகையோடுக்கமும்—தள்ளா முயற்சியும் தக்கோர் சார்பும்—உண்டேல் ஊழையும் வெல்லுவம்" என நாராயணன் துணிவுரைக்கிருன். அந்நேரத்து அழுத வண்ணமாகக் காட்டிப் பல தேவ ஞேடு குடிலன் ஒருபுறம் ஒதுங்கிநிற்ப, மன்னவன் அவனை அழைக்கிருன். தன் மகன் பலதேவன் மார்பில் வேல்புண்ணைக் காட்டி "இஃது ஆறுமாறு என்னை? தேறுமாறு என்னை? உன் அருளன்றி வேறு எமக்குத் துணையாதுளது? பொல்லாப் பகைவர் பலர் எமது அன்பினைப் பொய்யாக்குவர்" என்றெல்லாம் போரில் தம் நன்றியுடைமையைக் காட்டுவான் போலக் குடிலன் கூறுகிருன்; "இவ்வளவு நாள் நின்பணிவிடையில் உடல் ஆவிகளை ஒப்படைத்திருந்தும், இப்போரில் அவற்றை விடும் வகையறியாமல் வெட்கமில்லாப் பதடியாகிவிட்டேன். கொடியார் சிலர் இங்கே செய்த சூதினுல் நம் புகழும் தகைமையும் கெடுமாருகி விட்டன. அவர்களது கெடுமதி ஒன்றே கண்ணில் மணலென என் நெஞ்சை உறுத்துகிறது. இவன் மார்பிற் பட்டாற் போல ஒருவேலும் என்மார்பிற் படுமாறு இல்லாத பாவியேன். நின் முகத்தில் எவ்வாறு விழிப்பேன்? பகைவர்தம் படைக்கலம் என் உயிரைப் போக்கவில்லையே! நீயே நின் கைவாளால் என்னுயிர் போக்குக" என்றுரைத்த வஞ்ச மொழிகளை மெய்யாக வியக்கிருன் சீவகன்; உத்தம பத்தியில் உன்னைப் போல் யார் உள்ளனர் எனப் பாராட்டுகிருன்; நாராயணன் போன செவ்வி

பார்த்து, முழந்தாளூன்றித் தன்னை மாய்க்குமாறு இரந்து வேண்டும் குடிலனுக்கு ஆறுதல் கூறுகிறான்; 'சற்று முன் தற்கொலை புரிந்து கொள்ளத் துணிந்த என்னை நாராயணன் தடுத்தான்; விடுத்தேன்' என்று தன் அனுபவம் காட்டுகிறான். 'அந்தோ கெடுத்து விட்டானே' என்று நாராயணனை மனத்துள் கடிந்து கொள்கிறான் குடிலன்.

பணியின் வாழ்வாய்

"நம்மிடையே உள்ள சிலரது சதியால் எனக்கு மனத் தளர்ச்சியேற்பட்டது. 'ஒரு சிறுவனைவெல்ல இருதினம் பொருதனர்' என்பரே என்பது என் நாணம்! நாம் போரிடாது திரும்பிய செயல் நல்லதொரு போர் முறை என்பர் அறிந்தோர். சிங்கம் நாய்போலன்றி அடங்கியே குதிக்கும்! காலை வரும்வரை இருப்பின், அவ்வஞ்சியார் ஒருவரும் மீளார்" என்று குடிலன் வீரவுரை வழங்கிக் கொண்டிருக்குங்காலை, சேரன் விடுத்த தூதன் ஒருவன் வந்து சொல்கிறான்: மன்ன! இன்று நீ புரிந்த போரில் யார் வென்றார் என்பது உனக்கு விளங்கியிருக்கும். மேலும் போரிட விழையின் விளைவதும் உனக்குத் தெரியும்! ஆதலின் உறுவதை முன்னுணர்ந்து உறவாகக் கருதின், ஒருகுடம் தாமிர பன்னி நீரும் வேப்பமாலையும் தந்து எம்மன்னன் அடிகளில் பணியின் வாழ்வாய். வைகறை வருமுன் இது செய்யின், போரை எம்மன்னன் நிறுத்துவன். இல்லையேல் உழிஞை சூடிப் போரிடத் துணிவன்" என்று அஞ்சாது சாற்றுகிறான். சீவகனும் சேரனையிகழ்ந்து மறுத்துரை

மொழியவே, 'எடுத்தகைப் பிள்ளையாய்! என்ன அறிவு கருதினுய் ?' என்றிழித்துக் கூறிப்பெயர்கிருன் தூதன்.

யார் பிழை அது !

மன்னன் தன் மகளைக் கண்டுரையாடிப் பெயர்ந்த பின்னர்க் குடிலன் தன் மகனை நோக்கி "மடவோய்! நாராயணன் பலவாறு எனது காரியம் கெடுத்தான். நீயே அதற்கெல்லாம் காரணம்" என்று கடிந்து கொள்ளவே, "ஒருவன் இதுபோல் உன்நெஞ்சில் வேலே இறக்கினுல் அப்போது அறிவாய்" என மைந்தன் சீறுகிருன். 'உன் நடத்தையால் அவ்வாருயிற்று' என்கிருன் தந்தை; "உன் நடத்தையால் அவ்வாறு விளைந்தது. மன்னனைக் குத்தக் கருதினுய். உன் ஊழ்வினை என்னையே குத்தி விட்டது. யார் பிழை அது?" எனப் பலதேவன் தந்தையின் வினையை அம்பலப்படுத்துகிருன். "பேய்ப்பயல்! உன்னை எண்ணுந்தோறும் என்மனம் எரிகிறது. என் பணமெல்லாம் அழித்துவிட்டதன் மேலும் பேச்சு வேரு ? என்று குடிலன் சினக்கவே, "பிணமே! பணம் பணம் என்று ஏன் பதைக்கிருய்? புண்ணுடை நெஞ்சோடு நிற்கிறேன்; பரிவில்லாப் பாவி! என மகன் வைது போகின்ருன்.

எனக்கிவ் வமைச்சோ பெரிது ?

மாலையில் அரண்மனையகத்தே மந்திராலோசனை நிகழ்கிறது. 'பகைவர் நம் மதிற்புறத்து அகழைத்தூர்த்தனர் எனப் பலர் சொல்வது உண்மையா?' என்று மன்னன் வினவவே, குடிலன் 'காலமிதுவே' எனக் கருதி முறையே சொல்லலுறுகிருன்: நாரணனை மதிற்காவல்

நாயகராக்கினோம். ஆயின், போரிடையே அவரைக் கண்டோம். அவர் எவ்வாறு காவல் விட்டார் ? அவரை விட மெய்ம்மையானவர் வேறு யார் ? வேலியே பயிரைத் தின்றால் விளைவதெது ? என்மீது அவர்க்குள்ள விரோதமே இவ்வினை. நினக்கு அவர் துரோகம் கருதார். எத்தனையன்பு அவர்மீது வைத்துள்ளாய் ! ஒருவார்த்தை சொன்னால் போதுமே! அமைச்சுப் பதவியையும் தலைமையையும்கூட அவர்க்கு அளித்துவிடுவாய். எனக்கு இவ்வமைச்சோ பெரிது? வெளிப்பட ஒரு மொழி விளம்பிடில், யானே கணத்துள் களிப்புடன் அளிப்பேன்! எலிப்பகையை அழிக்க வீட்டையா எரியிடுவது? என் மீதுள்ள பகைமையால் நாராயணன் ஏவலின்படிபுதிவன்ய ஒருவன் இவன் (பல தேவன்) மார்பில் வேல் எறிந்தான் காண்” என்று படிப்படியே பேசி நாராயணன் மீது மன்னனுக்குப் பகைமை மூட்டுகிறான். சீவகன், சேவகனை நோக்கி நாராயணனை யழைத்துவரப் பணிக்கிறான், சிரச்சேதம் செய்ய. இதற்கிடையே நாராயணன்பால் பரிவு காட்டுபவன் போலத் தன் நல்லெண்ணம் தோன்றக் குடிலன் நடிக்கிறான் ; “சுவாமி பொறுத்தருள். அவன் சுத்தமே மடையன், அப்பிழை என்னுடையதே! வருமுன் தெரியும் அறிவு படைத்திருந்தும், பலதேவனைப் படைத் தலைவனாய் ஆக்கிவிட்டேன் என்ற அப்பகைமையாலே நாராயணன் போர்க்களத்துட் புக்குத்திரிந்து நாற்படை நிலையையும் குலைத்து வரக்கடவ வெற்றியைத் தோல்வி யாக்கிவிட்டான்’ என்கிறான்.

கூறினயாவும் குடிலற்கேயாம்

நாராயணன் வரவே, பலதேவன் மார்பிற்புண்பட்ட காரணம் புலப்படுகிறது. ஒரு வீரன் தங்கைக்கு அவனி

ழைத்த கற்பழிவு குறித்து அவ்வீரன் எறிந்த வேல் தான் அஃதென நாராயணன் அம்பலப்படுத்தினன். பலதேவன் அரண்மனையினின்று பொற்றெடியைத் திருடிய களவுக் குற்றத்தைக் குடிலன் நாராயணன் மீதேற்றுகிருன்; "மானத்திற்கே அஞ்சுவோம்; உயிர் உடல் பதவிகட்கு அஞ்சவில்லை" என்றுரைத்துக் குடிலன் தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி நீட்டுகிருன். சீவகன் குடிலனது வாய்மையுள்ளத்தைப் பாராட்டி அந் நிலையில், நாராயணனைச் 'சோரா! துட்டா! துரோகி! என்றெல்லாம் வைது, படைஞரைக் கூவி அவனைக் கழுவிலேற்றிட ஆணையிடுகிருன். கூறியன யாவும் குடிலனுக்கே யேற்கும்' என்று கூறிக் குடிலனைக் கழுவேற்ற அழைக்கிருன் முருகன்! மன்னனையும் முருகன் எதிர்த்துப் பேசி, எம்மையெல்லாம் கழுவேற்றப் பதினுயிரம் கழுவேண்டும், என்று பழித்துரைக்கிருன். நாராயணனும் முருகனும் தாமாகவே சிறைச்சாலை புகுகின்றனர். குடிலனுக்கு எதிராக ஆர்த்தெழுந்த வீரரெல்லாம் நாராயணன் அறிவுரைப்படி விடைபெற்றுப்பெயர்கின்றனர். சிறைக்கோட்டத்தின் புறத்தே குடிலனுக்கும் மகனுக்கும் பண்டுபோலப் பேச்சுவார்த்தை தடிக்கிறது.

மணமகன் யாவன்?

சுந்தர முனிவர் தாம் அமைத்த சுருங்கை வழியே மனேன்மணியை அனுப்புமாறு வேண்டியதைச் சீவகன் குடிலனுக்குச் செப்புகிருன். "இவ்வரணையே அமைத்த நமக்கு இக்கற்படையமைத்தலோ அரியது? முனிவர் நம்மை அறிவற்றவர் என நினைத்துள்ளமை நோக்கச் சிரிப்பே வருகிறது" என்று சுந்தரரை இடம் நோக்கி இகழ்கிருன் குடிலன். அவன் மன்னனை நோக்கி "முனிவர்

பால் மனோன்மணியை அனுப்புதல் பழுதில்லை. சேமமாய் விடுத்த பின்னர்க் கவலையும் அச்சமும் இல்லை. கவலை யின்றேல், யாருனை வெல்வர் ? ஆனால் மணமுடியு முன் னர் அரசகன்னியரைத் தனி வழியே அயலார்பால் தங்க விடுத்தல் தவறு'' எனச் சுட்டித்தன் சூழ்வினைக்கு ஒரு வித்திடுகிருன். "முனிவரே ஆயினும் அவரும் அன்னி யரே. உலகம் பைத்தியம் ; பழித்திடும் ; சத்திய முண ராது'' என வுலகினைப் பழிப்பது போலப் பேசுகிருன் ; "முனிவர் விருப்பப்படி அனுப்பாவிடில் உட்பகைச் சதி யால் நம் வெற்றி தவறிவிடும். திருமாமுனிவரோ கருநா வுடையார்; கவலைதீர் உபாயம் ஒன்றேஉளது. விரைவில் மணவினையை முடிக்கவேண்டும். முடிமன்னர் வேண்டு மெனில், அவ்வரைத் தேட ஆண்டுபல ஆகும்; கிடைப் பினும் ஒரு நலம் காணில், ஒரு குணம் காணேம். இவ் வாறு புருடோத்தமனைப் போலப் பகைவனுய் விடின் மனோன்மணி என்ன துயர்ப்படுவாள்? சேரனது தீக்குணம் இதுபோது புலப்பட்டமையும் ஒரு வகையால் நன்ரு யிற்று. ஆண்டுப் பல பழகியும் சிலரை அறியக்கூட வில்லை. அன்னியரை எவ்வாறு அறிவது ? ஆகவே, நின் தோழமை பூண்டு ஊழியம் இயற்றி வீரமும் மேதை யும் தீரமும் திறமும் குணமும் எல்லாம் நிரம்பி நிற்ப வர்க்கு எவ்வரசரே ஒப்பாவார் ? நின்னடிச் சேவகம் அற்பமோ ? நின்னுடன் யாண்டும் இருப்பதே மனோன் மணியின் இச்சை. நின்மொழியை அவள் மாருள்'' என்று குடிலன் விரித்த வலையுள் சீவகன் விழுந்தே விடு கிருன். 'மணமகனுக ஏற்றவன் பலதேவனே' என்று சீவகன் உடன்படுகிருன் ; இப்போதைய நிலைக்கு 'மிகை நாடி மிக்க கொளல்' வேண்டுமாதலின், தக்க முடிவே

இது. குடிலரே! நீர் மறுக்கலாகாது' எனவும் வேண்டு கிறுன்! அன்றைய இரவு இரண்டாம் யாமத்தில் திருமணச் சடங்குகள் தொடங்கப்பட்டன.

எல்லாம் நன்றே

சீவகன் செல்லவே, குடிலன் "முனிவன் வந்ததும் நமக்கே நன்மையாயிற்று. மனேன்மணி மனத்துள் வெறுப்பினும் வெளிப்பட ஒன்றும் மொழியாள். மௌனம் அவளிசைவைக் காட்டுகின்றது. அவள் அழுவதும் தந்தையைப் பிரியலாற்றுமை பற்றியே என்று ஒரு காரணம் காட்டலாம். நடுநிசி வருமுன் கடிமணத்தை முடித்து விட்டால் முனிவன் எப்படித் தடுப்பான்? முனிவன் கற்படையமைத்ததும் நமக்கு நன்றே. திறவுகோல் இரண்டு நாம் செய்ததும் நலமாயிற்று. எத்தனைப் பொருள் கருவூலத்தைத் திறந்து களவாடிப் படைஞர்க்குக் கொடுத்துள்ளோம். ஆயினும் நன்றியில்லா நாய்கள்; என்னையே ஓட்டத் துணிந்தன" என்று இரவுச் செய்தி குறித்துச் சில எண்ணமிடு கிறுன்.

கணப் போதில் உன் கரதலம்:

சுருங்கையறைக் கதவைத் திறந்து கொண்டு அவ்வழியே நடக்கலுற்ற குடிலன் அதன் முடிவில் பகைவர் பாசறையைக் கண்ணுறுகிறுன். மனேன்மணி நினைவாகப் புருடோத்தமன் சில பாட்டிசைக்கிறுன்; குடிலன் அவன் எதிரே சென்று நிற்கிறுன்; 'அடியேன் குடிலன் நின் அடிமை' என்கிறுன். 'வந்ததென்? கூறுக' எனச் சேரன் வினவவே, குடிலன் தன் வஞ்ச நெஞ்சினை வெளியிடலுற்றுன்; "நின் செவ்வி தெரிந்து ஒரு வார்த்தை நின் திருச்செவியிற் சேர்த்திட வந்தேன். இப்பாண்டிநாடு நீ வரு முன்னரே, நின் வயப்படும் பேறு

எய்த வேண்டும் எனக் கருதியிருந்தேன். இன்றைய போரில், கைகலக்கு முன்னரே யாம் முறிந்து ஓடிய முறையும், சிந்தையிற் களிப்போடு போரிடாமையும் நினக்கு வெளிப்படையாகப் புலப்பட்டிருக்கும். இப் பாண்டிநாடு நின் புகழ் உணராது நின்பால் பகை கொள்ளத் தகுமோ? கொற்றவர் பிழைக்காகக் குற்றமிலா மக்களை, அவர் மனநிலை முற்ற அறிந்த பின்னரும், நீ காய்தல் கருணையோ ? ஆகவே, எஞ்சிய எம் வீரர் மாளா வகையாக 'நீ ஆள்க' எனக் கைகுவிப்பதே எம் செயல். அல்லாவிடில், வீணே மாளும் மாந்தர் தொகுதியும் எண்ணப் படுமோ ? என்னுள்ளம் அதனை எண்ணி எரிகிறது. எம் மன்னனுக்கு இவ்வாய்மை யைச் சாற்றியும் அவன் கேளான்; அறிவிலன் ; அன்பிலன் ; பிறர்துயர் அறியா வெறியன் ; தன்னை அண்டிய உயிர்கள் அனைத்தையும் போரில் நின் வாளுக்கு இரையாக்குவதை விரதமாகக் கொண்டான். இப்பித்தனால் நாடெல்லாம் சுடுகாடாய்விடும். இப் பெரும் பாவமும் பழியும் அஞ்சினேன்; அடியேனுக்கு ஒழி மொழி தருவாயாகில், ஒருவர்க்கும் துயரின்றி அரசனும் அரணும் அரை நொடிப் பொழுதில் உன் கரதலம் ஆக்குவேன். மக்கள் யாவரும் நின் குடைக்கீழ் ஒதுங்குவர் ; மதுரையும் நின் வயமாகும். நீ வேண்டிய வேப்ப மாலையையும், தாமிரபன்னி நீரையும், எது வேண்டினும் அதனையும் என் சிரமேற்கொண்டு உன் திருவடியில் தாழ்ந்து அடிமையாவேன். அரசனது அந்தப் புரம் சேர ஒருவருமறியாச் சுருங்கை உள்ளது. அவ் வழியே சென்றிடில் பாண்டியனையும் சிறை செய்யலாம்" என்றான்.

கை விலங்கு

குடிலனது கொடிய வஞ்சகமொழி கேட்ட புருடோத்தமன் தன் வீரர்களை நோக்கிக் கைத்தளை காற்றளை கொண்டுவரப் பணிக்கிருன்; 'சீவகனைப் பிணிக்க வருவன இவை' என எண்ணி மகிழும் குடிலனுக்கு அவை பூட்டப்படுகின்றன. அவனைச் சேரன் சுருங்கை வழியைக் காட்ட ஏவுகிருன்; வீரர் பதின்மர் இருபுறமும் சூழ்ந்துவரக் குடிலனை அவ்வழியே நடத்திச் செல்கிருன். 'எத்திறம் பிழைத்தோடக் கருதினும் சித்திரவதையே' எனச் சேரன் எச்சரிக்கிருன்.

எங்கேகினும் நம் காரியமே !

கடிமண முகூர்த்த வேளை அணுகுகிறது. குடிலன் இன்னும் வாராமை கண்டு சீவகன் அவன் "எங்கேகினும், நம் காரியமே எப்போதும் கருத்தாம். இவ்வாறு உழைப்போர் இவ்வுலகில் யாருமிலர்," என்று ஐயமறத் துணிந்துரைக்கின்ருன். சுருங்கை வாயிலைப்புருடோத்தமன் வந்தெய்துகிருன்; திரைக்குப் பின் மறைய நிற்கிருன்; மன்னன் மணவினைக்கு வந்த அவை மாந்தரோடு பேசும் குரல் நன்கு செவிப்படுகிறது. குடிலனுடைய மெய்ச் சேவகத் தொண்டை வியந்து பேசி, அவன் புதல்வனையும் பலபடப் புகழ்கிருன் சீவகன்; மகளை மணம் செய்வித்து முனிவர்பால் சேமமாக விடுக்க விருக்கும் தன் முடிவையும் விளக்குகிருன். மனோன்மணியின் வேண்டுகோளால் விடுதலை செய்யப்பட்டிருந்த நாராயணன் மன்னவன் ஏவற்படி அரசிளங்குமரியையழைத்துவர, அவள் மன்றல் திரைக்குப் பின் நிற்கிருள். வாணி பாட்டிசைக்கிருள்.

இன்னமுங்காப்பான் !

மனோன்மணியை மாலையோடு வரப் பணிக்கிறார் சுந்தர முனிவர் ; 'இறைவன் நின் உள்ளம் உணர்வன். உன்னன்பு உண்மையாயின், இன்னமும் காப்பான்' என்று முனிவர் ஆசிமொழிகிறார். பலதேவனை நோக்கி மணமகள் நடக்கிறாள். இந்நிலையில் புருடோத்தமன் திரை மறைவினின்று வெளிப்படுகிறான். மனோன்மணி அவனைக் காண்கிறாள். அவன் நிற்குமிடம் விரைகிறாள். மணமாலை சேரன் கழுத்தை அணி செய்கிறது ! சேரமன்னனைத் தாக்கப் பாண்டிய மன்னன் விரைந்தான்; மெய்காப்பாளர்கள் சேரனைச் சேர்கின்றனர். 'படையுடன் பாதகன் ! என்று அனைவரும் ஆர்ப்பவே, 'பாதகன் ஈங்குளன்' என மெய்காப்பாளன் அருள் வரதன் என்பவன் குடிலனைச் சுட்டிக்காட்டுகிறான் !

வஞ்சனை வீழ்ச்சி :

குடிலனது வஞ்சநெஞ்சத்தை எல்லார் முன்னிலையிலும் புருடோத்தமன் புலப்படுத்தினான்; கனவில் தன்னுயிர் அவாவிய அருமருந்தை நனவிற்கண்டு நண்ணிய பேற்றை எண்ணிச்சொல்லி-வியக்கிறான். 'பாவி' யெனக் குடிலனை யாவரும் பழிதூற்றுகின்றனர். சுந்தர முனிவர் மணமக்களை வாழ்த்துகிறார். குடிலனது வஞ்ச வீழ்ச்சி, வாய்மை மணவினையில் இன்பத்தோடு முடிகிறது.

கட்டுரைப் பயிற்சி

பின் வரும் பொருள்களில் கட்டுரை வரைந்து பழகுக :

1. மன்னன் தசரதனின் மந்திராலோசனை.
2. கூனியின் சூழ்ச்சியும், கைகேயியின் மனமாற்றமும்.
3. கூனியின் கொடுமையைக் கம்பன் காட்டிய திறம்.
4. சகுனியின் சூழ்ச்சியும், விளைவும்.
5. துரியோதனனும், தீயோர் கூட்டுறவும்.
6. சூது வினையால் விளைந்த துயரம்.
7. பாண்டவரின் பண்பாடு.
8. சச்சந்தனின் குறைவும், நிறைவும்.
9. கட்டியங்காரனின் வஞ்சகச் செயல்கள்.
10. சீவகனுடைய ஆண்மையைக் காட்டும் சில நிகழ்ச்சிகள்.
11. சீவகனுடைய சிறந்த வெற்றிகள்.
12. கட்டியங்காரனின் சூழ்ச்சிகளும், சீவகன் அவற்றினின்று தப்பியதும்.
13. கட்டியங்காரனின் கபட நினைவும், முடிவும்.
14. பாண்டிய மன்னரின் செங்கோன்மை.
15. பொற் கொல்லன் சூழ்வினையும் கோவலன் கொலையுண்ணலும்.
16. ஊழ்வினையும் கோவலன் கொலை நிகழ்ச்சியும்.
17. குடிலன் அரசுபெற எண்ணி ஆற்றிய பல சூழ்ச்சிகள்.
18. சீவக வழுதி கள்ளம் அறியாவெள்ளை உள்ளத்தான்.
19. மனோன்மணியின் உண்மைக் காதல்.
20. சீவக வழுதிக்கு உதவிய உத்தமர்கள்.